103

# கிராம ஊழியன்

மலர் 14] 1969 [இதழ் 8

மே

JL
Y31m211,N55
N69,14.8
160166



தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட வந்திருந்த
தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களை மீனம்பாக்கம்
விமான நிலையத்தில் மேதகு தமிழக ஆளுநரும்,
மாண்புமிகு முதலமைச்சரும், வரவேற்றல். (17—4—1969)



தீயணைப்புப் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட
சேரணித் தொண்டர்களுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்
அவர்கள் சான்றிதழ்கள் வழங்குதல். (17—4—69)





GAZETTED UNIT
27/9.5/69
OFFICE

# கிராம நலம்

தமிழ் நாடு அரசின் கிராம வளர்ச்சி &
உள்ளாட்சித் துறைத் திங்கள் இதழ்

கதிர் 14] மே 1969 [நெல் 8

## உள்ளே..


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | உழைப்பின் வெற்றி | 1 |
| 2. | உழைப்புத் தெய்வங்களின் திருவிழா | 3 |
| 3. | அஞ்சுகத்திலே கலைஞர், கவிஞர், முதலமைச்சர் | 7 |
| 4. | பசுமைப் புரட்சி | 14 |
| 5. | காதலன் நடை | 17 |
| 6. | கடமையும் உரிமையும் | 19 |
| 7. | அவனைத்தான் வணங்கவேண்டும் | 23 |
| 8. | பெருமிதம் பிறந்தது | 24 |
| 9. | தேசியப் பேரணியில் சீரணி கொள் ஊரணி | 26 |
| 10. | கடல் கடந்த நாடுகளில் தொழிலாளர்கள் | 35 |
| 11. | மே நாள் | 38 |
| 12. | வீட்டு நலமே நாட்டு நலம் | 47 |
| 13. | உற்பத்தித் திறன் பெருகிட | 50 |
| 14. | ஊரை உருவாக்குவோம் | 53 |
| 15. | அநாதை | 57 |
| 16. | கோதுமைச் சிற்றுண்டிகள் | 63 |
| 17. | காட்சியும் கருத்தும் | 67 |
| 18. | தொழிற் பெருக்கமும் தொழிலாளர் நல்லுறவும் | 71 |


இணைக்குநர் : திரு. இ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்.
கிராம வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலர்

வெளியிடுபவர் : திரு. ஜி. திருமால், ஐ.ஏ.எஸ்.
கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்.

பொதுத்தொடர்பதிகாரி: திரு. சி. வேங்கடசாமி, எம்.ஏ.

ஆசிரியர் : திரு. சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.

வளம் பெருக்கும் தொழிலாளர் நலம் பெற்ருேங்க வேண்டுமென்ற விருப்பினை வெளிப்படுத்தும் முறையில் 'கிராம நலத்'தின் மே இதழ் 'தொழிலாளர் இதழாகச் சிறக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணுநிதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி, டாக்டர் மு. வரதராசனர், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், அருண்மொழிச் செல்வர் கி.வா. ஜகந்நாதன், கிராம வளர்ச்சி & உள்ளாட்சித்துறைச் செயலர் திரு. இ. சி. பி. பிரபாகர் ஆகியோரின் கட்டுரைகளும்,

ஈரோடு கவிஞர் தமிழன்பன், கவிஞர் பொன்னடியான், கலைமணி சலகை ப. கண்ணன் ஆகியோரின் கவிதைகளும், தொழிலாளர் தலைவர்கள் திரு. காட்டூர் கோபால், சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. ஜி. பராங்குசம் ஆகியோரின் கருத்துரைகளும், கவிஞர் ஆனந்தம் அவர்கள் முதலமைச்சரைப்பற்றி எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையும் இதழைப் பொலிவுப்படுத்துகின்றன.

கிராமியச் சூழ்நிலை அமைந்த கதை ஒன்றினைத் திரு சோம. மகாதேவன் எழுதியுள்ளார்.

திரு. இரா. சனர்த்தனம் அவர்கள் அயல் நாடுகளில் தாம் கண்ட தொழிலாளர் நிலை குறித்து எழுதியுள்ளார்.

வி. ஸ. காண்டேகரின் மராட்டிய மொழிக் கதை ஒன்றினைத் திரு. கா. ஸ்ரீ ஸ்ரீ. அவர்களும், கிராம முன்னேற்றம்பற்றி வங்கக் கவிஞர் தாகூர் எழுதிய கட்டுரை ஒன்றைத் திரு. தா. ந. சேனபதி அவர்களும் தமிழில் தந்துள்ளார்கள்.

கட்டுரை, கதை, கவிதை எழுதி உதவியவர்கட்கு உளமார்ந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிருேம்.

கிராம நலத்தின் ஜூன் இதழ் கல்வி இதழாகக் கவினுற வெளிவரும்.

மே திங்களில் இரு சோக நிகழ்ச்சிகள் நாட்டு மக்களின் கண்களைக் குளமாக்கி விட்டன. இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு டாக்டர் ஜாகீர் உசேன் அவர்களும், தமிழ்நாடு உணவு - விவசாய அமைச்சர் மாண்புமிகு ஏ. கோவிந்தசாமி அவர்களும் மீளாப் பிரிவெய்தினர். அவர்கள் வகுத்துத்தந்த வழியில் நடந்து செல்வதே அவர்கட்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

---

''பஞ்சாயத்து ராஜ்'' ''இன்டென்சிவ் அக்ரிகல்ச்சர்'' போன்ற இதழ்களிலிருந்து இடம் பெறுபவை.

பக்கங்கள் : 21, 22, 31, 32, 33, 34, 44, 45, 49. 57

Articles reproduced from 'Panchayat Raj', 'Intensive Agriculture' etc., Pages : 21, 22, 31, 32, 33, 34, 44, 45, 49, 57.






'மே' நாள்.

உதவாதினி ஒரு தாமதம் என்று விழித்தெழுந்து, நெற்றியில் வடியும் வியர்வை நீரினை வழித்தெறிந்து, குள்ளநரிச் செயல்புரியும் முதலாளித்துவ மதயானைக்கு அங்குசம் தயாரித்ததைக் குறிக்கும் உலகப் பெருவிழா, தொழிலாளர் திருவிழா!

இருபத்தி நான்கு மணி நேரத்தில், பதினெட்டு மணி நேரமும் இருபது மணி நேரமும் மெழுகாய் உருகி, புழுவாய்த் துடித்துக் கால்வயிறு கழுவி வந்த கதியற்றவன், மனிதருள் நானும் ஒருவன்; மண்ணன்று—என்னும் மகோன்னதத் தத்துவத்திற்காகப் போராடி, சிலரைத் தூக்கு மேடைக்கும் துப்பாக்கி ரவைகளுக்கும் பலிகொடுத்து, நலிவு தீரப்பெற்றதனுல் முகத்திலே பொலிவு திகழும் பொன்னுள்!

இப் பொன்னுளின் புனிதத்தை மதித்துத் தமிழ்நாட்டில் மேநாளுக்கு விடுமுறை அளித்தார் பேரறிஞர் அண்ணு.

உழைப்பின் பெருமையினை-தொழிலாளர் சக்தியின் ஆற்றலினை நன்குணர்ந்தது, இன்றைய ஆட்சி!

ஒரு மோதிரத்துக்குள் நுழைந்து செல்லும் விதத்திலே, சிலந்தி வலையைவிட, பாம்புச் சட்டையைவிட—மெல்லிய—மிக மெல்லிய ஆடைகளை அகிலத்தின் சந்தைகளுக்கெல்லாம் அனுப்பியவர்கள்; அகில் — தேக்கு — மிளகின் சொந்தக்காரர்கள் — என்ற வரலாறு நமக்குண்டு. உழைப்பிலே உலகத்தின் கவனத்தைக் கவர்ந்தவர்கள் நாம்.

இன்றும் உழைப்புக்கு நம்மிடையே குறைவில்லை. உழைப்புக்குரிய மதிப்பு அளிப்பதில் 'தயக்கம்', 'தாமதம்', 'தடுமாற்றம்' இதுவரை இருந்தது.

செங்கதிருக்கு முன்னெழுகின்ற சேவலுக்கு முன்னெழுந்து, கழனி சென்று, வியர்வை சிந்தி, உழைப்பை வடித்தெடுத்து உணவுப் பொருள் தருகின்ற ஏழை மகன் உரிய பயனை அடையத் 'தாமதம்' ஏற்பட்டால் மனங்குமுறுகிருன்.

தயக்கம், தாமதம், அவசரப்படாமை, நிதானம், ஆர்வத்தை அதிகப்படுத்தும் செய்கை ஆகியவற்றை அவ்வவ்வற்றிற்கேற்ற வேளையில் கடைப்பிடித்தால் நன்மை உண்டு, நனிமிகு சுவையுமுண்டு.

கட்டிலில் அமர்ந்திருக்கும் காதலன் வட்டிலில் பாலுணவு ஏந்தி வரும் பாவையைத் தொட்டிழுக்கும் போது அவள் காட்டும் தயக்கம், ஊடலின் பாற்பட்டது! உவகையை அதிகமாக்குவது! உளத்திற்கோர் நல்விருந்து! காதல் களத்திற்கோர் ஒத்திகை! இங்கே தயக்கம் சுவைக்கும்! வரவேற்கப்படும்.




அதே காதலன், ஒரு நாள் உணவருந்தும் நேரம் தொண்டையிலே பண்டம் அடைத்து, விக்கல் மேவி, உயிருக்கு மன்ருடும் வேளையில், அடுக்களையில் உள்ள ஆருயிர் நாயகியை அழைத்து, ''அவசரமாகத் தண்ணீர் கொண்டுவா'' என்ருல் அவள் அங்கிருந்தவாறே தயக்கம் காட்டினுல், அவனை நிரந்தர மயக்கமல்லவா சூழ்ந்துகொள்ளும்.

இந்த இரண்டாம் வகைத் தயக்

கத்தைத் தொழிலாளர்கள் மீது — உழைப்பாளர்கள் மீது காட்டும் கொள்கை சமுதாயத்திலிருந்து மாற வேண்டும்.

'எட்டாத கனி—கிட்டாத பழம்; ஏறிச் செல்ல ஏணியுமில்லை—கடந்து செல்லத் தோணியுமில்லை —அதோ பார் அந்தக் கனி உனக்குத் தான்' என நடுத்திட்டிலே காய்த்துத் தொங்கும் பலாப் பழத்தைக் காட்டி இடையேயுள்ள நீரைக் கடக்க,நீந்தத் தெரியாதவனை இறக்கிவிட்ட கதை போல—''ஏழைத் தொழிலாளியே எதிர்காலம் உன்னுடையது. ஏற்றுக்கொள்!'' என்று வாயளவில் சொல்லி வந்தவர்களால் வந்துள்ள கொடுமைகள் ஏராளம்!

உழைப்பவன் உரிய இடத்தைப் பெற வேண்டும். உழைப்பை மதிக்கும் குணம் பெருக வேண்டும் என்ற கொள்கையுடன் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்கும் அரசு இன்று அமைந்துள்ளது. எனவே, பாட்டாளிகள் அகமகிழ்கிறார்கள்.

ஐந்தாண்டுத் திட்டம் இடையே நிறுத்தப்பட்டது. திட்ட வேலைகள் செயல்படவில்லை. மத்திய அரசின் அதிகாரக் குவிப்பு, டில்லியின் கொள்கைகளால் ஆலைத் தொழிலில் நெருக்கடி—வேலையில்லாத் திண்டாட்டம்——மக்கள் தொகைப் பெருக்கம்—இப்படிப் பல்வேறு சூழல்கள் தொழிலாளர்களுடைய நல்வாழ்வுக்கு இடையூறாக அமைந்துள்ளன. எனினும், காண விழையும் புதிய சமுதாயத்தை, சரிவற்ற சமுதாய அமைப்பை உருவாக்கியேதீருவோம்.

முயற்சி திருவினையாக்கும்!
உழைப்பு உயர்வைத் தரும்!
வியர்வை வீண் போனதில்லை!
கண்ணீர் சக்தி இழந்ததில்லை!
அறம் வென்றேயிருக்கிறது!
ஏழை தோற்றதில்லை!

என்பதின் அடையாளமே இன்றைய தமிழ்நாடு அரசும், ஆட்சி செலுத்துவோரும்!

வியர்வையின் வெற்றி உலகுக்குச் சொல்லும் பாடம்தான், வருங்கால வரலாற்றுப் படமாகும்!

நீங்கள் விதைக்கிறீர்கள்; மற்றொருவன் அறுக்கிறான். நீங்கள் செல்வத்தைத் தேடுகிறீர்கள்; இன்னொருவன் துய்க்கிறான். நீங்கள் நெய்யும் ஆடைகளை மற்றவர்கள் அணிகிறார்கள். நீங்கள் செய்யும் படைக்கலங்களை வேறொருவன் தாங்குகின்றான்.

விதையை விதையுங்கள் - ஆனால் எந்தக் கொடுங்கோலனையும் அறுக்க விடாதீர்கள். செல்வத்தைத் தேடுங்கள் - ஆனால் எந்த ஏமாற்றுக்காரனையும் அதை அனுபவிக்க விடாதீர்கள்; ஆடைகளை நெய்யுங்கள்-ஆனால் சோம்பேறிகள் அவற்றை அணிய விடாதீர்கள்! படைக்கலங்களைச் செய்யுங்கள் - ஆனால் அவற்றை உங்கள் தற்காப்புக்காகவே தாங்கி நில்லுங்கள்.

ஷெல்லி

# உழைப்புத் தெய்வங்களின் திருவிழா

'இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் தான் நான் விரும்புகின்ற ஆலயங்கள்' என்றும், 'அந்தத் தொழிற்சாலையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்தான் நான் வணங்குகின்ற தெய்வங்கள்' என்றும் எடுத்துச் சொல்லி வந்தார் மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா போற்றிய அந்தத் தெய்வங்களின் திருநாளே மே நாள்.

1886 ஆம் ஆண்டு, உலக வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய ஆண்டாகும். அந்த ஆண்டின் நாட்களிலேதான் அமெரிக்காவில் தொழிலாளர்களுடைய நலஉரிமைப் புரட்சி வேகமாகக் கிளர்ந்தெழுந்தது. அக் கிளர்ச்சியில் அந் நாட்டுத் தொழிலாளர்கள் கடுமையாக நசுக்கப் பட்டார்கள்; ஒடுக்கப்பட்டார்கள். அதைப் பார்த்த மற்றைய உலக நாட்டுத் தொழிலாளர்கள் அனைவரும் கிளர்ந்தெழுந்து அந்த நாளிலிருந்தே தங்களுடைய உரிமைகளுக்காகக் கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் நடத்தியதோடு அவைகளிலே மாறிமாறி, வெற்றியும் தோல்வியும் காண்கின்ற நிலையிலிருந்தனர். 1886 ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டிலே நடைபெற்ற புரட்சியினுடைய விளைவுதான் 1917ஆம் ஆண்டில் ருஷிய நாட்டிலே ஏற்பட்ட அக்டோபர் புரட்சி ஆகும்.

ருஷிய நாட்டிலே 1917ஆம் ஆண்டில் லெனினது தலைமையில் நடந்த மகத்தான மக்கள் போராட்டத்திற்கு - தொழிலாளர் புரட்சிக்குத் தொட்டிலாக அமைந்தது - காரணமாக விளங்கியது அமெரிக்காவில் 1886இல் நடைபெற்ற மேதினப் புரட்சியே ஆகும். 1917இல் ருஷியாவிலே நடைபெற்ற புரட்சியானது நம் நாட்டிலே ஏற்படுவதற்கு 1967 ஆம் ஆண்டுதான் இயன்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

1947 ஆம் ஆண்டிலேயே நம் நாட்டிற்கு அரசியல் விடுதலை கிடைத்தது. எனினும் அந்த விடுதலையைத் தொழிலாளர்களுக்குக் கிடைத்த விடுதலை என்று சொல்லி விடமுடியாது. வெறும் விடுதலை என்கிற சொல்லும், சனநாயக நாட்டிலே வாழ்கிறோம் என்ற சொற்றொடரும் மட்டுமே நமக்குப் போதுமானவை அல்ல. உண்மையான விடுதலை நமக்குத் தேவை என்று கருதினோம்: அதற்குப் பல்வேறு முறை



களிலே நாம் போராட்டங்களை நடத்தியும் வந்தோம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் கடந்த 30 ஆண்டு காலமாக இரவும் பகலும் ஒன்றெனக் கருதி அமைதியான போராட்டத்தை நடத்தி, ஒட்டு முறையின் மூலமாகத் தொழிலாளர்களுடைய நலத்துக்கான வெற்றியைப் பெறுகின்ற முயற்சியிலே தன்னை ஈடுபடுத்தினார்கள். அதனால் ஏற்பட்ட புரட்சிதான் 1967இல் நடந்த புரட்சியாகும். அந்தப் புரட்சியின் வெற்றியாகத் திராவிட முன்னேற்றக்கழக அரசு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அமைந்தது. இந்திய உப கண்டத்திலேயே, உள்ளபடியே தொழிலாளர்கள் நலம் காணத்தக்க வகையில் தொழிலாளர் புரட்சி வெற்றி பெற்றிருக்கிறதென்றால் அது 1967ஆம் ஆண்டிலேதான்.

அந்தப் புரட்சிக்குத் தலைமை தாங்கிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட தலைவர் பேரறிஞர் அண்ணா ஆவார்கள்! 1917ஆம் ஆண்டு ருஷிய நாட்டில் ஏற்பட்ட புரட்சிக்குத் தலைமை தாங்கியவர் லெனின் ஆவார்கள். 1967-ஆம் ஆண்டில் இந்த நாட்டினுடைய லெனினாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்து தொழிலாளர்களுடைய வெற்றிக்காக உழைத்து ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்கள்.

தொழிலாளி என்ற சொல்லுக்கு இன்னும் இந்த நாட்டிலே முழுமையான விளக்கம் கிடைத்ததாகத் தெரியவில்லை. தொழில் சங்கத்தினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களானாலும் சரி, தொழிலாளர்களானாலும் சரி, ஏதோ ஒரு சில குறிப்பிட்ட ஆலைகளிலே வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும்தான் இந்த நாட்டிலே தொழிலாளர்கள் என்று தங்களைக் கருதிக்கொண்டு இருக்கின்ற சூழ்நிலையும், அந்தத் தொழிலாளர்கள் மட்டுமேதான் தொழிலாளி வர்க்கம் என்ற ஒரு நிலையும், நாட்டிலே தெரிந்தோ, தெரியாமலோ இருந்து வருகிற நிலைமையைப் பார்க்கிறோம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அத்தனை பேரும்-நூற்றுக்கு 98 சதவிகிதத்தினர் - தொழிலாளர்களேயாகும்.

தொழிலாளி என்ற சொல் ஏதோ ஆலையிலே வேலைசெய்கிற அந்தத் தொழிலாளியை மட்டும் குறிப்பதல்ல. காலையிலே இருந்து இரவு வரை கழனியிலே பாடுபடுகின்றானே உழவன், அவனும் தொழிலாளிதான். காலையிலே பள்ளிக்குச் சென்று மாலையிலே பள்ளி முடிகின்ற வரையில் அறிவுக் கண்களைத் திறக்கின்ற ஆசிரியர் ஆற்றுகின்ற பணியும் தொழிலாளி பணிதான். இந் நாட்டில் பல்வேறு துறைகளிலே பல்வேறு நிலைகளிலே நின்று பல்வகைப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் தங்களுடைய கடமைகளைச் செய்து வருகிறார்கள். அமைச்சராகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் நாங்களும் அமைச்சுத் தொழில் செய்கின்ற தொழிலாளர்கள் தாம். ஆக அந்த அளவுக்கு இந்த நாட்டிலே இருக்கக் கூடிய அத்தனை பேரும் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். அவரவர்கள் ஈடுபட்டிருக்கக்கூடிய துறையிலே வேண்டுமானால் மாறுபாடுகள் இருக்கக்கூடும்.

இவ்வாறாகப் பல்வேறு வகையான தொழிலாளர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களுடைய நிலை எப்படி இருக்க வேண்டுமென்று சொன்னால், ஆசிரியராகிய தொழிலாளிக்குத் தான் தொழில் செய்வதானது இந்த நாட்டு மக்களுடைய அறிவுக்கண்களைத் திறப்பதற்குப் பயன்படுகின்ற கடமை உணர்வோடு செய்யப்படுகின்ற காரியம் என்கிற உணர்வு இருக்க வேண்டும்; ஆலையிலே வேலை செய்கின்ற தொழிலாளிக்கு இந்த நாட்டுக்குத் தன்னாலான உற்பத்தியைச் செய்து கொடுத்து, இந்த நாட்டினுடைய வறுமைத் தீயைப் போக்க வேண்டும் என்ற உணர்வு கொண்டதாக அமையவேண்டும். அமைச்சர் என்கிற தொழிலாளிக்குத் தன்னுடைய நாட்டு மக்களுக்குத் தன்னாலான காரியங்களைச்செய்து, தன் நாட்டிலே இருக்கக்கூடிய நான்கு கோடி மக்களுடைய வாழ்க்கையில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்ற முயற்சிக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு பிறக்க



வேண்டும். இப்படிப்பட்ட உணர்வு இல்லாத நேரத்திலேதான், தன்னுடைய சுய வாழ்வுக்குத் தான் பெற்றிருக்கக் கூடிய பதவியைப் பயன்படுத்துகிற நேரத்திலேதான் போராட்டங்கள் நேரிடுகின்றன.

தொழிற்சாலையில் மூலதனம் போட்டு இருக்கக்கூடிய முதலாளிகள் மூலதனமானது தம்முடைய வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல், தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்கும், இந்த நாட்டினுடைய வாழ்க்கைக்கும் பயன்படத் தக்கது என்ற பொது எண்ணம் கொண்டவராக இருந்திருப்பாரேயானால் தொழிலாளர்களுடைய வாழ்வில் சிக்கல் ஏற்பட்டிருக்கத் தேவையே இல்லை; தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் வறுமைத் தீ அண்டவேண்டிய அவசியமும் நேரிட்டிராது. ஆனால் கிடைப்பது தம்முடைய இலாபத்திற்குத்தான் என்ற உணர்வு அவர்களுக்கு வளர வளர, உற்பத்தி செய்து கொடுக்கக்கூடிய தொழிலாளி, தனக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான பங்கு கிடைக்கவில்லை என்கிற அந்தச் சூழ்நிலையிலே வெறுப்புக் கொள்ளும்போது போராட்டங்கள் நடைபெறுகின்ற நிலை ஏற்பட்டு விடுகின்றது.

தொழிலாளர் போராட்டங்கள் அடையவேண்டிய முழு வெற்றியை இன்னும் அடைந்ததாக நாம் கூறி விடமுடியாது. இதற்குக் காரணம் நாட்டினுடைய பொருளாதாரச் சூழ்நிலை, நாட்டினுடைய சமுதாயச் சூழ்நிலை, அரசியல் சூழ்நிலை ஆகியவைகள் மட்டுமல்ல. தொழிலாளர்கள் மத்தியிலேகூட இன்னும் ஒன்றுபட்ட உணர்வு முழுமையாக ஏற்படவில்லை. அப்படிப்பட்ட உணர்வு ஏற்படுமானால், இந்த நாட்டினுடைய எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும். வெறும் போராட்டங்கள் மூலமாக மட்டுமே நாம் அடையவேண்டிய காரியங்களை அடைந்து விடமுடியாது. அத்தனை பேரும் ஒன்றுபட்டு நாட்டிலே திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்துகிற உணர்வு நமக்கு ஏற்படவேண்டும். அத்தகைய உணர்வு வருகின்ற நேரத்திலேதான் காரியங்கள் ஒழுங்காக நடைபெறமுடியும்.

1917ஆம் ஆண்டில், ருஷிய நாட்டிலே, லெனினுடைய தலைமையில் மகத்தான ஒரு புரட்சியை நடத்தி அந்த நாடு விடுதலை பெற்றது. 50 ஆண்டுக் காலத்தில் விஞ்ஞானத் துறையிலே, பொருளாதாரத் துறையிலே, கல்வித்துறையிலே, தொழில் துறையிலே, வேளாண்மைத் துறையிலே மற்றுமுள்ள எல்லாத் துறைகளிலுமே உலக நாடுகள் அத்தனையையும் மிஞ்சுகின்ற அளவுக்கு அந்நாடு வெற்றியைக் கண்டிருக்கிறது. அதற்குக் காரணம் அந்த நாட்டிலே அமைக்கப்பட்ட அரசு ஆரம்ப காலத்திலேயே தொழிலாளர்களுடைய அரசாக அமைந்ததேயாம். தொழிலாளர்களுடைய வாழ்வுக்கான திட்டங்களைத் தீட்டி, அத்தொழிலாளர்களுடைய நல முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டதன் விளைவாகத்தான் அங்கே பெரும் மாற்றத்தைக் காண முடிந்திருக்கிறது. அங்கே இருக்கிற தொழிலாளர்களும், குடிமக்களும் இது நம்முடைய அரசு என்ற உணர்வைக் கொண்டார்கள்; நான் என்ற உணர்வு அறுபட்டு நாம் என்ற உணர்வு அந்த நாட்டுத் தொழிலாளர்களுக்கும் குடிமக்களுக்கும் ஏற்பட்டது. அதன் விளைவாகக் கடுமையாக உழைத்தார்கள். பயங்கரமான விபத்துக்களுக்கெல்லாம் ஆளாக்கப்பட்ட தொழிற்சாலைகள் ஓராண்டுக் காலத்தில் மறுபடியும் தலை நிமிர்ந்து நிற்கின்ற அந்த நிலையை உண்டாக்கினார்கள்.

அங்கு ஒரு டிராக்டர் தொழிற்சாலைக்குச் சென்று இருந்தேன்; ஐந்து நிமிடங்களுக்கு ஒரு டிராக்டர் உற்பத்தி செய்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 68 ஆயிரம் டிராக்டர்கள் தொழிற்சாலைகளிலிருந்து இப்பொழுது வெளிவருகின்றன. நூறாவது ஆண்டு விழாவும், புரட்சியின் 50ஆவது ஆண்டு விழாவும் நடைபெறுகிற இந்த ஆண்டில் அவர்கள் அதை மேலும் அதிகமாக்கி 82 ஆயிரமாக உயர்த்த வேண்டும் என்று அங்கிருக்கிற தொழிலாளி பாடுபடுகிறார். அங்குள்ள தொழிலாளிக்கு எத்தகைய போராட்ட உணர்வும் இல்லை; மாறாக உற்பத்தியை அதிகமாக்கவேண்டும் என்ற உணர்வுதான் உள்ளது. காரணம் அவனுடைய வாழ்க்கையில் வறுமை இல்லை. அவ

னுக்குத் தேவையான எல்லாவற்றையும் அரசே கவனித்துக்கொள்கிறது. அப்படிக் கவனித்துக் கொள்வதற்குக் காரணம், ஆரம்ப காலத்தில் அங்கே ஏற்பட்டிருந்த அரசு, தொழிலாளர் அரசாக இருந்ததேயாகும்.

ஆனால் இந்த நாட்டினுடைய துர்ப்பாக்கியம், விடுதலை பெற்று 20ஆண்டு காலமாக, தொழிலாளர் அரசு அமைய முடியாது போயிற்று. மேட்டுக்குடி மக்களுடைய அரசு அமைந்து இருந்த காரணத்தினால், நாம் எதிர்பார்த்த பயனைப் பெறமுடியாது போயிற்று. ஆயினும் தொழிலாளர் அரசு 1967ஆம் ஆண்டில், இந்திய உபகண்டத்தின் தென்கோடியில், உலகத்திற்கே வழிகாட்டிய நாகரிகம் மிகுந்த தமிழ்நாட்டில், காஞ்சி தந்த கருவூலம், 20ஆவது நூற்றாண்டின் இணையற்ற வள்ளுவர், இந்த நாட்டினுடைய லெனின் என்று பாராட்டப்படுகிற பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே ஏற்பட்டது. இரண்டு ஆண்டுக் காலத்தில் உலகமே பாராட்டத்தக்க, வியக்கத்தக்க மாறுதல்களைத் தொழிலாளருடைய நலத்திலும் சரி, விவசாயிகளுடைய நலத்திலும் சரி, இந்த அரசு செய்து முடித்திருக்கிறது. அதற்குக் காரணம், இது தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட, ஏழை எளிய பாட்டாளி மக்களாலே அமைக்கப்பட்ட ஓர் அரசு என்பதே.

கார்ல் மார்க்சினுடைய தத்துவங்கள் ருஷிய நாட்டிலே பல்வேறு மாறுபாடுகளுக்கு ஆளாகியிருக்கிறது. தொழிலாளர்கள் அதை உணரவேண்டும். நாட்டுக்கு நாடு, இந்தத் தத்துவம், அமுல்படுத்தப்படுகின்ற முறை வேறுபட்டுத் தீரவேண்டும். நம்முடைய நாட்டினுடைய இயற்கைச் சூழ்நிலைகள், நம் நாட்டினுடைய கலை, கலாச்சாரப் பண்புகள், நமக்கு இருக்கக்கூடிய மக்கள் தொகையினுடைய பெருக்கம் ஆகிய இவைகளின் அடிப்படைகளை கணக்கிலே கொண்டுதான் இங்கே நாம் அவைகளை அமுல் படுத்தித் தீரவேண்டும். மக்கள் தொகை பெருகக்கூடிய நம் நாட்டிலே நடைபெறக்கூடிய நிலையையும், மக்கள் பெருக்கம் குறைவாக உள்ள நாடுகளில் இருக்கிற நிலையையும் ஒப்பிட முடியாது. சில இடங்களில் மக்கள் கிடைக்காத காரணத்தால், வேலைக்குத் தேவையான ஆள் இல்லாத காரணத்தால், இயந்திரப் பெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு, இயந்திரங்களின் மூலமாக மனிதச் சக்தியைக் குறைத்து உற்பத்தியை அதிகப்படுத்துகிற நிலை இன்றைக்கு இருக்கிறது.

ஆனால் இந்த நாட்டிலே அப்படிப்பட்ட நிலையா? ஆண்டுக்கு ஆண்டு ஒரு புதிய ஆஸ்திரேலியா இந்நாட்டில் தோன்றிக் கொண்டிருக்கிற ஒரு காட்சியைப் பார்க்கிறோம். ஒரு வினாடிக்கு $1\frac{1}{2}$ குழந்தைகள் பிறப்பதாகக் கணக்குச் சொல்கிறார்கள். ஒருமணி நேரத்திற்கு 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் இந்திய உபகண்டத்திலே பிறந்து கொண்டிருக்கிற நிலையைப் பார்க்கிறோம். ஆக இப்படிப்பட்ட மக்கள் பெருக்கம் மிகுந்து இருக்கக்கூடிய நாட்டில் இயந்திரப் பெருக்கத்தின் மூலமாகவே ஒரு புரட்சி ஏற்படுத்த வேண்டும் என்று நாம் திடீரென்று முடிவுக்கு வந்து விடுவது என்பது இயலாத காரியமாகும்.

இன்றைய அரசியலில், அத்தனை பேருக்கும் வாழ்வு அளித்தாக வேண்டும்; வேலை கொடுத்தாக வேண்டும்; அதற்கு ஏற்ற வகையில், நம்முடைய திட்டங்களைத் தீட்டியாகவேண்டும். நாம் குடியரசுத் தத்துவத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அக் குடியரசு அமைப்பு முறைகள் வழியே நின்று செயலாற்ற வேண்டிய கடமையும் இருக்கிறது. அக் கடமை வழி இயங்கி உழைப்பைத் தெய்வமாக்கி உயர்வடைவோமாக!

[1-5-59 அன்று சென்னைக் கடற்கரையில் அண்ணா சதுக்கத்தில் நடைபெற்ற மேதின விழாப் பேச்சின் ஒரு பகுதி இது.]

---

## அஞ்சுகத்திலே..

# கலைஞர் கலைஞர் முதலமைச்சர்



['கிராம நலத்தில்' ஒவ்வோர் இதழிலும் தமிழ்நாடு அமைச்சர் ஒருவரைப்பற்றி அவரை நன்கறிந்த ஒருவர் எழுதுவதை வெளியிடுவது என்ற எண்ணப்படி முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்களைப்பற்றிய கட்டுரையோடு தொடங்கப்பெறும் இவ்வரிசை இதழ்தோறும் வளரும். ---ஆசிரியர்]

கவிஞர் ஆனந்தம்

சென்னை எழும்பூர் இரயில் நிலையம்; காலை 7 மணியளவில் தென்புறத்து மாவட்டம் ஒன்றைச் சேர்ந்த சிற்றூரிலிருந்து ஒரு நண்பர் வந்து இறங்கி வெளியில் வருகின்றார். வரிசையில் முதலில் நிற்கும் 'டாக்சி' ஒன்றில் ஏறி அமர்ந்து, கதவை மூடியதும் வண்டி புறப்படுகிறது. டிரைவர் 'எங்கே செல்ல வேண்டும்?' என்ற கேள்விக் குறியோடு பயணியைத் திரும்பிப் பார்க்கிறார். 'கோபாலபுரம்' என்கிறார். உடனே 'கலைஞர் வீட்டுக்குத்தானே?' என்று கேட்டுக்கொண்டே வண்டியை விரைவாக ஓட்டுகின்றார் டிரைவர்.

பத்து நிமிடங்களில் தெற்குக் கோபாலபுரம் நான்காவது தெருவின் மேலக்கோடியில் வண்டி வந்து நிற்கிறது. டாக்சிக் கட்டணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு நண்பர் சுற்றுமுற்றும் பார்க்கிறார். வீட்டின் முன்புறச் சுவர்களின் விளிம்பில் ஒரு

புறம் 'மு. கருணாநிதி' என்றும், மறு புறம் 'அஞ்சுகம்' என்றும் கற்களில் எழுத்துகள் காணப்படுகின்றன. 'அதே வீடுதான்' ஆனால் முன்புறம் ஒரு கீற்றுக் கொட்டகை 'புதிதாகத் தெரிகிறது' என்று மனத்திற்குள் கூறிக்கொண்டே நண்பர் உள்ளே நுழைகிறார். சில காவல்துறையினர் நின்று கொண்டிருக்கிறார்கள். துப்பாக்கி ஏந்திய 'சென்ட்ரி' ஒருவர் விறைப்பாக நிற்கிறார். நண்பர் தயங்கியவாறு யாரைக்கேட்பது என எண்ணுவதற்குள் கணீரென்று ஒரு குரல் 'வாங்க, யாரைப் பார்க்கணும்?' என்று கேட்கிறது. குரலுக்குரியவர் சிறிய உருவமாய் ஒல்லியாய் எதிரில் நிற்கிறார். அவர் பெயர் செயல்மணி. வந்த நண்பர் 'முதலமைச்சரைப் பார்க்கவேண்டும்' என்று பதிலுரைக்கிறார். 'இப்படி வந்து உட்காருங்க, ஐயா குளித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று ஒரு நாற்காலியைக் காட்டிக்கொண்டே அவர் நகர்கிறார்.

வீட்டின் முன்புறக் கூடம், சுவர் முழுவதும் வண்ணவண்ணப் படங்கள், வாழ்த்து மடல்கள் கண்ணைக் கவருகின்றன. அண்ணா, வள்ளுவர், கலைஞரும் தாயாரும்—மற்றும் சில புகைப்படங்கள். இவருக்கு முன்பே அங்குச் சிலர் அமர்ந்திருக்கிறார்கள்.

மணி எட்டாகிறது. அங்கே பரபரப்பும் கூட்டமும் அதிகமாகிறது. கார்கள் வந்து வந்து தெருவை நிறைக்கின்றன. யார் யாரோ வந்து கொண்டேயிருக்கிறார்கள், அந்தக் கூடத்தின் மேற்குப் புறத்தில் சிறிய அறை ஒன்று பலகையால் தடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள்ளே இரண்டு மூன்றுபேர் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். தொலைபேசியில் பேசிக் கொண்டேயிருக்கிறார் ஒருவர்.

''அதோ சிவப்பாய், சுருண்டமுடியும் புன் சிரிப்புமாய் இருக்கிறாரே, அவர் யார்?'' என்று அருகிலிருப்பவரிடம் விசாரிக்கிறார் நமது நண்பர். ''அவர்தான் வைத்தியலிங்கம். முதலமைச்சரின் அந்தரங்கச் செயலாளர். அடுத்து இன்னொருவர் சற்றுக் குள்ளமாய்த் தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கிறாரே அவர் நீலகண்டன். இதோ வந்திருப்பவருக்கு என்ன செய்யவேண்டும் என விசாரிக்கிறாரே அவர் வெங்கட்ராமன். டைப் இயந்திரத்தில் ஏதோ அடித்துக்கொண்டிருக்கிறாரே அவர் சண்முகநாதன். இங்கே டெலிபிரிண்டர் இயந்திரத்திலுள்ள காகிதச் சுருளை வெட்டி எடுக்கிறாரே இவர் பெருமாள். அந்தரங்கச் செயலாளரிடம் அடக்கத்துடன் எதையோ கேட்கிறாரே அவர் இராமசாமி, இவர்கள் யாவரும் முதலமைச்சரின் தனி உதவியாளர்கள்.

படிக்கட்டின் ஓரமாய் மேலே கதவு திறக்கப்படுமா என்று பார்த்துக் கொண்டு நிற்கிறாரே அவர் முதலமைச்சரின் மெய்க்காவலர்; கோவிந்தசாமி என்று பெயர். அருகிலிருப்பவர் மெய்க்காவல் அதிகாரி, லயனல் சிங். இன்னொருவர் மீனாட்சி சுந்தரம்.'' இப்படியாக அறிமுகம் சொல்லி முடிந்ததும், வந்த நண்பர் ''அடடே இவர்களெல்லாரும் பார்வையிலும் தோற்றத்திலும் சுறுசுறுப்பிலுங்கூடக் கலைஞரைப் போலவேயிருக்கிறார்களே'' என்று கூறி வியக்கின்றார்.

'கிர்ர்ர்' என்று பஸ்ஸர் ஒலி ஒன்று கேட்கிறது. உடனே அங்கே அமைதியும், பரபரப்பும் அதிகமாகிறது. செயல்மணி கையில் ஒரு கத்தைத் துண்டுக் காகிதங்களுடன் மேலே ஓடுகின்றார். விரைவில் திரும்பி வந்து, ஒவ்வொருவராக மேலே செல்லுமாறு அனுப்பிவைக்கிறார்; நமது நண்பரின் முறை வருகிறது.

படிக்கட்டில் ஏறுகிறார். ''காலம் பொன்போன்றது; கடமை கண் போன்றது'' என்று ஈரடி வாசகங்கள்பொறிக்கப்பட்ட பலகை, எதிரில் மின்னுகிறது. இதன் உட்பொருளை எண்ணியவாறே சீக்கிரம் திரும்பிவிடுகிறேன் என்று மனத்திற்குள் சொல்லிக்கொள்கிறார். அந்தச் சிறிய கூடத்தில், எதிரில் வருவோரைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருக்கிறார் தமிழ் நாடு அரசு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி.

வந்த நண்பரை அவர் அடையாளம் தெரிந்து கொள்கிறார். மெல்லிய புன்சிரிப்பு ஒன்றை வரவழைக்கிறார். வணக்கம் செலுத்திய நண்பர், தான்வந்தவேலையைஎழுத்து மூலமாகத் தெரிவிக்கிறார். விரைவுடன் அதைப் படித்த முதலமைச்சர் அருகில் நிற்கும் வைத்தியலிங்கத்தி



## மறைந்த குடியரசுத் தலைவருக்கு 'கிராமநலத்தின்' அஞ்சலி



1. தமிழ் நாடு அரசின் சார்பில், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள், மறைந்த குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் உடல்மீது மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.



2. மறைந்த தலைவர் ஜாகீர் உசேனுக்குச் சென்னைக் கோட்டையில் இராணுவ அணிவகுப்புத் திடலில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.



டம் கொடுக்கிறார். வந்த நண்பர் ''என்னைத் தெரிகிறதல்லவா. மும்முனைப் போராட்டத்தில் திருச்சி சிறையில்...'' என்று இழுக்கிறார். ''நன்றாக நினைவிருக்கிறது. சென்று வாருங்கள்'' என்று கூறி முதலமைச்சர் வணக்கம் தெரிவித்து அவரை வழியனுப்பிவைக்கிறார். வந்த நண்பர் மனநிறைவோடு ஊர் திரும்புகிறார்.

ஏறத்தாழ இரண்டாண்டுகள் தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பெரும்புகழுடன் பணியாற்றிய பேரறிஞர் அண்ணா, நல்லிதயம் படைத்த நானிலத்தார் எல்லையிலாத் துயரில் ஏங்கியழத் தொல்லையிலாப் பெருவாழ்வை எய்தினார்கள். தேம்பித் திகைத்துச் செய்வகையறியாது திணறியது தமிழகம். ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்துக்கோ அளவிலாத் துயரும், ஈடு செய்யமுடியாத இழப்பும் ஏற்படினும் ஆற்றித் தீரவேண்டிய பெருங்கடமையும் முன்னின்றது. வழியுங் கண்ணீரைத் துடைத்தவாறே தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் 'அடுத்த தலைவராகக் கலைஞர் தான் இருக்கவேண்டும்' என்றார்கள். கடைசி வரை ஏற்க மறுத்தார் அன்றையப் பொதுப்பணி அமைச்சர். அன்புக் கட்டளை வலிவுமிக்கதாயிருந்தது. வேறு வழியின்றிச் சம்மதித்தார்; ஒரே மனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பணியாற்றத் தொடங்கினார் கலைஞர் மு. கருணாநிதி.

பிப்ரவரி 16ஆம் நாள் அண்ணா நினைவு நாளன்று தோளில் சார்த்திய கறுப்புக்கொடியுடன் அமைதி ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கிச் சென்றாரே, அப்போதே ''நான் முதலமைச்சராயினும், முப்பதாண்டுகட்கு முன்னர்த் திருவாரூர்த்தேரோடும் வீதிகளில், இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில், கழகக்கொடி ஏந்தி நடைபோட்ட தொண்டன்தான் என்பதை மறக்கவில்லை'' என நினைவுபடுத்தினார். புதுடெல்லியில் இருமுறை சென்று இந்தியத் தலைமையமைச்சருடனும் ஏனைய மத்திய அமைச்சர்களுடனும் நன்முறையில் உரையாடி, உறவாடித் தமிழ் நாடு அரசுக்கு நற்பெயரும் புகழும் ஏற்படுத்தினார். பொறுப்பேற்ற குறுகிய காலத்துக்குள் எதிர்பாராது நாட்டைத் தாக்கிய வறட்சி நிலையைக் கண்டு மருட்சியடையாது, மனங்கலங்காது, துயர் துடைப்புப் பணிகளைத் தீவிரமாக மேற்கொண்டு, ''வறட்சி நிலை அறவே நீங்கும் வரை அமைச்சர்கள் விருந்துகளில் கலந்து கொள்ளமாட்டார்கள்'' எனச் சூளுரைத்தார். அண்ணாவின் மறைவால் ஏற்பட்ட துயரம் அவர் முகத்தில் எப்போதும் தவழும் சிரிப்பினைப் பறித்துவிட்டது; பொறுப்பினை நிறைத்துவிட்டது.

1967ஆம்ஆண்டுதிராவிடமுன்னேற்றக் கழகம் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் கழகத்தின் பொதுச் செயலாளர் பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏழை எளிய மக்களின் பிரதிநிதியாக என்றென்றும் விளங்கிய அவர் நாட்டின் வறிய நிலையை மனத்துட்கொண்டு சில புரட்சிகரமான திட்டங்களை, கொள்கைகளை அறிவித்தார். படி அரிசித்திட்டம் அமுலுக்கு வரும் வரை அமைச்சர்கள் சம்பளம் பெற மாட்டார்கள் என்பது ஒன்று. அதற்குப் பிறகும் அரைச் சம்பளமான மாதம் ஐந்நூறு ரூபாய்தான் பெறுவார்கள்; சிறிய கார்களிலேயே பயணம் செய்வார்கள்; சொந்த வீடு உள்ளவர்கள் அரசாங்க வீடுகளில் குடியிருக்கமாட்டார்கள்; கழக சம்பந்தமான காரியங்களில் கலந்து கொள்ளும்போது அரசாங்கப்படி பெறமாட்டார்கள் என்பன போன்ற சில கொள்கைகளைக் கையாண்டார்கள்; இன்றும் கையாளுகிறார்கள்!

அதற்கேற்ப, 14 ஆண்டுகட்கு முன்பே விலைக்கு வாங்கிக் குடியேறிய தமது கோபாலபுரம் இல்லத்திலேயே கழகத்தின் தொண்டராயிருந்த போதும், சட்டமன்ற உறுப்பினரானபோதும், பிறகு எதிர்க்கட்சித் துணைத் தலைவராயிருந்த போதும், அதன்பின்னர்ப்பொதுப்பணித்துறை அமைச்சரானபோதும், இப்போது முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பும் வசித்து வருகிறார்.

மாடியிலுள்ள படுக்கையறையில் துயில்கொள்ளும் முதலமைச்சர் காலை 7 மணிக்கு எழுந்துவிடுவார். படுக்கையிலேயே அன்றைய நாளேடுகள் தயாராக வைக்கப்பட்டிருக்கும். அனைத்துக்கும் மேலே ''முரசொலி''

இருக்கும். எழுந்தவுடன் முதல்வேலை, பத்திரிகை படிப்பதுதான். 'முரசொலி' படித்து முடிந்ததும் எல்லா நாளேடுகளையும் படிப்பார். எதிர்க்கட்சி ஏடுகளை மிக்கக் கவனமுடன் படித்து நினைவில் வைத்துக்கொள்வார். அவர்கள் விடுகின்ற குற்றச்சாட்டுகள் அனைத்துக்கும் அப்போதே அவற்றுக்கான பதில்கள், மறுப்புகள் இவர் மனத்தில் பதிந்து, அன்று மாலை நடைபெறும் கழகக் கூட்டத்தில் வெடித்துச் சிதறும். பிறகு சொந்தமாகவே முகச்சவரம் செய்துகொள்வார். அப்போதும் பத்திரிகைகள் அருகிலேயேயிருக்கும். மாடியிலுள்ள குளியல் அறையில் விரைவாக வெந்நீரில் குளித்து முடிப்பார். அதைவிட விரைவாகக் காலைச் சிற்றுண்டி நடைபெறும். இரண்டு இட்லி, தயிர், காப்பி அவ்வளவே! கைத்தறியில், லுங்கி நெசவில் நெய்யப்பெற்ற தூய வெள்ளை நிறத்திலான வேட்டி, முழுக்கைச் சட்டை (இரண்டாண்டுகட்கு முன்புவரை 'ஜிப்பா', இப்போது 'காலர்' வைத்த 'ஓப்பன்' சட்டை!) நீண்ட மேல்துண்டு, வேட்டியிலும் மேல் துண்டிலும் பளீரென்று கறுப்பு, சிவப்புக் கரை, பேனா, மூக்குக்கண்ணாடி; எப்போதும் பையில் மணிபர்ஸ் வைத்துக்கொள்ளும் வழக்கமில்லை. பணத்தைச் சட்டைப் பையில்தான் வைத்துக்கொள்வார். இடது கையில் கடிகாரம். இடதுகை விரலில் அண்ணாவின் கையெழுத்துடன் கூடிய மோதிரம் எப்போதும் விரலை விட்டு அகலாது!

எட்டு மணிக்குள் எல்லாமே முடிந்து, மாடியின் முன்புறத்திலுள்ள சிறிய கட்டடத்தில் வந்து அமர்வார். சிறிய கூடமாயினும் கலை அழகு மிளிரும் புகைப்படங்கள், ஊர்தோறும் அளிக்கப்பட்ட அன்புப் பரிசுகள், புத்தகங்கள், வரவேற்பு மடல்கள் நிறைந்திருக்கும். காலை 10-30 மணிவரையில் வருவோருக்குப் பேட்டி. இவரைப் பார்க்க வருவோர் பற்பல துறையினராவர். கழகத் தோழர்கள், சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள், விண்ணப்பம் தரும் வாக்காளப்பெருமக்கள், அரசு அலுவலர்கள், வணிக-தொழில் துறைப் பிரமுகர்கள், நடிகர்கள், இசை, நாட்டியக் கலைஞர்கள், திரைப்படத் துறையினர் என்று பல்வேறு சாரார் அன்றாடம் வந்து முதலமைச்சரிடம் பேசிச் செல்கிறார்கள். அமைச்சராவதற்குமுன்பே நண்பர்களும், கலைத்துறையினரும் இவரிடம் நிரம்ப உறவாடுவது வழக்கமாகையால், இப்போது இவரைச் சந்திக்க வருவோரின் எண்ணிக்கை மேலும் பெருகிவிட்டது. கூறுகின்ற காரியங்களை உடனே செய்து முடித்துத் தரும் திறமையாலும், மனந்திறந்த கலகலவென்று இனிமையாக உரையாடும் பண்பாலும், வந்தவர் மனநிறைவுடன் செல்ல வேண்டும் என்ற தாராள சிந்தையாலும், அனைத்துக்கும் மேலாக எத்தனை ஆண்டுகள் ஆயினும் யாரையும் மறக்காமல் இருக்கின்ற ஆற்றலாலும் மக்களை வெகுவாகக் கவர்ந்துள்ளார் இவர். அதனால்தான் இவர் இல்லத்தில் கூட்டம் அதிகமாகக் காணப்படுவது வழக்கம்.

பேட்டிகள் முடிந்ததும் கோட்டைக்குப் புறப்படுகிறார். வெளிப்புறத்திலுள்ள படிகளின் வழியே இறங்கி வருகிறார். அப்போதும் கீழே பலபேர் நிற்கிறார்கள். உடனே உதவியாளர்களிடம் திரும்பி ''ஏன் இவர்களை நிற்க வைத்திருக்கிறீர்கள்?'' என வினவுகிறார். ''இல்லை ஐயா; அவர்கள் சொன்ன காரியங்களை நாங்களே கவனித்துவிட்டோம்; என்றாலும் உங்களைப் பார்த்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று காத்திருக்கிறார்கள்'' என்று பணிவுடன் பதிலுரைக்கிறார்கள். புன் முறுவலுடன் அவர்களுக்கு வணக்கம் கூறுகிறார். வெளியில் புறப்படப்போகும் போதுதான் கீழே குடும்பத்தினர் இருப்பது நினைவுக்கு வருகிறது! உள்ளே செல்கிறார்; தமக்கையாரும், துணைவியாரும், மக்களும் ஆவலுடன் நிற்கிறார்கள். வேறொன்றும் பேச நேரம் இருப்பதில்லை. துணைவியார் ''சாப்பாடு?'' என்று கேட்கிறார். ''அனுப்பிவிடு'' என்கிறார் முதல்வர். அவ்வளவுதான்! வெளியில்வந்துகாவலரின் மரியாதையை ஏற்றுக்கொண்டு, தயாராக நிற்கும் காரில் ஏறப்போகும் போது, எதிர்வீட்டிலிருந்து ''தாத்தா'' என்று மழலைக் குரல் கேட்கின்றது.

தென் சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் முரசொலி மாறன், எதிர் வீட்டில் வாடகைக்குக் குடியிருக்கிறார். இவரது பிள்ளைகள் கலாநிதியும், அன்புநிதியும்தான் அழைப்பவர்கள். காரில் அமர்ந்தவாறேஅவர்களுக்கு 'டாட்டா' சொல்கிறார். பீர்கண்ணு (சில நாட்களில் கதிரவன்) காரை நகர்த்துகிறார். பரபரப்புடன் மாறன் ஓடிவந்து மாமாவைப் பார்க்கிறார். அவர் தம்பி செல்வம் வெளியே வருவதற்குள் கார் புறப்பட்டுவிடுகிறது. மாறனின் துணைவியாரும், செல்வத்தின் துணைவியான செல்வியும் (கலைஞரின் அன்பு மகள்) அறையின் சன்னல்வழியே பார்த்துத் திருப்தியடைகிறார்கள். சொந்த வீட்டிலேயிருக்கும் இன்னொரு மருமகப் பிள்ளை அமிர்தம் (திரைப்பட ஒளிப்பதிவாளர்), அவரது துணைவியார், அவர் மகன் குணநிதி ஆகியோரும், மூத்த மகன் முத்து, அவர் துணைவி (இசைச்சித்தர் சிதம்பரம் செயராமனின் அன்பு மகள்), அவர் மகன் அறிவுநிதி ஆகியோரும், மூத்த சகோதரியர் இருவரும், இளைய மக்களான அழகிரி, ஸ்டாலின், தமிழரசு ஆகியோரும் குடும்பத் தலைவரைக் காண்பதும் அவரோடு பேசுவதும் அரிதாகும்.

கோட்டைக்குச் செல்கிறார். முதலமைச்சர் அலுவலகத்தில் அண்ணா அமர்ந்த நாற்காலியில் தாம் அமர விரும்பாததால் மாற்றி அமைக்கப்பட்ட நாற்காலியில் அமர்கிறார். வெளிநாட்டுத் தூதுவர்கள், மத்திய அமைச்சர்கள், வேறு மாநிலத் தலைவர்கள், தமிழ்நாட்டு அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், பத்திரிகை நிருபர்கள் ஆகியோரைச் சந்திப்பதும், கோப்புகளைப் படித்துக் கையெழுத்திடுவதுமாக நேரம் நகர்கிறது. 11 மணிக்குக் காய்கறிசூப் ஒரு குவளையில்(வீட்டிலிருந்து வருவது) அருந்துகிறார். எப்போதாவதுகாப்பிஅருந்துவதும்உண்டு. பிறகு மதிய உணவு வீட்டிலிருந்து வந்ததும் 2 மணியளவில் உணவை முடித்துச் சிறுபொழுது ஓய்வு எடுக்கிறார். மாலையில் அலுவல்களை முடித்துக்கொண்டு 6 மணியளவில் வீடு திரும்புகிறார்.

அவசரமாகக் குளித்து, உடைமாற்றி, மாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இறுதியாகக் கழகச் சார்புடைய பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றிவிட்டு இரவு உணவு கொள்ளும்போது நள்ளிரவு நெருங்கிவிடும். அதன் பின்னர் டெலிபிரிண்டரில் முக்கியமான செய்திகள் இருந்தால் படிப்பார். மாலையில் வெளிவந்த தினசரி ஏடுகளை மீண்டும் முழுமையாகப் படிப்பார். எப்படியும் இரவு படுக்கைக்குச் செல்ல ஒரு மணி, இரண்டு மணி ஆகிவிடும். கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் இருந்தால் மறுநாள் பொழுது விடிவதற்குள் எழுதவேண்டும்; அப்போது அந்தத் தூக்கமும் போய்விடும்!

இப்படி ஓய்வைக் குறைத்துக்கொள்வார். இத்தகைய அவசியம் ஏற்பட்டுவிடும் என்று எண்ணித்தான் இவரது இல்லத்தார் அனைவருமே இவரை முதலமைச்சர் பொறுப்பை ஏற்கவேண்டாம் என்று வற்புறுத்தினார்கள். உடல் வளத்தைவிட உள்ள உரம் மிகுதியானவர். 1951ஆம் ஆண்டு புளூரசி நோய் ஏற்பட்டு, இன்றளவும் விலாப்புறங்களிலும் முதுகின் அடிப்பகுதியிலும் வலி ஏற்படுவது உண்டு. 1955ஆம் ஆண்டில் ஒருமுறை சிறு கார் விபத்தொன்றில் அடிபட்டு இடது கண்ணில் பழுது நேர்ந்தது. 11 முறை ஆபரேஷன் செய்யப்பட்டது. அதே கண்ணில் 1967ஆம் ஆண்டு நேர்ந்த பெரும் கார் விபத்திலும் பழுது ஏற்பட்டு, மீண்டும் தொல்லை கொடுத்தது. எப்போதும் கைவசம் மருந்துப்பெட்டி வைத்துக்கொண்டு, தாமே நினைவுடன் மருந்து அருந்துவார்!

காவிரிப்படுகையின் வளங்கொழிக்கும் தஞ்சை மாவட்டம் நன்செய் நிலங்களாலும், நாட்டோரின் பசிப்பிணி போக்கும் செந்நெல்லணிகளாலும் மட்டும் புகழ்பெற்றதல்ல; நாடெங்கும் தஞ்சை மாவட்டத்தில் தோன்றிய சான்றோர்கள், பேரறிவாளர்கள், அரசியல் விற்பன்னர்கள், இசை மேதைகள், நிர்வாக நிபுணர்கள் நிறைந்துள்ளனர்.

கலைஞர் கருணாநிதியின் பேச்சிலும், செயலிலும், விருந்தோம்பும் பண்பிலும் தஞ்சை மாவட்டத்து மண்ணுக்கே உரிய தனிச்சிறப்பு மிளிரக் காணலாம். இந்த மாவட்டத்தில் பிறந்து புகழ்பெற்ற பல பெரியோர்கள், எங்கெங்கோ குடியேறிப் பிறகு சொந்த மாவட்டம் என்று வாயளவில்தான் சொல்லிக்கொள்வார்கள். ஆனால் இவரது உணர்விலும் உறவி

லும் தஞ்சை மாவட்டத்தை மறப்பதே கிடையாது.

அரசாங்க நிர்வாகத்துக்குப் புதியவர் எனினும், ஏற்கனவே கழகத்தில் பெற்றிருந்த முறையான பயிற்சியும், அனுபவமும், தமக்கே சொந்தமான செயலாளுந்திறனும், கூரிய மதியும் அரசாங்க அலுவல்களை மிக மிகத் திறமையுடனும், நுட்பத்துடனும் ஆற்ற உதவின இவருக்கு !

சென்னையிலுள்ள இவரது முக்கியமான நண்பர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் தொலைபேசி எண்கள் இவருக்கு மனப்பாடம். யாரிடத்திலாவது ஏதாவது ஒரு காரியத்தைச் சொல்லி, அத்தோடு விடாமல், எவ்வளவு நாளானாலும் அதை நினைவில் வைத்திருந்து அதைச் செய்து முடித்தாரா என்று கேட்டுத் தெரிந்து கொள்வார். இவரிடத்தில் பொய் பேசினால் எப்படியும் கண்டுபிடித்து விடுவார். இவர் கேட்கும் கேள்விகள் தலைசிறந்த 'கிரிமினல் வக்கீல்'களுடையவைபோல இருக்கும். படிப்பதும் எழுதுவதும் இவருக்கு மிக விருப்பமானவை; விரைவாகவும் நடக்கும். ஒய்வு இருந்தால் நண்பர்களுடன் உரையாடுவது இவரது பொழுதுபோக்கு. ஆனால் இப்போதெல்லாம் அதற்கு வாய்ப்பேயில்லை! வார்த்தைகளில் நகைச்சுவையோடு உடனுக்குடன் திருப்பித்தாக்கும் முறை அவருக்கே உரியதாகும். சுறுசுறுப்பாக உள்ளவர்களைத்தான் இவர் விரும்புவார். நண்பர்களுக்கு நோயோ, துயரமோ ஏற்பட்டால் மிகவும் கவலைப்படுவார். உடன் அவர்பால் சென்று ஆறுதல் சொல்வார். தவறு செய்தவர்களைக் கடுமையாகக் கண்டிப்பார். ஆனால் அதை மனத்தில் வைத்துப் பழிவாங்க நினைக்காமல் விரைவாக மறந்துவிடுவார். இவரது கொள்கைகளில் பிடிப்பும், தமிழின்பால் பற்றும் இவருக்கு உயிர்போன்றவை. அண்ணா தான் இவருக்குக் கடவுள். அவர் இருந்தவரையில் அன்றாடம் கோவிலுக்குச் செல்லும் பக்தன் போல, வேலையிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் வீட்டுக்குச் சென்று வருவார்.

உண்மையில் 45 வயதாகவும், முன்புறத்தோற்றத்தில் இன்னும் குறைவாகவும் காட்சியளிக்கும் முதல்வர் மு. கருணாநிதி திடீரென்று முதலமைச்சரானவரல்லர். ஏறத்தாழ 30 ஆண்டுகள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, எதிர்ப்புகளையும் இன்னல்களையும் ஏற்று, உழைப்பாலும் தியாகத்தாலும் உயர்ந்து, திறமையாலும் கொள்கையாலும் வளர்ந்து, நேர்மையாலும் தூய்மையாலும் நிலைபெற்று, கலைஞர், கவிஞர் எனத் தமிழ் மக்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து, படிப்படியாக உறுதியுடன் அடியெடுத்து வைத்து முன்னேறியவர். உயர்நிலைப் பள்ளியோடு இவரது பள்ளிப் படிப்பு முடிந்ததானாலும், நுணுக்கமான தமிழறிவும், தெளிவுமிக்க புதுமைச் சிந்தனைகளும் இவரைத் தமிழகத்திலே ஒரு புரட்சிப் பேச்சாளராகவும், எழுச்சி எழுத்தாளராகவும், ஆவேச நடிகராகவும் ஆக்கின.

வெறும் மேடைப் பேச்சால் மட்டுமே கொள்கையை வளர்த்துவிட முடியாது என இவர் கருத்துக் கொண்டதால், நாடக மேடைகளையும் திரையுலகத்தையும் கைப்பற்றி, அவற்றின் வாயிலாக வெற்றியுடன் தாம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளைப் பரப்பினார். தீவிபத்துக்கள், வெள்ளம், புயல் ஆகிய இயற்கைக் கோளாறினால் ஏற்படும் இழப்புகள், உழவர், கைத்தறி நெசவாளர், தொழிலாளர் ஆகியோர் உரிமைக்காகவும் வாழ்வுக்காகவும் நடத்திய போராட்டங்கள் - இவற்றையெல்லாம் கண்டு மனம் உருகி ஓடோடிச் சென்று வலிய உதவுவது இவருக்கு வாடிக்கை. அஞ்சாமல் சிறைக்குச் செல்வதும், தியாகம் செய்வதும் இவருக்குத் தொழிலாயிருக்கிறது! மக்கள் பிரச்சினைகளில் தலையிட்டு, மக்கள் சார்பில் வாதாடி, நீதி கோருவதும் இவருக்கு வழக்கம். முறைப்படி யாப்பிலக்கணம் பயிலாவிடினும், கைதேர்ந்த கவிஞர்போல் கவிதையுள்ளம் படைத்தவராதலால், பற்பல கவியரங்கங்களுக்குத் தலைமை ஏற்றுத்தமிழாராய்ச்சி மிக்க கருத்துக்களையும், கவிஞர் பெருமக்களின் அறிமுகங்களையும் தமக்கேயுரிய தனிப் பாணியில் தந்து, கவியரங்கம் என்னும் இலக்கிய நிகழ்ச்சியைப் படித்தோர் மட்டுமின்றிப் பாமரரும் விரும்பிச் சுவைக்கும் நிலையும் செல்வாக்கும் ஏற்படுத்தியவர் இவரே. தேர்தல் எங்கெங்கு நடை



பெறினும் இவரது கைவண்ணம் அங்கேவெற்றி தேடித்தரும். மாநாடுகள், கலை நிகழ்ச்சிகள் இவரது கலைமெருகால் ஏற்றம் பெறும். கழகத்துக்கான நிதியைத் தனித் திறமையுடன் தேர்ச்சியாகவும், நேர்த்தியாகவும் திரட்டி வைப்பது இவருக்கேயுரிய பேராற்றல். எங்கோ அறையில் நடந்து முடிந்திருக்க வேண்டிய இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை அம்பலத்திற்குக் கொணர்ந்து, உலகிலுள்ள தமிழ் பேசும் மக்களெல்லாம் கண்டு, கலந்து, சுவைத்துப் பயன் பெறத் தக்கதாய், கலை நுணுக்கமும் கவர்ச்சியும் விரவியதாய் மாற்றிக்காட்டிய பெருமை இவரையே சாரும்!

பிரச்சினைகளுக்குச் சுமுகமான, விரைவான முடிவுகள் காண்பதிலும் இவருக்கு நிகர் இவரே! அவசர முடிவு (Hasty decision) எடுப்பது இவர் வழக்கமல்ல. ஆனால் விரைவான முடிவு (Quick decision) எடுப்பதுதான் இவர் கொள்கை. அண்ணாவின் அடிச்சுவட்டினின்றும் அணுவும் பிறழாமல் அதே நெறியில் நடக்க வேண்டும் என்பதே இவரது நீங்கா விருப்பமாகும். சான்றோர்களைப் பாராட்டுவதும், தொண்டர்களை அரவணைத்துச் செல்வதும், செந்தமிழுக்கு எல்லாவகையிலும் ஏற்றந் தேடித் தருவதும் இவரது உயிர் மூச்சு.

தமிழ் மக்கள் உள்ளங்களையும், கழகத் தோழர்கள் இதயங்களையும் கொள்ளை கொண்டவர் அண்ணாவுக்கு அடுத்தபடியாக இவர் ஒருவரே. எனவே, எல்லாவகையாலும் நாட்டுக்கும், கழகத்துக்கும் நம்பிக்கைப் பேரொளியாகவும், தவிப்போர்க்குக் கலங்கரை விளக்கமாகவும், அநியாயக்காரர்கட்குச் சிம்ம சொப்பனமாகவும் விளங்கும் கலைஞர் மு. கருணாநிதி தமிழ்நாட்டின் சிறந்த முதலமைச்சராக விளங்குகிறார். மத்திய, மாநில உறவுகள் இவரது காலத்தில் சிறப்புப் பெறும் என்ற நம்பிக்கை வளரக் காண்கிறோமல்லவா?

தனிமையாக இயங்குவதையோ, வாழ்வதையோ இவர் எப்போதும் வெறுப்பவர். இன்றைய நிலையில் அரசுத் தரப்பில் எத்தனையோ உதவியாளர்கள் இருப்பினும், நீண்டகாலமாக நெருங்கிப் பழகிய தோழர்கள் தம்முடன் இருப்பதையும், சுற்றுப் பயணங்களின் போது உடன் வருவதையும் விரும்புகின்றார். தனியாக எதைப்பற்றியும் முடிவெடுப்பதைவிட உடனுறையும் கூட்டாளிகளின் கருத்துக்களைக் கலந்து பரிமாறி முடிவெடுக்கும் சனநாயகப் பண்பினைப் பெரிதும் போற்றுபவர்.

திரைப்படத் தயாரிப்பாளர், வசனகர்த்தா, பத்திரிகை உரிமையாளர், ஆசிரியர் என்று பல நிலைமைகள் ஏற்பட்டபோதும் தன் கொள்கையை நழுவ விடாத குணக்குன்று இவர். தான் பிறந்த சமுதாயம், மக்களின் மனப்பான்மையால் மிகவும் பிற்போக்காயிருப்பதையும், மாற்றார் அதனைக்கூடக் கேவலமான முறையில் சுட்டிக் காட்டுவதையும் - பொருட்படுத்தாவிடினும் - எண்ணி மனம் புழுங்குவார். பிற்பட்ட வகுப்பினருக்கென, அவர் நலம் பெருக இப்போது ஒரு தனி இலாகா ஏற்படுத்தியது இவரது ஆழ்ந்த சிந்தனையைக் காட்டுகின்றது!

சுறுசுறுப்பான தமது இயல்புக்கு மாறாகத் தம்மை ஓய்வெடுக்கத் தூண்டுவோரையும், காரிய சித்திக்காக முகத்துக்கு நேரே தம்மைப் புகழ்வோரையும் அவர்கள் தமது குடும்பத்தாரேனும், நண்பர்கள், உறவினர்களேனும் தாட்சண்யம் பாராது கண்டிக்கத் தவறமாட்டார். குறிப்பிட்ட நேரங்களில் நிகழ்ச்சிகளை முடிப்பதில் கண்ணுங் கருத்துமாயிருப்பார்.

இத்தகைய குணநலன்கள் வாய்க்கப் பெற்று, கல்லூரிப் பட்டம் பெறாவிடினும், ஆழ்ந்த கல்வியறிவும், தீர்க்கமான சிந்தனையும், தெளிவான முடிவெடுக்குந் திறனும், அனைத்துக்கும் மேலாக மாற்றாரையும் மதிக்கும் பண்பும், மக்கள் நலன்பேணும் குறிக்கோளும், இளமையிலேயே முதிர்ந்த தேர்ச்சியும் பெற்ற கலைஞர் மு. கருணாநிதி அவர்களைத் தமிழ்நாடு அரசு தனது முதலமைச்சராகப் பெற்றிருப்பது பெரும்பேறு என்று துணிந்து கூறலாம் அன்றோ?

# பசுமைப் புரட்சி



திரு. இ. சி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்.
ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் [illegible]
தமிழ் நாடு அரசு

வேளாண்மைத் துறையில் கடந்த இரண்டாண்டுகளாக வியக்கத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. சிறப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் ஒருபோக விளைச்சலை இருபோக விளைச்சலாக மாற்றியதன் விளைவாக, உணவு உற்பத்தியின் அளவு பன்மடங்கு பெருகியுள்ளது. இந்த மாபெரும் பசுமைப் புரட்சிக்கு முழுமுதற் காரணமாக, பின்னணியாகத் திகழ்ந்தவர், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சராகப் பணியாற்றிய அமரர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் என்றால் அது மிகையாகாது.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் விவசாயக் கருத்தரங்குகளை முறையாக நடத்தி, வேளாண்மைத் துறை, கிராம வளர்ச்சி, நீர்ப்பாசனம், கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவுத் துறைகள் முதலியவற்றின் அலுவலர்களையும், தமிழ் நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், முன்னேற்ற விவசாயிகள் முதலியோரையும் ஒன்று திரட்டி, அவர்கள் தந்த அநுபவக் கருத்துக்களையும், காலத்திற்கேற்ற அறிவுரைகளையும் அடிப்படையாகக் கொண்டு மாவட்ட மாநில நிர்வாக நடை முறைகளில் பயனுள்ளபல சீர்த் திருத்தங்களையும் பெரும் மாறுதல்களையும் செய்ய முடிந்தது. இந்தப் புதிய முயற்சியின் விளைவாக வேளாண்மைப் பெருங்குடி மக்களிடையே புதிய நம்பிக்கையும், உற்சாகமும் பெருகி வளரத் தொடங்கியுள்ளன.

இப் பசுமைப் புரட்சியின் முதற்படியாக, ஊர் நல ஊழியர்களின் (கிராம சேவக்குகளின்) பணிகளை மேலும் சிறந்த முறையில் உழவர் பெருமக்கள் எளிதில் பெறத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய வேளாண்மை முறைகளைப் பரப்புவதற்கு—சிறப்பாக மிகு விளைச்சல் தரும் வீரிய, ஒட்டு இன விதைகளைப் பயிரிடுவதற்கு ஊர் நல ஊழியர்கள் விவசாயத்துறை அதிகாரிகளுடன் பெரிதும் நெருங்கி இணைந்து பணியாற்றி வருகின்றனர். புதுவகை வீரிய வித்துக்களின் சாகுபடி, அவற்றிற்கு உரமிடுதல், பயிர்ப் பாதுகாப்பு, நீர்ப்பாசன அளவு முதலியவற்றைக் குறித்து விவசாயிகளுக்குத் தக்கமுறையில் எடுத்துரைக்க ஊர் நல ஊழியர்கள் பெரிதும் துணை நின்று கடமையாற்றுகின்றனர்.

இந்த வகையில் கடந்த சில காலமாக, வேளாண்மைத்துறை இயக்குனராக நான் பணியாற்றியபோது, பல்வேறு மாவட்டங்களுக்கும் நேரில் சென்று விவசாயப் பணிகளையும், உழவர்களுக்கு ஊர் நல ஊழியர்கள் ஆற்றும் அரிய உதவிகளையும் ஆராயும் பெரும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதனால் எனக்கு ஏற்பட்ட சில



அநுபவங்களை ஒட்டி, மூன்று முக்கியக் கருத்துக்களைக் கிராமப் பெருமக்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவற்றுள், முதலாவது, எடுத்துக்காட்டுப் பண்ணைகளைப் (Demonstration plots) பற்றியதாகும்; இரண்டாவது, மண் பரிசோதனையைக் (Soil testing and Analysis) குறித்தது; மூன்றாவது பயிர் அறுவடை சம்பந்தமான புள்ளி விவரங்களைச் சேகரிப்பது (Crop cutting experiments) தொடர்பானது.

இக் கருத்துக்கள் அனைத்தும், என் சொந்த முறையில் குறிக்கப்படுவனவாகும். இவற்றுள் இரண்டாவதும், மூன்றாவதும் பற்றியதான கருத்துக்களைச் செயல்படுத்த, அரசாங்க ஆணை எதுவும் புதிதாகத் தேவையில்லை. இப்போதுள்ள விதிமுறைகளை ஒட்டி நேரடி முயற்சி எடுத்தாலே போதும்; மிகச் சிறந்த பயனைக் காண்பது உறுதி.

## எடுத்துக்காட்டுப் பண்ணைகள் :

முதலாவதாக நான் கூறவிரும்பும் கருத்து, எடுத்துக்காட்டுப் பண்ணைகளை மேலும் சிறந்த வகையில் பயன்படுத்திக் கொள்வதற்கான வேண்டுகோளாகும். நம் நாட்டிலுள்ள உழவர் பெருமக்கள் பெரும்பாலும் பழமையில் பற்றுக் கொண்டவர்கள் என்றாலும், புதிய விஞ்ஞான முறைகளால் கண்கூடாக நல்ல பயன் கிடைக்கும் போது, அவற்றைப் பயன்படுத்தத் தயங்கமாட்டார்கள். இதை அநுபவத்தில் நாம் கண்டு வருகிறோம்.

முன்னேற்ற விவசாயிகள் புதிய முறைகளைக் கையாண்டு அதிகவிளைச்சலைப் பெறுவதை நேரில் காணும் மற்றவர்களுக்கும் அவற்றைப் பின்பற்றுவதற்கான ஊக்கமும் உற்சாகமும் ஏற்படுகின்றன. இதற்காக, ஏற்கனவே ஒவ்வோர் ஊர் நல ஊழியரும் முன்னேற்ற விவசாயிகளின் ஒத்துழைப்புடன், சுமார் பத்து இடங்களில் சிறந்த எடுத்துக்காட்டுப் பண்ணைகள் அமைக்கவேண்டுமென்று நடைமுறைக்கோட்பாடு வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு வட்டாரத்திலும் சுமார் 100 எடுத்துக்காட்டுப் பண்ணைகள் இருந்துவரவேண்டும்.

நான் நேரில் பார்த்த அநுபவத்தைக் கொண்டு, இதில் ஒரு சிறு மாறுதல் செய்வது நலம் என்று கருதுகிறேன். ஒரு வட்டாரத்தில் குறைந்தது 5 இடங்களில் முக்கியமான எடுத்துக்காட்டுப் பண்ணைகள் அமைத்தாலே போதும். இவை, தாய்ப் பண்ணைகளாக மிகச் சிறந்த முறையில் அமைய வேண்டும். இவற்றைக் காணும் அனைவரும் இதே போலத் தத்தம் ஊர்களில் சிறந்த முறையில் விவசாயம் செய்யவேண்டும் என்பதற்கு இவை தூண்டுகோலாக அமையவேண்டும்.

இந்தக் கருத்தை நடைமுறையில் கொண்டுவர, வட்டார வளர்ச்சித் துறை அலுவலர்கள் அனைவரும் வேளாண்மைத் துறை அலுவலர்களுடன் தக்க முறையில் ஒத்துழைக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். தேவையானால், இதைப்பற்றிய விதிமுறைகளை ஆராய்ந்து, தக்க மாறுதல் செய்ய முயற்சி மேற்கொள்ளப்படலாம்.

இவ்வாறு கூறுவதன் முக்கிய நோக்கம், எடுத்துக்காட்டுப் பண்ணைகள் பெயரளவில் இருந்தால் போதாது; பலரும் கண்டு அதிசயிக்கும் வகையிலும் பின்பற்றும் முறையிலும் அமையவேண்டும் என்பதேயாம். ஒவ்வொரு வட்டாரத்திலும் தாய்ப் பண்ணைகளை — தலைமைப் பண்ணைகளை உருவாக்குவது, ஊர் நல ஊழியர்கள், விவசாய அலுவலர்கள் ஆகியோரின் கூட்டுப் பொறுப்பாக அமையவேண்டும். அவற்றைக் கண்டு பலரும் பல இடங்களில் முன்னேற்றப் பண்ணைகளை அமைத்துக் கொள்ள அவை பயன்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மேற்கொள்ளலாம்.

## மண் பரிசோதனை :

இரண்டாவதாக, விளைச்சலுக்கு அடிப்படையாக அமைவது விளையும் நிலத்தின் தரத்தை ஆராய்ந்து அறிதலாகும். அவற்றிலுள்ள பல்வேறு கூறுகளை உள்ளது உள்ளவாறே அறிவிப்பதற்கு மண் பரிசோதனை நிலையங்கள் எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும்,

விவசாய அலுவலகங்களிலும் மண் பரிசோதனை செய்துகொள்ளும் முறைகளைப்பற்றி விரிவாக விளக்கப்படுகின்றன.

இந்த மண் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு, புதிய சாகுபடி முறைகளுக்கான உரச்சேர்க்கை நிர்ணயிக்கப்படும். எனவே, வட்டாரங்களில் பணியாற்றும் ஊர் நல ஊழியர்கள் அனைவரும் விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, மண் பரிசோதனைக்கான வழிமுறைகளை எடுத்துரைத்துத் தக்க வகையில் பணி செய்வது மிகவும் அவசியமும் அவசரமுமானதாகும்.

**பயிர் அறுவடைப்புள்ளி விவரங்கள்:**

உணவு உற்பத்தியைப் பெருக்கும் மாபெரும் முயற்சியில், தக்க புள்ளி விவரங்கள் சேகரிப்பது மிகவும் முக்கியமான பணியாகும். இதற்காகப் புள்ளிவிவர இயக்குநரின் துணையுடன் பயிர் அறுவடை சமயத்தில் சில குறிப்பிட்ட இடங்களில் பரிசோதனைகள் (Crop cutting experiments) மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டின் பல்வேறு இடங்களில் உண்டாகும் விளைச்சலைப் பற்றிய உண்மையான நிலையை அறிவதற்கு, இந்த அறுவடைப் புள்ளி விவரங்கள் மிகவும் பயன்படுவனவாகும்.

கிராம நிலையிலிருந்து இந்தப் புள்ளி விவரங்களை முறையாகவும், சரியாகவும் அறிந்து கொள்வதற்கு ஊர் நல ஊழியர்களும், வேளாண்மைத் துறை அலுவலர்களும் உதவி புரியக் கடமைப்பட்டுள்ளனர். இதற்கான அரசாங்க ஆணைகள் விரிவான முறையில் விளக்கமாக அமைந்துள்ளன. ஆயினும், இவற்றை நிறைவேற்றுவதில் மிகுந்த கவனம் செலுத்துவது அவசியம் என்பதை வற்புறுத்த விரும்புகிறேன்.

உண்மைக்கு மாறான புள்ளி விவரங்கள்-குறிப்பாகப் பயிர் அறுவடையின் போது சேகரிக்கப்படும் கணக்கு வகைகள் - கிராம நிலையிலிருந்து மேலே அனுப்பப் படுமேயானால், நமது நாட்டின் உணவு உற்பத்தி பற்றிய புள்ளி விவரம் முழுவதும் நகைப்புக்கு இடமாகிப் பயனற்றுப் போய்விடும். எனவே, இந்த அடிப்படையான எச்சரிக்கையை மனத்தில் கொண்டு தொடர்புடைய அனைவரும் பணியாற்ற வேண்டும்.

என்னுடைய சொந்த அநுபவத்தில் கண்ட ஒரு சில கருத்துக்களே நான் மேலே குறிப்பிட்டவை. அவற்றை ஆய்ந்து, தக்க முறையில் செயல்படுமாறு அலுவலர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக ஊர் நல ஊழியர்கள் விவசாயப் பெருமக்களுடன் மேலும் நெருங்கிய தொடர்பு கொண்டு, நாடெங்கும் தழைத்தோங்கிவரும் பசுமைப் புரட்சியில்-வேளாண்மை மறுமலர்ச்சியில் - சிறப்பான பங்கு பெறுமாறு அவர்களை உள்ளன்புடன் அழைக்கின்றேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ''சீரணி'' என்ற பெயரால், ஒவ்வொரு மாவட்டத்திலும், சமுதாயத் தொண்டாற்றும் சீரிய தொண்டர்கள் பலர் மனமுவந்து பணி செய்யும் அமைப்பு உருவாகியிருப்பதை அனைவரும் அறிவோம். சீரணித் தொண்டர்களின் ஆர்வமும், தொண்டும் கிராம வளர்ச்சித் திட்டங்களுடன் இணைந்து செயல்படவும், ஊர் நல ஊழியர்களின் பணிகளுக்குப் பெரிதும் வலிவூட்டவும் வழிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு மாவட்டங்களிலும், வட்டாரங்களிலும் ஏற்கனவே நல்ல முறையில் நடைபெற்றுவரும் பொது நலப் பணிகள், விவசாயத் துறைக்கு மேலும் சிறப்பிடம் தந்து, அனைவரும் கண்டு அதிசயிக்கும் வகையில் சிறந்த பணி செய்யுமென்று எதிர்பார்க்கிறேன்.

> உழைப்பு மூன்று பெருந்தீமைகளை நம்மிடமிருந்து நீக்குகின்றது! அவையாவன : தொந்தரவு, தீயொழுக்கம், வறுமை.
>
> — வால்டேர்



# காதலன் நடை

கி.வா.ஜகந்நாதன்

மனிதன் நெஞ்சில் எழுச்சியும் மலர்ச்சியும் உண்டானால் அவனை அறியாமலே பாட்டு எழும். அவனுக்கு இசைப் பயிற்சி இருக்க வேண்டும் என்பது இல்லை. இடைவிடாமல் இழுமென்ற ஓசையோடு அவன் பாடத் தொடங்கிவிடுவான். அற்றற்றுக் கேட்கும் குரலை அரிக்குரல் என்றும், தொடர்ந்து இனிமையாகக் கேட்கும் ஓசையை இழுமென் ஓசை என்றும் சொல்வது புலவர் மரபு. அழுகையில் இந்த இழுமென்ற ஓசையைக் கேட்கலாம். மனத்தில் உணர்ச்சி விஞ்சியபோது எழுவது அழுகை. அதன் ஓசை அற்றற்று வராமல் தொடர்ந்து இழுமென்று வரும். அந்த அழுகையின் ஓசைக்கு 'முகாரி ராகம்' என்று பெயர் கொடுப்பார்கள். சிற்றூர்களில் ஆயர் முதலியோர் பாடுவதைக் கேட்டால் அழுகைக் குரல் போலவே தோன்றும். மனம் உருகிப் பாடும் பாட்டு மனத்தை உருக்கும் வகையில் வெளியாகும். அழுகை மனிதனிடம் இயல்பாக எழும் இசை வடிவம்.

தமிழ் நாட்டுப் பெண்களுக்கு ஒப்பாரியும் தாலாட்டும் உடனே வரும் என்பார்கள். பிறந்த குழந்தைக்காகத் தாலாட்டுப் பாடுவதும் இறந்தவர்களுக்காக ஒப்பாரி பாடுவதும் நெகிழ்ந்த மென்மையான உள்ளமும் மென்குரலும் உடைய பெண்மணிகளிடம் தாமே தோன்றுவதில் வியப்பு ஏதும் இல்லை. பெண்களின் பேச்சே இசைபோல இருக்கிறதல்லவா?

இயற்கையாக எழும் ஓசையோடு கூடிய இசைக்கு மனத்தே எழும் உணர்ச்சி காரணமானால், அதே உணர்ச்சி, கருத்தைப் புலப்படுத்தும் சொற்களைக் கோவையாக்கிப் பாடும் கவிதைக்கும் காரணமாகிறது. நாடோடிப் பாடல்களில் இசையும் பாடலும் உணர்ச்சியின் விளைவாக எழுகின்றன.

மனிதனுக்கு உணர்ச்சி கற்றுக் கொண்டு வருவதில்லை. அதை வெளியிடவும் அவனுக்குத் தெரியும். இசையும் சொல்லுமாக அவனிடம் உணர்ச்சி வெளியாகும்போது அது பாடல் வடிவம் பெறுகிறது.

கவிதைக்கு இன்றியமையாதது உணர்ச்சி. உணர்ச்சியில்லாக் கவிதை, முடைந்த கீற்றுப்போல இருக்கும். நாடோடிப் பாடல்களில் உணர்ச்சி நிரம்பியிருக்கும். புலவர்களின் கவிதைகளில் இருப்பதுபோல அலங்காரங்களும் சொல்வளமும் நாடோடிக் கவிதையில் இருப்பதில்லை. ஆனாலும் ஓசை நயமும் குறிப்பும் இருக்கும்.

ஒருவகையில் நாடோடிப் பாடல்களைக் குழந்தைகளின் மழலைப் பேச்சுக்கு ஒப்பிடலாம். குழந்தைகளின் வார்த்தைகள் திருப்பித் திருப்பி வரும். நாடோடிப் பாடலில் இந்தக் கூறியது கூறலை அதிகமாகக் காணலாம். அதுவே அதன் இலக்கணம் என்றுகூடச் சொல்லலாம். மனித உள்ளத்தின் உணர்ச்சியைக் கோலம் செய்வது என்ற பொதுப்

பண்பைப் புலவர் கவிதையிலும் காணலாம்; நாடோடிப் பாடல்களிலும் காணலாம்.

கம்பன் சீதையின் காதலை நூறு, நூறு வகையில் வருணிக்கிறான். இராமனைக் கண்ட பிறகு அவனைத் திருமணம் செய்து கொள்ளும்வரையில் அவள் படும் பாடுகளை இனிமையாகப் பாடுகிறான். இராமனுடைய எழில் நலன்களை எண்ணி எண்ணி அவள் ஏங்குகிறாள். அவனுடைய திரண்ட தோளும் புன்முறுவலும் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவன் களிறுபோல் நடந்த நடை கண்டு அவள் சொக்கிப் போனாள். அதைச் சொல்கிறாள்.

'படர்ந்தொளி பரந்துயிர் பருகும்
ஆகமும்
தடந்தரு தாமரைத் தாளு மேஅல;
கடந்தரு மதங்கலும் களிநல்
யானைபோல்
நடந்தது கிடந்ததுஎன் உள்ளம்
நண்ணியே'

என்கிறாள். அவனுடைய மார்பும் தாளும் அவளை அவ்வளவு மயக்கவில்லை. ஆனால் யானையைப்போல நடந்தானே அந்த நடை அவள் உள்ளத்தில் பதிந்து கிடந்ததாம்; அவன் இன்னும் அவள் உள்ளமென்னும் சாலையில் நடந்துகொண்டேயிருக்கிறானும். அவள் உள்ளம் நீளுகிறது சாலைபோல; உள்ளம் என்பது எண்ணத்தின் வடிவந்தானே?

நாடோடிக் கவிதையிலும் இப்படி ஒரு காட்சி வருகிறது. அவள் பெயரை நாம் அறியோம். வீராயி என்று வைத்துக் கொள்வோம். அவளும்தான் காதலனுடைய ஆண்மையிலும் எழிலிலும் உள்ளத்தைப் பறிகொடுத்தவள். அவன் நடந்த நடை அவளுக்கு வியப்பை ஊட்டுகிறது. அவள் அந்த நடைக்கு உவமை தேடிச் செல்லவில்லை. ஆனாலும் அதன் அருமைப் பாட்டை — அவனுக்கே உரிய நடையாக அது அமைந்திருப்பதை—அவள் சொல்கிறாள். உவமையைச் சொல்லி அவன் நடைப் பெருமையைப் புலப்படுத்தாவிட்டாலும் ஒப்பு நோக்கி வெளிப்படுத்துகிறாள்.

நானும் நடந்திருப்பேன்
நடப்பாரையும் பார்த்திருப்பேன்—
இந்தச்
சாமி நடையைப் போலே
சாலைவழி கண்டதில்லை!

பாட்டுக்கு விளக்கம் வேண்டியதில்லை. எவ்வளவோ பேர் சாலையில் நடந்தார்கள். ஆனால் அவர்களின் நடை அவள் உள்ளத்தில் பதியவில்லை; கண் பார்வையோடு போய்விட்டது. இந்தச் சாமியின் நடை அத்தகையதன்று; அதன் சுவடு அவள் உள்ளத்தில் பதிகிறது. அதனால் அதை நினைந்து மகிழ்கிறாள்.

இரண்டு காதலியரும் தம் காதலர்களின் நடையைத்தான் வியக்கிறார்கள். அந்த இருவர் கூறும் சொற்களிலும் இரு வேறு அழகைக் காண்கிறோம். முதல் பாட்டு, அரண்மனையில் வாழும் நாகரிக இளமங்கையின் உள்ளத்தைக் கவிச் சக்கரவர்த்தி காட்டுகிற காட்சி; கண்ணாடி போட்ட வண்ண ஓவியம் அது. இரண்டாவது பாட்டு, குடிசையில் வாழும் மங்கையின் உள்ளத்தை உள்ளபடி நாடோடிப் பாவலன் காட்டும் காட்சி; குழந்தை மணலிலே போட்ட கோலம் அது. முன்னதில் பயிற்சியும் செயற்கையும் இணைந்து விளங்குகின்றன. பின்னதில் இயற்கையும் எளிமையும் இணைந்து நிற்கின்றன.

## வரி நிலுவையே இல்லாத ஊராட்சி

கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள (ஆந்திர மாநிலம்) சின்னபுரம் ஊராட்சி 1968-69ஆம் ஆண்டிற்குரிய வரிகளனைத்தையும் வசூல் செய்துவிட்டது. இம்மாவட்டத்திலுள்ள ஊராட்சிகள் பலவற்றுள்ளும் வரிகளை நிலுவையில்லாது வசூலித்து முடித்த முதற் பெருமை சின்னபுரம் ஊராட்சியையே சாரும்.

# கடமையும் உரிமையும்

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்

தமிழ்நாடு அரசு, 'கிராம நலம்' என்னும் பெயரில் தனியாக மாத இதழ் நடத்திவருவது கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். அதன் பெயர் 'சீரணி' என்று விரைவில் மாற இருப்பதாகக் கேட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒவ்வொரு துறையிலும் சீர் பேணும் நாள் இது. எனவே இவ்விதழும் அணி குலையாமல், சீரணியாக மலர வாழ்த்துகிறேன். இத்திங்கள் 'கிராம நலம்' தொழிலாளர் நல இதழாக வெளிவருவது வரவேற்கத்தக்கதாகும்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வந்ததே தமிழர் வழக்கம், வரலாறு.

வீணில் உண்டு கழித்து இருப்போரை நிந்தனை செய்வது நம்முடைய கொள்கை. இந்த உணர்வு தொலைந்து ஓராயிரம் ஆண்டுகளாகிவிட்டன. சொத்துடையோரைக் "கருவிலே திருவுற்றவர்" என்று புகழ்ந்த புலவன் தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை. அது எப்படியானாலும் சரி; உழவுக்கும் தொழிலுக்கும் மதிப்பளிக்கும் பழைய பண்பாடு திரும்பவும் சீர்பெற வேண்டும்.

'தொழிலாளி'யாக வாழ்வது பாவமன்று. அதுவே பண்பாடு. உடலுழைப்பாளன் மட்டுமின்றி, மூளை உழைப்பாளரையும் 'தொழிலாளர்' என்றே குறிப்பிடுகின்றார், இளங்கோ.

அன்றைய முடியாட்சியில் அமைச்சுத் தொழில் புரிந்தோரைக் 'கோத் தொழிலாளர்' என்கின்றார் சிலப்பதிகாரத்திலே.

உழுது பயிரிடும் உழவுத் தொழிலாளர்களைக் 'காவிரிப் புதல்வர்கள்' என்று கூறிப் பெருமைப்படுத்துகிறார் இளங்கோ. காவிரியாற்று நீர் கழனிகளை வளப்படுத்துவதால், காவிரியை 'அன்னை'யாகக் கற்பனை செய்து, உழவர்களை அவளுடைய புதல்வர்களாக வருணிக்கின்றார். தொழிலைப் பயன்படுத்திக்கொண்டு தொழிலாளர்களை இழிவாக நடத்துவது துரோக புத்தியாகும். சவரத் தொழில், சலவைத் தொழில், மலம் எடுக்கும் தொழில் ஆகிய தொழில்களிலே ஈடுபட்டுள்ளோரை நாம் போற்ற வேண்டும்.

தொழில்களிலே, ஒன்றை இழிவானதென்றும், மற்றொன்றை உயர்வானதென்றும் கருதுவதற்கில்லை. அனைத்துத் தொழிலும் சமுதாயத்தின் தேவையைக் கருதியே படைக்கப்பெற்றவை. மூளையுழைப்பாளர் மூலதனம் படைத்தோராக இருப்பது உற்பத்தியைப் பங்கிடுவதில் நேர்ந்த கொடுமையின் விளைவாகும்.

'உற்பத்தியைப் பெருக்கினால்தான் வறுமை தொலையும்' என்பதாக அடிக்கடி சொல்லப்படுகிறது.

இதிலே, உண்மையைப் பாதி வடிவத்தில்தான் பார்க்க முடிகிறது. மறு பாதி அதிலேயே மறைந்துகிடக்கிறது. "பெருக்கிய உற்பத்தியை

மூளை உழைப்பாளியும் உடலுழைப் பாளியும் நியாயமாகப் பகிர்ந்து கொண்டால் மட்டுமே, வறுமை மறையும்; வாழ்க்கையிலே வளம் பெருகும்'' என்பது உண்மையான மறுபாதியாகும். உற்பத்தியைப் பெருக்குவதிலே மூளை உழைப்பாளி யும் உடலுழைப்பாளியும் சம பங் காளிகள் ஆவர். இதனை மறந்தால், சமுதாயத்திலே சமத்துவம் நில வாது.

இது குடியரசுக் காலம்; குடி அரசிலே எண்ணிக்கைக்கே மதிப்பு அதிகம். மக்கள் சமுதாயத் தின் எண்ணிக்கையிலே உழவர்களும் தொழிலாளர்களுமே மிகுதியானவர் கள். இந்த உண்மையை நினைவில் கொண்டு ஒவ்வொரு துறையினரும் கடமையாற்ற வேண்டும். உழவர் களுக்கும் தொழிலாளர்களுக்கும் தீமை புரிவோர் சமுதாயம் முழுவ தற்குமே தீமை செய்வோர் ஆவர்.

எதிலும் எவருக்கும் கடமையும் உண்டு; உரிமையும் உண்டு. கடமை யின் முடிவில் எழுகின்றது உரிமை. கடமையைச் செய்ய மறுப்பவர்க்கு அல்லது தவறுபவர்க்கு உரிமை என் பதாக ஒன்றிருக்க முடியாது.

சமுதாயத்திலே ஒவ்வொருவரும் கடமையை மறந்து உரிமையை வற் புறுத்தத் தொடங்கினால், குழப்பம் தான் தோன்றும். தொழிலாளர் களுக்கு வேறு எவரையும் விடத் தன் னம்பிக்கை வேண்டும். விரல் விட்டு எண்ணிவிடக் கூடியவர்களாக உள்ள உடமையாளர்கள் மீது கொண்ட மனக்குறையால், உழவரும் தொழி லாளரும் கடமை செய்யத் தவறு வார்களானால், அதனால் மிகுதியான தீமை அவர்களுக்குத்தான். ஏனெ னில், சமுதாயத்தில் அவர்கள் தானே அதிகமானவர். அதனால் கடமைகளைச் செய்துவிட்டு அல்லது கடமைகளைச் செய்து கொண்டே உரிமைகளுக்காக முயலவேண்டும்; எந்தக் காரணத்தைக் கொண்டும் கடமையைக் கைவிடக்கூடாது என் பேன்.

நாம் வேறு; சமுதாயம் வேறு அல்ல. நாம்தான் சமுதாயம்; சமு தாயம்தான் நாம். நமது நன்மைக் காகச் சமுதாயத்தில் அமைதி காக்க நாம் விரும்ப வேண்டும்.

விஞ்ஞான வளர்ச்சி உழவருக்கும் தொழிலாளர்களுக்கும் உதவி புரியும் வகையிலேயே முன்னேற்றங் கண்டு வருகிறது. உழவரும் தொழிலாள ரும் முன்னேற்றம் பெறுவதைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் உலகிலே எந்த ஒரு சக்திக்கும் இல்லை. தேவைப்படுவது சிறிது கால அவ காசம்தான். தொழிலாளர்களாகிய நாம், நமது பாட்டன் தலைமுறையை விடக் கூடுதலான உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்கின்றோம். இதனாலேயே, நம் தலைமுறையினரை விடவும் நம்முடைய பேரப்பிள்ளைத் தலைமுறையினர் இன்னும் கூடுத லான உரிமைகளையும் சலுகைகளை யும் அடைவார்கள் என்ற உத்திர வாதம் நமக்குக் கிடைக்கின்றது.

ஒரே தலைமுறையில் அனைத்தையும் அடைந்து விடுவது சாத்தியமில்லை. பரிணாம வளர்ச்சியும் அதற்கு ஆதர வாக இல்லை. ஆகவே, தொழிலாளர் கள் எனப்படுவோர் கடமையைச் செய்யத் தவறக்கூடாது. 'உழைப்பு தான் மூலதனம்' என்கிறது இன் றையப் பொருளாதாரச் சாத்திரம்.

ஆம், உழைப்புதான் கர்த்தா; உடமை கருவிதான். இதனை மறத் தல் கூடாது.

'கிராம நலத்'தின் 'தொழிலாளர் இதழ்' தொழிலாளர்களிடையே புதிய ஊக்கத்தையும் உற்சாகத்தை யும் தருவதாகுக! திரும்பவும் சொல் கிறேன்—நானும் ஒரு தொழிலாளி என்ற உணர்வோடு தொழிலாளத் தோழர்களுக்குச் சொல்கின்றேன்; நாம்தான் சமுதாயம்; சமுதாயம் தான் நாம். உலகம் நமக்காக! நாம் உலகத்துக்காக!

இதுவே, தொழிலாளர் வர்க்கத் தின் பண்பாடு!

வாழ்க தொழிலாளி!

*[சிறுசேமிப்பு நகரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? பந்தாரா நகரிலுள்ள 5426 குடும்பங்களனைத்தும் சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந் துள்ளன. இவர்கள் தொடங்கிய அஞ்சலகச் சிறுசேமிப்புக் கணக்கின் மொத்த எண்ணிக்கை 7,171. பந்தாரா நகரம் எவ்வாறு 'சிறுசேமிப்பு நகர'மாகப் பெயர்பெற்றது என்பதைத் தெளிவாகக் கூறுகிறார் ஓ.டி.எஸ். கோர்கடே என்ற மாவட்ட அலுவலர் — ஆசிரியர்.]*

பந்தாரா நகரையே (வட இந்தியா விலுள்ள ஒரு நகரம்) ஒரு சிறு சேமிப்பு நகரமாக மாற்றிவிட வேண்டுமென்ற ஆவல் என்னுள் பெருகத் தொடங்கிற்று. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற அலுவலர்கள் கூட்ட மொன்றில் என்னுடைய விருப் பத்தை எடுத்துரைத்தேன்.

இந்தப் பயனுள்ள உயரிய பணியை அலுவலர்கள் அனைவரும் மேற் கொண்டு, அந்நகரிலுள்ள குடும்பங் கள் அனைத்தையும் சிறு சேமிப்புத் திட்டத்தில் கொணரவேண்டு மென்று அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். மாவட்ட ஆட்சித் தலை வர் அலுவலகம், மற்றும் பந்தாரா வட்ட அலுவலகம் ஆகியவற்றி லுள்ள பணியாளர்களிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 9 எழுத்தர்கள் இப்பணிக் குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் களுக்குக் 'களப்பணியாளர்கள்' என்று பெயரிடப்பட்டது. ஒவ் வொரு களப்பணியாளரும் 60 முதல் 70 வீடுகளுக்குப் பொறுப்பேற்றுச் சிறுசேமிப்புத் திட்டங்களைப்பற்றி விளக்கிக் கூறி, அவர்களைத் திட்டத் தில் பயன்பெறச் செய்யவேண்டியது அவர்களின் தலையாய கடமையும் பொறுப்புமாகும்.

நவம்பர் திங்களில் மேற்கொள்ளப் பட்ட ஒரு கணக்கெடுப்பிலிருந்து, அந்நகர மக்களில் 22 சதவீதத்தினர் ஏற்கனவே சேமித்து வருகின்றனர் என்பது தெரியவந்தது. எனவே எஞ் சிய நகரவாசிகளை அணுகி, அஞ்சலகச் சேமிப்புக் கணக்கு அல்லது வளரும் சேமிப்புத் திட்டக் கணக்கைத் தொடங்கச் செய்ய வேண்டிய பணி கள் எல்லாம் டிசம்பர் திங்கள் முதல் வாரத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வியக்கத்தை மேற்பார்வையிடு வதற்கென, மாவட்டத்தில் இதர துறைகளில் பணியாற்றும் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளும் ஈடு படுத்தப்பட்டனர். இரண்டு அல் லது மூன்று அதிகாரிகள் ஒரு 'வார் டு'க்கு ஒதுக்கப்பட்டனர். அவர் களுக்குச் சமூகநல ஊழியர்கள் துணை நின்றனர்.

அலுவலகர்களும் பணியாளர்களும் இல்லங்கள்தோறும் சென்று, சிறு சேமிப்பின் சிறந்த குறிக்கோள்களை எளிய, இனிய முறைகளில் விளக்கிக் கூறினர். அஞ்சலகத்தில் சேமிப்புக் கணக்கு, அல்லது வளரும் சேமிப்புக்

# சிறு சேமிப்புக்கொரு நகர்

கணக்கு அல்லது இதர சிறு சேமிப்புக் கணக்குகளை நகர மக்கள் தொடங்கி, சிறிது சிறிதாகச் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்று அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

களப்பணியாளர்கள், அதிகாரிகளின் முயற்சி எவ்வளவு பயனைத் தந்ததென்பது ஒவ்வொரு வாரமும் திங்களன்று ஆராயப்பட்டது. சனவரித் திங்கள் 20 ஆம் நாள் முடிய 63 சதவீத மக்கள் சிறுசேமிப்பில் சேர்ந்திருந்தனர் என்பது தெரிய வந்தது.

1969ஆம் ஆண்டுக் குடியரசு நாள் நெருங்கிவிட்டது. இன்னும் 3 நாட்கள்தாம் எஞ்சி நின்றன. இதற்குள் சிறு சேமிப்பில் சேராத 2,100 குடும்பங்களையும் திட்டத்தில்சேர்த்து விட்டால், அம்மாநிலத்திலேயே பந்தாரா நகருக்கு, முதல் சிறு சேமிப்பு நகரமென்ற உயரிய நிலை கிடைத்துவிடுமல்லவா?

எனவே மாவட்டத் துணை ஆட்சித் தலைவரும், தாசில்தாரும் கலந்துரையாடி ஒரு முடிவிற்கு வந்தனர். மேற்கூறிய 2100 குடும்பத்தினரும் பிடிவாதமாகச் சிறுசேமிப்பில் சேர மறுத்துவிட்டனர். அவர்களையும் திட்டத்தின்கீழ்க் கொணர்ந்துவிட்டால், அந்நகரமே சிறுசேமிப்பு நகராகிவிடும். எனவே இரவு பகலாக அதிகாரிகள், களப்பணியாளர்கள் அனைவரும் ஒவ்வொரு வார்டிலுமிருந்த எஞ்சிய குடும்பங்களை அணுகினார். அவர்களின் இடையறாத முயற்சி பயனளிக்கத் தவறவில்லை.

குடியரசு நாள் மலர்ந்தது. நகர மக்கள் அனைவரும் சிறு சேமிப்பில் சேர்ந்து விட்டனர் என்ற மகிழ்ச்சிச் செய்தி எங்கும் பரவியது. நகரத்திலுள்ள 22 வார்டுகளிலும் வாழ்ந்த 5426 குடும்பங்கள் அனைத்தும் சிறு சேமிப்பில் கொண்டுவரப்பட்டன. 7171 சிறுசேமிப்புக் கணக்குகள் தொடங்கப்பெற்றன. அந்தக் கோட்டத்திற்கும், மாநிலத்திற்கும் பந்தாரா நகர் முதல் சிறுசேமிப்பு நகர் ஆயிற்று.

அன்றாட அலுவலக வேலைகளை முடித்துவிட்டுச் சிறுசேமிப்புப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு நகரக் குடும்பங்கள் அனைத்தையும் அத் திட்டத்தில் கொணர்ந்த பணியாளர்களின் உற்சாகம், முயற்சி மிகவும் போற்றத்தக்கது. அதிகாரிகளும் இதில் பங்கு பெற்று உழைத்தது மேலும் சிறந்ததாகும்.

**நாளொன்றுக்கு ஒரு ரூபாய்கூடச் செலவிடுவதில்லை !**

இந்திய மக்களிலே மூன்றில் ஒருவர் மிக மிக ஏழை. அவர் கிராமத்திலே வாழ்ந்தால், அவர் ஒரு திங்களுக்குச் செலவிடுவது ரூ. 15 மட்டுமே; நகரத்தில் வாழ்ந்தால் மேலும் ரூ. 9 அதிகமாக செலவிட்டுத் தன் வாழ்க்கையைத் தள்ளுகிறார். இந்த இருபதாண்டுக் காலத்தில் பொருளாதார நிலை வெகுவாக வளர்ச்சி அடைந்திருப்பினும், மூன்றில் ஓர் இந்தியரின் நிலை இதுவே.

நாளொன்றிற்கு ஒரு ரூபாய்க்கும் குறைவாகச் செலவிடுபவர்கள் 80 சதவீத மக்களாவார்கள்.

இத்தன்மையில் கேரள மாநிலம் முதன்மை வகிக்கிறது: இங்குள்ள 44·4 சதவீத மக்கள் நாளொன்றுக்கு ஒரு ரூபாய்கூடச் செலவிடுவதற்கு வழியில்லை. மைசூர் மக்களில் 44 சதவீதத்தினரும், ஆந்திராவிலுள்ளவர்களில் 41·8 சதவீத மக்களும் நாளொன்றுக்கு ஒரு ரூபாய்க்குக்கூட வழியில்லாதவர்களாயுள்ளனர். ஒரு ரூபாய்க்கும் குறைவாகச் செலவிடும் மக்கள் வாழும் இதர மாநிலங்கள்: உத்திரப் பிரதேசம் 39%, மத்தியப்பிரதேசம் 37%, மகாராஷ்டிரம் 35 9%, பீகார் 35·30%, இராஜஸ்தான் 34·2%



# அவனைத்தான் வணங்க வேண்டும்

கவிஞர் பொன்னடியான்

புகழ்பொருளுக் கேங்காமல்; காய்ந்து தீய்ந்து
பொழுதெல்லாம் உழைப்பதற்கும் சலித்தி டாமல்
இகழ்ச்சியினால் ஏசலினால் ஏய்ப்பி னாலிங்(கு)
எதிர்ப்போரின் எதிர்ப்புக்குக் கலங்கி டாமல்
மகிழ்ச்சியெனில் என்னவென்றே அறியா வண்ணம்
மறத்துப்போய் நமக்காக வாழ்கின் றானே
அகத்துணர்வால் அவனைத்தான் வணங்குகின்றேன்-
**அவனைத்தான் இனிஉலகம் வணங்க வேண்டும்**

குளிரென்றும் கொளுத்துகின்ற கோடை என்றும்
கொட்டுகின்ற மழைஎன்றும் பார்த்தி டாமல்
உளியைப்போல் இம்மனிதப் பாறை கட்கே
உருக்கொடுத்தே உயிர்கொடுத்தே மலர வைத்துக்
களிநடன அரங்காகச் சோலை யாகக்
காட்சிதரும் வகையுலகைச் செய்கின் றானே
அளியுணர்வால் அவனைத்தான் வணங்குகின்றேன்-
**அவனைத்தான் இனிஉலகம் வணங்க வேண்டும் !**

ஆசைக்குள் அடங்காமல்; பற்றுப் பாச
அரவணைப்பில் முடங்காமல்; மகிழ்ச்சி என்னும்
ஓசைக்குள் ஒடுங்காமல்; களைப்புத் தீர்க்கும்
ஓய்விற்குள் உறங்காமல்; முறுக்கி விட்ட
மீசையைப்போல் முறுக்கேறும் தோள்க ளாலே
மென்மேலும் தனைத்தந்தே உழைக்கின் றானே
ஆசையறுத் தவனைத்தான் வணங்கு கின்றேன்
**அவனைத்தான் இனிஉலகம் வணங்க வேண்டும் !**

# பெருமதம் மறந்தது

## டாக்டர் மு. வரதராசனர்

நண்பர் ஒருவர் உடம்புக்கு நல்லது என்று தவருகக் கருதிக்கொண்டு இளமையில் நாள்தோறும் வேப்பிலே தின்று வந்தார். அவ்வாறே, இன்னெருவர் எட்டிக்காயைச் சிறுகச் சிறுகத் தின்று வந்தார். உடம்பின் நன்மைக்காக என்ற நம்பிக்கையோடு எவ்வாருே கசப்பை விழுங்கி வந்தார்கள். ஆனல் உடம்பில் நன்மைக்காக இயற்கை ஒரு காப்பைப் படைத்துள்ளது. குடலுக்குள் வேண்டாதவை செல்லாதபடி ஒரு வாயில் காவலனுக நாக்கு அமைக்கப்பட்டுள்ளது. அந்த வாயில் காவலனுக்கு அளவு கடந்த சுவையாகிய கையூட்டுக் (லஞ்சம்) கொடுத்தும் பலர் கெடுத்துவிடுகிருர்கள். அந்த நண்பர்களோ அந்தக் காவலனுகிய நாக்கை எதிர்த்துக் கொடுமைப்படுத்தி அடக்கித் தவறு செய்கிருர்கள். நாக்கு எவ்வளவோ மறுத்தும் பொருட்படுத்தாமல் கசப்பு மிகுந்த வேப்பிலேயையும், எட்டிக்காயையும் குடலுக்குள் தள்ளி வந்தார்கள். அதனல் அவர்கள் பெற்ற நன்மை என்ன? தேள் முதலிய நச்சுப் பூச்சிகள் கொட்டினுலும் கடித்தாலும் நஞ்சு வேலே செய்யாத நிலேயைப் பெற்ருர்கள். அது ஒரு சிறு நன்மையே. இவர்களின் கொடிய செயலால் - அடக்கு முறையால்-அவர்கள் அடைந்த தீமை பெரியது. நாற்பது வயதை எட்டும் போதே அவர்கள் நரம்புத் தளர்ச்சி அடைந்தார்கள்; அறிவுக் கூர்மை இழந்தார்கள்; பைத்தியத்தின் எல்லேயில் நின்ருர்கள்; வருந்தத்தக்க வகையில் அவர்களின் வாழ்க்கை முடிந்தது.

சில அறுவைச் சிகிச்சைகள் செய்வதனுலும் இவ்வாறு உடம்பைக் கெடுத்துக் கொள்வோர் உண்டு. தவருன போக்கில் திரும்புவதால் ஏற்படும் இத்தகைய விளேவுகள் பிறகு பொல்லாதவைகளாக உள்ளன.

தனி ஒருவரின் உடல் வளர்ச்சியில் காணும் இந்த உண்மையைச் சமுதாய வளர்ச்சியின் அமைப்பிலும் காணலாம். சமுதாயத்தின் மேல் நிலேயில் - பொறுப்பான நிலேயில் - உள்ள சிலர் எப்போதோ செய்யும் தவறுகள் வழி வழியாக நெடுங்கால இடையூறுகளாக நின்று விடுகின்றன. அவற்றை மாற்றியமைக்கப் பெரும் புரட்சி தேவையாகிறது. தொழிலாளர்களின் வாழ்வுபற்றிய வரலாற்றில் இதைத் தெளிவாக உணரலாம்.

பழங்கால மனிதன் கையுங் காலுங்கொண்டு உழைத்து உணவு தேடி உண்டான்; உடை முதலியவை செய்து கொண்டான்; வீடு கட்டி வாழ்ந்தான். தொழில் செய்வது வாழ்வுக்கு இன்றியமையாதது என்ற நிலேமை அக்காலத்தில் இருந்தது. தொழில் செய்கின்றவனுக்கு மட்டுமே வாழ உரிமை இருந்த காலம் அது.

பல வீடுகள் அமைந்த ஊர்களும், பல ஊர்கள் கொண்ட நாடும் ஏற்



தமிழகத்திலே 'பசுமைப் புரட்சி' காணத் தன் உழைப்பு முழுதும் நல்கி, தமிழர்தம் நெஞ்சங்களிலெல்லாம் என்றும் பசுமையாகவே நின்று நிலவிவிட்ட நல்லவர்-மறைந்துவிட்ட மாண்புமிகு உணவு-விவசாய அமைச்சர்-பண்பாளர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கட்குக் 'கிராம நலம்' தன்னுடைய அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறது.



1. மறைந்த உணவு-விவசாய அமைச்சரின் உடல் மீது தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் மலர் வளையம் வைத்தார்.



2. அலங்கார இராணுவ வண்டியில் உணவமைச்சரின் இறுதி யாத்திரை.



3. இடுகாட்டில் உணவமைச்சரின் உடலுக்கு எரியூட்டியபோது, அனைத்துக் கட்சித் தலைவர்களும், அமைச்சர் பெருமக்களும் தம் அஞ்சலியைச் செலுத்தினர்.



பட்ட காலத்தில், ஊர்களின் பாதுகாப்புக்கும் நாட்டின் பாதுகாப்புக்குமாகத் தனியே படை தேவையாயிற்று. அந்தப் படையின் வீரர்களும், போர்செய்யுங் காலத்தில்மட்டுமே வேறொரு தொழில் செய்யாமல் வாழ முடிந்தது. போர் இல்லாத காலத்தில் அவர்களும் உழவு முதலான தொழில்களில் ஈடுபட்டார்கள். அந்தக் காரணத்தால்தான் மழைக் காலத்திற்கு (கார் காலத்திற்கு) முன்னமே போரை முடித்துக் கொள்வதும், முடியாவிட்டால் நிறுத்திவிடுவதும் மரபுகளாக இருந்தன. படை வீரர்களும் தொழிலாளிகளாக விளங்கிய காலம் அது.

ஊர்களுக்குக் காவலாகப் படை வலிமை தேவை இருந்ததுபோல், அறிவு வலிமையும் தேவையாக இருந்தது. அறிவுத் துறையில் சிலர் நல்ல வளர்ச்சி பெற்று விளங்குவதைக் கண்டு பலர் அவர்களுடைய அறிவைப் பயன்படுத்திக்கொண்டால் போதுமென்று அமைதியாக இருந்தனர். அத்தகைய அறிவாளிகளும் தொடக்கத்தில் மற்றவர்களைப்போல் வேறு தொழில் செய்து உழைத்து வந்தார்கள். வரவர வேறு தொழில்களுக்கு நேரம் கிடைக்காமையால், அறிவால் உழைப்பதும் ஒரு தொழிலாகக் கொள்ளப்பட்டது. அறிவின் உழைப்புக்கும் ஊதியம் தரப்பட்டது.

காலப்போக்கில் தொழிலாளிகள், அறிவாளிகள் என்ற வேறுபாடு ஏற்பட்டது. சமுதாயத்தில் அறிவாளிகள் மதிப்பும் நன்மையும் மிகுதியாகப் பெற்றார்கள். உழைக்காமலே வாழ்வது பெருமை என்று எண்ணிவிட்டார்கள். அவர்கள் அதோடு நிற்கவில்லை. தொழிலாளிகளைத் தம்மைப் போன்ற மனிதர் என்று எண்ணாமல் ஆடுமாடுகள் போல் மந்தையாக எண்ணிவிட்டார்கள். நாட்டை ஆளும் தலைவர்களின் பக்கமாக இருந்துகொண்டு தொழிலாளிகளுக்குச் சிறுமைகள் ஏற்படுத்தினார்கள். நண்பர்களின் உடல் வேம்பையும் எட்டியையும் ஏற்று நொந்ததைப்போல் தொழிலாளிகளின் கூட்டமும் ஆள்வோரின் கொடுமையையும் அறிவாளிகளின் சிறுமையையும் ஏற்று நொந்தது; வாடியது; நைந்தது.

இவ்வாறு நோயுற்ற சமுதாயம் சீர்ப்படுவதற்கு ஒருவழி பிறந்தது. அறிவியல் முன்னேற்றத்தால் யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கடினமான உழைப்பையெல்லாம் யந்திரங்கள் ஏற்றுக்கொண்டன. தொழிலாளிகள் மாடுகள் போல் உழைக்கவேண்டிய தேவை இல்லாமல் போயிற்று. சிந்தனைக்கு-அறிவின் வேலைக்கு நேரம் கிடைத்தது; ஆற்றலும் வாய்த்தது. தொழிலாளர்களிடையே புதுப்புது எண்ணங்கள் எழுந்தன. அவைகளே புரட்சிக்கு வித்தான எண்ணங்கள். அந்த எண்ணங்களைத் திரட்டவும் பயன்படுத்தவும் அவர்களுக்குள்ளிருந்தே அறிஞர்கள் தோன்றினார்கள். அவ்வாறு தோன்றியதே உலக வரலாற்றில் காணும் தொழிலாளர் புரட்சியாகும். மேதினப் புரட்சியின் அடிப்படை இது. அதுவரையில் அறிவு, தொழிலாளர்கட்கு எதிர்ப்பாகத் தன்னலத்திற்குப் பயன்பட்டது. தொழிலாளர் விழித்தெழுந்தபின் அந்த அறிவு, தொழிலுக்கு அரணாகத் தற்காப்புக்குப் பயன்படத் தொடங்கிவிட்டது. கவிஞர்களும் இந்த உண்மையை உணர்ந்து தொழிலாளர்களைப் போற்றிப் பாடத் தொடங்கி விட்டார்கள்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்
தனை செய்வோம்—வீணில்
உண்டு களித் திருப்போரை நிந்தனை
செய்வோம்.'

என்றார் பாவேந்தர் பாரதியார்.

'நீர்நிறைந்த கடலையொக்கும்
நேருழைப் பவர்தொகை
நீர்நிறைந்த தோணியொக்கும்
நேர்முதல்கொள் வோர்தொகை'

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

ஆகவே, தொழிலாளர் பெருமிதத்தோடு வாழ்வதற்குரிய காலம் இது. மற்றவர்கள் தோணிகள்; தோணிகளைக் கவிழ்க்கவும் வல்ல கடல் நாம் தான் என்று உணரும் உரிமையுள்ள காலம் இது. உழைப்பு இல்லாமல் வாழ்கின்றவர்கள் நிந்தனைக்கு உரியவர்கள்; நாம்மட்டுமே வந்தனைக்கு உரியவர்கள் என்று தொழிலாளர் புத்துணர்ச்சி பெறும் காலம் இது.

வளர்க தொழிலாளர்கள் நன்மைகள்!

# தேசீயப் பேரணியில் சீரணிகொள் ஊரணி

— பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் —

*பாரணியான நம்பைந்தமிழ்நாட்டில்*
*தொல்பண்புகளே*
*நேரணியாக நிமிர்ந்து புதுமை*
*விஞ்ஞானங்களின்*
*சீரணியாகச் செழுமைச் சிங்காரப்*
*பைம் பூம்பொழிலார்*
*பேரணியாகப் பிறங்குக நாட்டின்*
*சிற்றூர் அணியே!*

கீழ்திசை நாகரிகங்கள் பொதுவாகவும், நம் இந்திய, தமிழக நாகரிகங்கள் சிறப்பாகவும் சிற்றூர் நாகரிகங்களாகவே தொன்று தொட்டு விளங்கிவந்துள்ளன என்று பெருந் தலைவர்கள், பேரறிஞர்கள் கூறுவதுண்டு. இது முழு உண்மையன்று. பேரளவான உண்மை கூட அன்று. அண்மைக் கால, இடைக்கால நிலைகளை மனத்தில் கொண்டு கூறப்பட்ட ஊகஇழைகள் மட்டுமேயாகும்.

பண்டைத்தமிழகத்திலும்சரி, பண்டைக்கால இந்தியாவிலும் சரி, முடியாட்சி தோன்றுவதற்கு முற்படக் குடியாட்சிகள் எங்கும் நிலவியிருந்தன. சேரநாட்டாட்சி கிட்டத்தட்ட பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் வரை சிறு குடியரசுகளின் மீது கட்டமைக்கப்பட்ட ஒரு பெரும் கூட்டுக் குடியாட்சியாகவே இருந்தது. சேர்ந்த அரசுகள் பலவற்றின் தலைவன் என்ற முறையிலேயே சேர மன்னன் சேரன் எனப்பட்டான் என்பது அறிஞர் தேவநேயப்பாவாணர் கருத்து. ஏழு அரசுகள் சேர்ந்தே சேரரும், ஐந்து அரசுகள் சேர்ந்தே பாண்டியரும், சோழரும் அமைந்தனர் என்றும், கோதை, பொறையன், அந்துவன் முதலிய சேரர் பெயர்களும், செழியன், பழையன், பாண்டியன், வழுதி போன்ற பாண்டியர் பெயர்களும், செம்பியன், சென்னி, வளவன் போன்ற சோழர் பெயர்களும் அவர்கள் மூலவரான குடியரசுத் தலைவர் பெயர்களே என்றும் அவர் கூறுவர்.

வடக்கிலும், ஆந்திரப் பேரரசரும் கலிங்கப் பேரரசரும், கௌதமபுத்தர் பிறந்த சாக்கிய மரபும் குடியரசுக் கூட்டுக்களேயாகும். ஆந்திர நாட்டில் குறும்பர் என்ற குடியரசுகள் கூட்டாட்சி செய்து அயல் நாடுகளுடன் வளமான கடல் வாணிகம் செய்ததன் காரணமாக, தங்கள் நாணயங்களில் கப்பல் உருவையே சின்னமாகக் கொண்டன.

சங்க காலத்தில் மதுரையும் காவிரிப்பூம்பட்டினமும் நகராட்சிகளாகவே நிலவின. வடக்கில் குப்தர் காலத்தின் முன்னும் பின்னும் வைசாலி போன்ற நகரக் குடியரசுகளும், லிச்சாவியர் போன்ற கூட்டுக் குடியரசுகளும் நிலவின.

தமிழில் நாடு என்ற சொல்லும், சமஸ்கிருதத்தில் ஜனபதம் என்ற சொல்லும், தொடக்கத்தில் கிரேக்க நாகரீகத்தில் காணப்பட்ட நகரரசு அல்லது நகர்-நாடு (City-State) நிலைமையைக் குறித்தன. குடியரசுத் தலைவர் தமிழில் வேள் என்றும், தெலுங்கு, கன்னடத்தில் சளுக்கர் என்றும், சமஸ்கிருதத்தில் குலபதி, ஜனவர், ஜனபதி என்றும் அழைக்கப்பட்டார்.

பண்டைத் தமிழரும், பண்டை இந்தியரும் இவ்வாறு பல சிறு குடியரசுகளின் கூட்டாகவும், பல குடியரசுத் தொகுதிகளின் கூட்டாகவுமே நிலவின. குடியரசுத் தொகுதிகளே பிற்காலத்தில் முடியரசுகளாயின. ஒவ்வொரு குடியரசிலும் மையம் ஒரு நகரம், நகரக் குடியரசு. சூழ ஒவ்வொரு சிற்றூரும் ஒரு சிற்றூர்க் குடியரசாக அதனுடன் இணைந்திருந்தது.



சிற்றூர்கள் நேரிலும், நாடு கிளை மூலமாகவும் தலைவரைத் தேர்ந்தெடுத்தன.

கடலோரமாக இருந்த குடியரசுகளில் தலைநகர மன்றக் கடற்கரை நகரம் ஒன்றும் இருந்தது. பிற்கால முடியரசுகளிலும் சங்க காலத்திலும் இம் மரபைக் காண்கிறோம்.

சங்க காலம்வரை, வடதிசை மௌரியர் காலம், கனகன் (கனிஷ்கன்) காலம்வரை, தமிழக, இந்திய நாகரிகம் சிற்றூர் நாகரிகமாக இல்லை. நகர நாகரிகமாகவே இருந்தது. கடற்கரை நகரங்களாகிய பட்டினங்கள் இதனை உலக நாகரிகம் ஆக்கிற்று. நாகரிகம் என்ற தமிழ்ச் சொல்லும் அதற்கான ஆங்கிலச் சொல்லும் (Civilisation) கூட இவ்வரலாற்றுண்மைக்குச் சான்று ஆகும்.

இந்தியாவில் சாகர், ஹூனர், மங்கோலியர் ஆகியோர் படையெடுப்பின் பின்னும், தென்னகத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்க காலத்திலும் தான் நகரங்கள் அழிந்து சிற்றூர் நாகரிகம் ஏற்பட்டது.

பண்டை நாகரிகத்தில் பட்டினங்கள் தலைமை ஏற்றன. நகரங்களும், சிற்றூர்களும் அதில் பங்கு கொண்டன. ஆனால், பண்டை நகரங்கள், பட்டினங்கள் இன்றைய நகரங்கள், பட்டினங்களைப்போலச் சிற்றூர்களைச் சுரண்டியும் வெளி நாட்டு நாகரிகங்களுக்கு அடிமைப்பட்டும் வேறுவேறாகத் திகழவில்லை. சிற்றூர்களின் வளமும் நகரங்களை வளர்த்தன. நகரங்களின் நாகரிகம் சிற்றூர்களை வளர்த்தது.

நாகரிகம் குன்றிய அயல் இனங்களின் அழிபாடுகளுக்கு ஆளாகியும் அயலாட்சிக்குட்பட்டுமே, இந்திய நாகரிகம் கி.பி. 7ஆம் நூற்றாண்டின் பின்னும், தெற்கே தென்னக தமிழ் நாகரிகங்கள் கி.பி. 16-ம் நூற்றாண்டின் பின்னுமே சிற்றூர்களின் சிறு நாகரிகங்களாகவும் இக்கால நகரங்களின் போலி நாகரிகங்களாகவும் சிதறுண்டன.

பழைய நகர - சிற்றூர் வாழ்வுகள் இரண்டும் தேசிய நாகரிக வாழ்வுகள். இன்று இரண்டும் இரு வேறு போலி நாகரிகங்கள். அவை முன்போல் ஒன்றை ஒன்று வளர்க்காமல், இன்னும் ஒன்றை ஒன்றே அழித்தே வருகின்றன.

தமிழ்த் தேசியம், பாரத தேசியம் இரண்டும் இனித்தான் உண்மைத் தேசியமாக மலரவேண்டும். கிராமங்கள் செல்வத்தின் பிறப்பிடமாகவும், நகரங்கள் கலையியல்களின், நாகரிகத்தின் பிறப்பிடமாகவும், பட்டினங்கள் உலக நாகரிகப் பரிமாற்றங்களாகவும் அமையும் நாளே, பாரதம் உண்மை விடுதலை பெறும் நாள். தமிழகம், பண்டைச் சங்கத் தமிழகம் ஒத்த செம்மாந்த தமிழகம் ஆகமுடியும்.

தமிழகத்தையும், இந்தியாவையும், உலகையும் இந்த பழம் பெருமைச் சீரணியில் நடைபோட வைக்கப் பாடுபட்ட நம் எழுச்சிக் கதிரவச் செம்மல் அறிஞர் அண்ணா - அவர் புகழ்-இன்றும் நம் அருட்குவை முதல்வர் கருணாநிதி உருவில் நம்மை நடத்திச் செல்ல இருக்கிறது.

தமிழக, பாரதச் சிற்றூரும், நகரும், பட்டினமும் தனித்தனிச் சீரணிகளாய், மூன்றும் ஒன்றையொன்று வள நிறைவுபடுத்தி ஒரே தேசியப் பேரணியாய்த் திகழும் நாளே, நம் தமிழகத்தின், இந்தியாவின், உலகின் பொன்னாள்!

*அந்நாள் விரைவில் ஏகுக!*

> வீரம், எதையும் தாங்கும் திறன்,
> அஞ்சாமை, எல்லாவற்றுக்கும்
> மேலாகத் தியாகம் ஆகியவைகள்
> தான் நம் தலைவர்களின் இயல்புகள்
> — காந்தியடிகள்

அமெரிக்கா:

ஏறத்தாழ 185 இலட்சம் அமெரிக்கர் உற்பத்தித் தொழிச்சாலைகளில் வேலையில் உள்ளனர். பத்து இலட்சம் ஊழியர்களுக்கு மேல் வேலை செய்யும் பெருந்தொழில்களுள் போக்கு வரத்து இயந்திரச் சாதனங்கள், பொதுவான இயந்திரங்கள், மற்றும் மின்விசை இயந்திரங்கள், உணவுகள், உணவுப் பொருள்கள், ஆடையணிகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் தேவைக்கு ஏற்றபடி உருவாக்கப்பட்ட உலோகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்கள் அடங்கும்.

வரலாற்றிலேயே மிகச் சிறந்த ஊதியம் அளிக்கப்படும் ஊழியர் இன்றைய அமெரிக்கத் தொழிலாளிதான். இத்துடன்கூட முதுநிலை உரிமைகள், ஊதியத்துடன் கூடிய விடுமுறைகள், ஊதியத்துடன் கூடிய ஓய்வு விடுமுறைகள், நிர்ணயவேலை நேரங்கள், நிர்ணய வேலைக்குமேல் வேலை செய்தால் அதற்காகத் தனியான ஊதிய விகிதங்கள், வேலை நேர மாற்றங்களுக்கான அனுகூலங்கள் ஆகியவையும் அவருக்குக் கிடைக்கின்றன. கூட்டாகச் சேர்ந்து இயங்கியதில் கிடைத்த ஆதாயங்கள் இவை.




தொகுத்தவர்: திரு பி. வி. கிரி

அமெரிக்கத் தொழில்துறை முழுவதிலும், தொழில் நிர்வாகப் பயிற்சிக்குப் பெருமளவு முக்கியம் அளிக்கப்படுகிறது. வியாபார நிர்வாகத்துக்கான ஹார்வர்ட் பள்ளி போன்ற பட்டமளிக்கும் பள்ளிகள், இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களைத் தொழில் திறனுள்ளவர்களாக ஆக்குகின்றன.

1933ஆம் ஆண்டு முதல், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே கூட்டுறவு வலுத்து வருகிறது. இது தொழிலாளர்களுக்கு இணை சொல்லமுடியாத அளவு முன்னேற்றத்தை அமைத்திருக்கிறது. 1933ஆம் ஆண்டில் தொழிற் சங்கங்களின் அங்கத்தினர்கள் எண்ணிக்கை 30 இலட்சம்தான்; ஆனல். இன்றோ, சுமார் 175 இலட்சம் தொழிற்சங்க அங்கத்தினர்கள் உள்ளனர். தேசிய அளவில் அமைந்த 181 தொழிற் சங்கங்களிலும், அந்தந்த வட்டார அளவில் அமைந்த 77, 610 தொழிற் சங்கங்களிலுமாக இவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

சோவியத் யூனியன்:

சோவியத் யூனியனில் 200,000க்கு மேற்பட்ட ஆலைகளும், தொழிற்சாலைகளும், மின்விசை நிலையங்களும் சுரங்கங்களும் உள்ளன.

உல்லன், லினன் துணிமணிகள் உற்பத்தியிலும், துரித வேகத்தில் வளர்ந்துவரும் பருத்தித் துணிமணிகள் உற்பத்தியிலும் சோவியத் யூனியன் உலகில் முதலிடம் வகிக்கிறது. 1965இல் 710 கோடி மீட்டர் நீளங்கொண்ட (550 கோடி சதுர மீட்டர் அளவுகொண்ட) துணிமணிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

ஆண்டுதோறும் சுமார் 700,000 மோட்டார் சைக்கிள்களும், ஸ்கூட்டர்களும் உற்பத்தியாகின்றன. நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தின் போது இவை 1·5 மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சைக்கிள் வண்டிகள், மோட்டார் சைக்கிள் வண்டிகளின் ஆண்டு உற்பத்தி 40 இலட்சத்தை எட்டிவிட்டது.



வெண்ணெய், பால் உற்பத்தியில் சோவியத் யூனியன் எல்லா நாடுகளையும் விஞ்சி விடுகிறது. இங்கு மொத்தப் பால் உற்பத்தி 7·5 கோடி டன்களை எட்டியுள்ளது. இது ஆள் ஒன்றுக்கு ஆண்டுதோறும் சுமார் 300 முதல் 350 லிட்டர் வரையிலும் கிட்டும் அளவுக்குச் சமானமாகும். குவளை (டப்பா) உணவுப் பண்டங்களின் உற்பத்தி 1913ஆம் ஆண்டின் அளவைக் காட்டிலும் 60 மடங்காக உயர்ந்துள்ளது. இன்று ஆண்டுதோறும் 700 கோடிக்கு மேற்பட்ட உணவுப் பண்டக் குவளைகள் உற்பத்தியாகின்றன.

பிரிட்டன்:

பிரிட்டன் உலகத்தின் தொழிற் கூடமாகஇருக்கிறது. கச்சாப்பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் இறக்குமதி செய்துகொண்டு பல வகைச் செய்பொருள்களை உலகின் பல பகுதிகளுக்கும் அனுப்புகிறது.

தொழிற்றுறையில் பிரிட்டன் முன்னணியில் நிற்கிறது. பிரிட்டிஷ் தொழிற்சாலைகள் நவீன வசதியுடையவை. பிரிட்டன் தயாரிக்கும் மோட்டார் கார்கள், டிராக்டர்கள், சைக்கிள்கள், மின்னணுப் பொறிகள், பொறிகள் முதலியவற்றை உலக நாடுகள் விரும்பி வாங்குகின்றன. உலகப் புகழ்பெற்ற விமானங்கள், ரெயில் எஞ்சின்கள், மின்சாரச் சாதனங்கள், இயந்திரக் கருவிகள் எல்லாம் பிரிட்டிஷ் தயாரிப்புகளே. பிரிட்டன் தயாரிக்கும் பருத்தி, கம்பளி ஆடைகள் உலகப் பிரசித்தி பெற்றவை.

கனடா:

1878 முதல் கனடாவில் சுரங்கத் தொழில்களும் 1904 முதல் பிற தொழில்களும் தொடங்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆயினும் இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள பொருள்களை அமெரிக்காவும், இங்கிலாந்தும் கனடாவில் வாங்கின. அதனல் நூற்றுக்கணக்கான புதிய தொழில்கள் கனடாவில் ஏற்பட்டன.

வெளிநாட்டு வாணிகத்தில் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா இம்மூன்றுக்கும் அடுத்துப் பெரிய அளவில் பொருள்களைக் கனடா ஏற்றுமதி செய்து வருகிறது. காகித ஏற்றுமதியிலும் உற்பத்தியிலும் கனடாவுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை. மின்சார உற்பத்தியில் உலகில் உயர் நிலையில் இருப்பது அமெரிக்கா. அடுத்தது கனடா.

சுவீடன்:

சுவீடனுக்கே சிறப்பாக உரியவை காகித ஆலைகளும், பீங்கான் தொழிற்சாலைகளும் ஆகும். 1940-க்குப் பிறகு எஃகுத் தொழிலும் பெருகியிருக்கிறது. சுவீடனில் 200 காகித ஆலைகள் இருக்கின்றன. தச்சு வேலையிலும்சுவீடிஷ்காரர்கள் சிறந்து விளங்குகின்றனர். மரச் செய்பொருள்கள் செய்யும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 800-க்கு மேற்பட்டதாகும்.

கரன்சி நோட்டு என்ற காகித நாணயத்தை உலகில் பரப்பியவர்களும் சுவீடிஷ்காரர்களே ஆவர். கரன்சி நோட்டு வெளியிட்ட முதல் நாடு சீன. ஆனல் திட்டவட்டமான ஓர் உருவத்தைக் கரன்சி நோட்டுக்குக் கொடுத்து, வங்கிகள் வாயிலாக அச்சிட்டது சுவீடனில்தான். சுவீடனில் தொழில் வளர்ச்சிக்குக் காரணம் அங்கு மரம் மிகுதி; எஃகு ஏராளம்; மின்சாரம் மலிவு.

67 வயதுடைய ஒருவர் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் போது, அங்கு அவருடைய மகன், பேரன் ஆகியோரும் வேலை பார்க்கின்றனர். மூன்று தலை முறையினர் ஓரிடத்திலேயே வேலையில் இருப்பது இங்குச் சாதாரண நிகழ்ச்சி.

பிரான்சு:

மக்கள் தொகையில் பிரான்சு, உலகில் 12ஆவது நாடு. ஆனல் அலுமினிய உற்பத்தியில் நான்காவதாகவும், எஃகு உற்பத்தியில் ஐந்தாவதாகவும் இருக்கிறது. அமெரிக்காவை விடக் கார்களை அதிகமான அளவு ஏற்றுமதி செய்கிறது. பல தலைமுறைகளாகக் கப்பல் வாணிகத்தால் சிறந்துள்ள இங்கிலாந்துக்குக் கப்பல்கள் கட்டிக் கொடுக்கிறது. மின்சாரக் கருவிகள், துணி, இரசாயனப் பொருள்கள் உற்பத்தி மிகவும்பெருகியிருக்கிறது. ஒரு கோடிக் கதிர்களும்,

மூன்று இலட்சம் தறிகளும் உள்ள 9,000தொழிற்சாலைகள் உள்ளன.

உழவரில் மூன்றில் இரு பங்கினர்க்குச் சொந்த நிலம் இருக்கிறது. குடும்பத்தினர் அனைவரும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். உயர்ந்த மது தயாரிக்க உதவும் திராட்சை வகைகளும், பிற பழங்களும், 'சென்டு' தொழிலுக்கு மணம் நல்கும் நறுமலர்களும் இந்நாட்டின் பிற உற்பத்திகள்.

**ஜப்பான்:**

ஜப்பானியர் சிறு தொழில்களில் சிறந்து விளங்குகின்றனர். 100க்கு 99 பேர் இத்தகைய சிறு தொழில் நிலையங்களில்தான் வேலை பார்க்கிறார்கள். பட்டுத்துணி, உலோகத்தகடு, அச்சுவேலை, பைனுகுலர், கடிகாரம், டெலஸ்கோப்பு, தோல், குடை, ஆணி, விளையாட்டுப் பொருள்கள் ஆகியவற்றைச் செய்வதற்காக எண்ணற்ற சிறு தொழிற்சாலைகள் ஜப்பானில் உள்ளன. இத்தகைய சிறு தொழில்களை அடிப்படையாகக் கொண்டு பெரிய தொழில்கள் அமைந்துள்ளன. அங்குத் தொழிலாளர் ஓய்வு எடுக்காமல் வேலை நாட்கள் எல்லாவற்றிலும் வேலைக்கு வந்தால் அதற்காகக் கூடுதலான சம்பளம் கொடுக்கிறார்கள். தொழிலாளியின் குடும்பத்தின் அளவு பெரிதாக இருந்தால் அதற்கென ஒரு சிறு அளவு அதிகமான சம்பளமும் வழங்குகின்றனர். இலாபம் ஆகியவற்றுக்கேற்ப 15% இலாபப் பங்கும் தொழிலாளர்க்கு உண்டு.

'வேலை நிறுத்தம்' என்பது ஜப்பானின் சிறு தொழிற்சாலைகள் கேள்விப்படாதது. மூன்று தொழிற்சாலைகள் மோட்டார் கார்களைச் செய்கின்றன. அந்தந்தத் தொழிற்சாலைகளுக்கு வேண்டும் சிறு சிறு உறுப்புப் பொருள்களைச் செய்துகொடுக்க 237 சிறு தொழிற்சாலைகள் உள்ளன.

(ஆதாரம்: அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யச் செய்தி நூல்கள்; மற்றும் சோமலெ எழுதியுள்ள 'உலக நாடுகள்')

### தொழிலாளர்களின்
### கடமை - கண்ணியம்-கட்டுப்பாடு

"திராவிட முன்னேற்றக் கழகம் கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளை வைத்திருப்பது போலவே தொழிலாளர்களுக்கும் அது தேவை என்று சொல்கிறார்கள். உண்மையாகவே தொழிலாளர்களுக்கும் அது தேவை என்பதை நான் பெரிதும் உணர்ந்து வரவேற்கிறேன்.

கடமை - பாட்டாளிகளுடைய கடமை, சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

அவர்களுடைய கண்ணியம், தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக் கொள்ளாததிலே இருக்கின்றது.

அவர்களுடைய கட்டுப்பாடு, தங்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்கு யார் எந்த மாதிரி முயற்சி எடுத்துக்கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கின்றது.

— அறிஞர் அண்ணா

# மீன் வளர்ப்போம்

இந்தியாவில் வேளாண்மை செய்யும் பரப்பை அதிகரிக்கச் செய்வதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே போல மீன் வளர்க்கும் நீர்ப்பரப்பும் நாளுக்கு நாள் அதிகரிக்கப்படவேண்டும். மீன் வளர்ப்புத் தொழில் ஓர் இயக்கம் போல வளருகின்ற நாள் எந்நாளோ, அந்நாளில் நம் உணவுப் பிரச்சினையில் பெரும் பகுதிக்குத் தீர்வு கிடைத்துவிடும்.

மீன் வளர்ப்பில் முதல் முக்கியத் தேவை நல்ல இன மீன் குஞ்சுகளாகும். மிக விரைவில் வளரக்கூடியதும் உண்பதற்கேற்றதுமான நல்ல இன மீன் வகைகள் இங்கு மிகவும் பற்றாக் குறையாக உள்ளன. நல்ல வகைகளை இலாபம் தரும் முறையில் வளர்ப்பதற்குப் புதுப்புதுத்தொழில் நுணுக்கங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் விரும்புகின்ற இன மீன்களில், குஞ்சுகளை உண்டாக்கும் பல நவீன முறைகள் ஆராயப்பட்டுக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. இந்த நவீன முறைகளில் குளங்களிலும், சிறுசிறு குட்டைகளிலும் மீன்களை வளர்க்கலாம். ஓர் இலட்சம் குஞ்சுகளை சுமார் 60 ரூபாய் செலவுக்கு மேற்படாமல் இம்முறையில் உற்பத்தி செய்யலாம்.

மீன் குஞ்சுகளை வெவ்வேறு இடங்களில் கொண்டு போய் வளர்ப்பதற்குக் குறைந்த செலவில் எப்படிக் கொண்டு போவது என்பதும் ஒரு பிரச்சினை. இடம் விட்டு இடம் அவற்றைக் கொண்டு போகும்போது அதிகமான மீன் குஞ்சுகள் இறந்து விடாதபடி எச்சரிக்கையுடனும், விரைவாகவும் எடுத்துச் செல்ல வேண்டும். நவீன முறைகளில் இப்போது மீன் குஞ்சுகளை எந்த இடத்திற்கும் சில மணி நேரங்களுக்குள் விமானம் மூலம் கொண்டு போய்ச் சேர்த்துவிட முடியும்.

முன்பெல்லாம் மீன் குஞ்சுகளை இடம் விட்டு இடம் கொண்டு செல்லும் போதும், பின்பு புதிய குட்டை, குளங்களில் அவற்றை வளர்க்கத் தொடங்கும்போதும் ஏராளமான மீன் குஞ்சுகள் மடிந்து வந்தன. இப்போது இடம் விட்டு இடம் செல்லும் போதுமீன் குஞ்சுகள் சாகாவண்ணம் பற்பல பாதுகாப்பு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. ஆனால் நீர் நிலைகளில் ஆரம்பத்தில் சாகும் குஞ்சுகளின் எண்ணிக்கையை மட்டும் இன்னும் முற்றிலும் வெற்றிகரமாகத் தடுக்க முடியவில்லை. இதிலும் முழு வெற்றி காண மேலும் மேலும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தியாவில் ஒரு ஹெக்டார் பரப்புள்ள நீர் நிலையில் ஆண்டொன்றில் 500 கிலோ கிராம் மீன்தான் கிடைக்கிறது. சீனா, மலேசியா முதலான நாடுகளில் இதே அளவு நீர் நிலையில் ஓர் ஆண்டில் 5,000 கிலோ கிராம் உற்பத்தி செய்துவிடுகிறார்கள். இவ்விதம் நம் நாட்டில் மிகக் குறைவாக உள்ள நிலையை மாற்றி உற்பத்தியைப் பெருக்க எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய வேறு சில நீரில் வளரும் உயிரினங்களும் இருக்கின்றன. பிரான், தவளை முதலியவை அவ்வகையைச் சேர்ந்தவை. இவற்றைப் பண்ணை முறையில் வளர்க்கும் ஆராய்ச்சிஇதுவரையில் இந்தியாவில் செய்யப்பெறவில்லை. இருந்தாலும் ஏற்கெனவே நாம்ஏனைய நாடுகளுடன் போட்டி போட்டு இவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பி, டாலர் சம்பாதித்து வருகிறோம். இயற்கையாக நமக்கு இப்போது கிடைத்து வரும் இந்த உயிரினங்கள் காலப்போக்கில் குறைந்து அழிந்து போய்விடாமல் இருப்பதற்காக அவற்றைப் பண்ணைகளில் பெருக்கம் செய்யும் முறைகளில் கவனம் செலுத்தவேண்டும். அறிவியல் முறையில் அவைகளை நீர்

நிலைகளில் பெருக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான திட்டங்களுக்கு இப்போது அடிகோலப்பட்டு வருகிறது.

இந்தியாவில் உப்பங்கழிகளும் உப்பு நீர் நிறைந்த இடங்களும் மிகுதியாய் இருக்கின்றன. இங்கெல்லாம் ஏற்ற வகையில் மீன் பண்ணை நடத்துவதற்கான வழிகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. இதனால் உற்பத்தி மிகக் குறைவாகவும் சேதம் மிக அதிகமாகவும் இருந்து வருகிறது. இத்துறையில் ஆராய்ச்சிகள் நடத்துவதற்காக மத்திய மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தினர் மேற்கு வங்காளத்தில் இரண்டு உப்பு நீர் மீன்பண்ணைகளை உண்டாக்கிப் பற்பல முறைகளையும் ஆராய்ந்து வருகிறார்கள். அரசும், பொதுமக்களும், விவசாயிகளும் மீன் வளர்ப்புத் துறையில் கவனம் செலுத்தினால் இந்திய சமுதாயத்திற்குச் சத்துள்ள துணை உணவு தரும் பணியில் பெரிய முன்னேற்றம் காணமுடியும்.

—:o:—

# நிலமங்கை சிரிப்பாள்

நம் உடல்மீது மெல்லிய ஈர்க்கினால் தடவும்போது உடல் சிலிர்த்து மயிர் எழுந்து நிற்பதை அறிவோம். நிலத்தாய்மீது கொழுமுனையாகிய தூவி படும்போது அவள் உடல் சிலிர்க்கிறது. அதனால் எழுந்து நிற்கும் உரோமத் தொகுதியே பயிர்கள் என்கிறார் மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்:

''தூவியால் தம்முடல் நீவிடில் சிரிக்கும்
சிறுமிய ரென்னஅச் செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனம் கூசி
உடல்குழைந் தெங்கும் உவப்புறு செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம் நகுவள்''

கொழுமுனையாகிய தூவியால் நிலத்தாயின் உடலை நீவிக்கொண்டே இருப்போம். அதனால் அவளும் சிரித்துக்கொண்டே இருப்பாள். நாமும் பல்வகை வளங்கொழிக்கும் பயிர்களைப் பெற்றுக்கொண்டே இருப்போம். நிலத்தாய்க்கு இடையறாது சிலிர்ப்பினை ஏற்படுத்திக்கொண்டே இருப்போமாக!

# நான் பயிரிடுவது ஐ.ஆர்-8 நெல்

**புதுவை உழவரின் அனுபவக் கூற்று:**

''என்னுடைய நான்கு ஏக்கர் நிலங்களிலும் இனி ஐ. ஆர்—8 நெல்லைத்தான் பயிரிடப்போகிறேன்; சிறிது அதிகமாகவே எனக்குச் செலவேற்படினும், அதனால் எனக்குப் பெரும் ஆதாயம் கிடைக்கிறது!'' என மகிழ்ச்சி ததும்பக் கூறுகிறார் பாண்டிச்சேரியிலுள்ள மேட்டுப்பாளைய உழவர் திரு. இராமலிங்கம் அவர்கள்.

ஏனைய உழவர்களெல்லாம் சாதாரண விதைகளைக்கொண்டு பயிர் செய்து ஏக்கருக்கு 25 மூட்டைகளே அறுவடை செய்கின்றனர். ஆடுதுறை—27 நெல்லைப் பயிரிட்டவர்களுக்குக் கூட 35 மூட்டைகள்தாம் விளைச்சல் கிடைத்திருக்கக்கூடிய நிலையில், திரு. இராமலிங்கம் அவர்களோ, ஐ. ஆர்—8ஐப் பயிரிட்டு 56 மூட்டைகளை அறுவடை செய்துள்ளார்.

வேளாண்மை அலுவலர்கள் கூறிய யோசனைகள் அனைத்தையும் தவறாது பின்பற்றி முறையாகப் பயிர் செய்ததால் அவருக்கு ஏக்கர் ஒன்றில் 4190 கிலோ மிகு விளைச்சல் கிடைத்துள்ளது.

''ஐ. ஆர்—8க்கு அதிக உரம் தேவை. அதை நோய்கள் தாக்காமலிருக்கப் போதிய முன்னேற்பாடுகள் செய்யவேண்டும் என்று வேளாண்மை வளர்ச்சி அலுவலரும், ஊர்ப்பணியாளரும் எனக்கு யோசனைகள் கூறினார்கள். அவ்வாறே செய்ததால் எனக்குப் பெரும் பயன் கிடைத்தது'' என்கிறார் அவர்.

ஓர் ஏக்கருக்கு அவர் 24 வண்டி பண்ணையுரமும், கலவையுரமும் இட்டார். தவிர 100 கிலோ ராக் பாஸ்பேட், 105 கிலோ அம்மோனியம் சல்பேட், 999 கலவையுர இனத்தில் 75கிலோ ஆகிய உரங்கள் ஓர் ஏக்கரில் போடப்பட்டன. ஆறுமுறைகள் பயிர்ப் பாதுகாப்பிற்கென மருந்து அடித்தார். ஐ. ஆர்-8ஐப் பயிர் செய்வதற்கு அவர் செலவிட்டது ரூ. 550. இது ஏனைய பயிர்களுக்கு அவர் செலவிட்டதைவிட ரூ. 250 மட்டுமே அதிகம். ஆனால் அவருக்குக் கிடைத்த மொத்த ஆதாயம் ரூ. 1700. இதில் செலவு போக எஞ்சிய ஆதாயமோ ரூ. 1150. நீங்களும் இந்த அரிய நெல் ஐ. ஆர்—8ஐப் பயிரிட்டு மிகு விளைச்சல் அடையலாமே!

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் — இங்கு
வாழும் மனிதரெல் லோர்க்கும்;
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் — பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்.
— பாரதியார்




இந்த மொயிதீன் இருக்கிருரே அவர் என்ன வேலை செய்திருக்கிருரென்று உங்களுக்குத் தெரியுமா?

ஓர் அழகான பெரிய வீட்டை முதலில் கட்டிக் கொண்டுவிட்டார். பிறகு வீட்டிற்கு முன்னுலுள்ள பரந்த இடத்தில் அழகான செடி, கொடிகளை நட்டு வளர்த்து, வெளி வாயிற்படியிலிருந்து வீட்டு வாசல் வரை புல்தரையை அமைத்துக் கொண்டு, அதில் படகுபோன்ற காரைச் செலுத்திக் கொண்டுவந்து வீட்டில் ஒயிலாக இறங்க வேண்டுமென்று எண்ணினுர். பகற்கனவல்ல; உண்மையாகவே நினைத்தார்.

பிறகு யோசனையிலாழ்ந்தார். அழகிய சோலைகளாலும், பசுமையான புல்தரையாலும் என்ன பயன்? 'அழகு அழகைத்தான் தரும். பயனைத் தராது' என்று தனக்குள் பேசிக் கொண்டார். மீண்டும் யோசனை!

இப்படிச் செய்தாலென்ன? ஐ. ஆர்-8 நெல்லைப்பயிரிட்டால் என்ன? அழகிற்கு அழகு; வீட்டிலுள்ளவர்களுக்கும் உணவு! செயலில் முனைந்தார்.




அதோ புறப்பட்டு வீதியிலே போகிருர், மொயிதீன்! எங்கே போகிருர்? அருகிலுள்ள ஓர் உழவரிடம் ஐ. ஆர்-8 விதைகளை வாங்கத்தான் போகிருர்.

விதைகளைப் பெற்றுவந்து வீட்டிற்கு முன்புள்ள 6 செண்ட் நிலத்தில் பயிரிட்டுவிட்டார். நடுவில் ஓர் ஊற்றை அமைத்தார். அவரது வீட்டில் மேலுள்ள நீர்த் தொட்டியிலிருந்து அந்த ஊற்றுக்குள் நீர் சென்று 6 செண்ட் பயிரிலும் அது அழகாக நீரைத் தெளித்த வண்ணமிருக்கிறது. இதனுல் அழகிற்கும் அழகு; பயிருக்கும் நீர்! வீட்டிலிருந்து கொண்டே ஊற்றின் அழகையும் ஐ. ஆர்-8 பயிரின் ஒய்யாரத்தையும் மாறிமாறிப் பார்த்து மகிழ்ந்தார். அளவிற்கு மிஞ்சிய நீரெல்லாம் சிமெண்டினுல் சுற்றிலும் கட்டப்பெற்ற வடிகால்மூலம் வெளியேற்றப்பட்டது. நாட்கள் பயனுள்ள முறையில் கழிந்தன. அறுவடை நாளும் மலர்ந்தது.




6 செண்ட் நிலத்தில் 150 கிலோ நெல் கிடைத்துவிட்டதே! அழகுச் செடிகளால், புற்களால் இந்த 150 கிலோ உணவைத் தரமுடியுமா?

மொயிதீன் எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத்தார். வீட்டிற்கு முன்னுலுள்ள 6 செண்ட்டில் தான் இப்போது பயிரிட்டாரல்லவா? இனி வீட்டைச் சுற்றிலும் நெல்லையே பயிரிடவிருக்கிருர். வட்டார அலுவலர்கள் அவரது செயலைப் போற்றிப் புகழ்ந்தனர். நாள் தவறினும் பார்வையாளர்கள்மட்டும் அவர் வீட்டிற்கு வராமலிருந்ததில்லை. அவரது 'வீட்டு வயலை'ச் சிறிது நேரம் உற்று நோக்கிய பின்னர் அவர்கள் உவகையுடன் திரும்புவர்; மொயிதீனையும் பாராட்டுவர். காரணம் வீட்டில் நெல்தோட்டம் போட்டவரல்லவா அவர்!

மொயிதீன் எர்ணுகுளம் மாவட்டத்திலுள்ள (கேரளம்) எடப்பள்ளி வட்டாரத்தைச் சார்ந்த திரிக்காராவில் வாழ்பவர்.

[தீவிர விவசாயம் (Intensive Agriculture) இதழிலிருந்து.]

# கடல் கடந்த நாடுகளில் தொழிலாளர்கள்

இரா. சனார்த்தனம் எம்.ஏ.,

மயிலாடும் சோலை எனப் புகழத் தக்க மலேசியாவும், சிங்கம் நிகர் செயல்வீரர் லீ சோனி பிரதமராக இருக்கும் சிங்கப்பூரும், பட்டாலேயும், வெளிநாட்டினரை வரவேற்கும் பாங்காலேயம், சிறந்து விளங்கும் 'தாய்' எனும் தாய்லாந்தும் கண்டு வந்தேன். தொழிலாளர் திருக் கரங்களின் வலிமையால், அந் நாடுகளில் வாழ்வு உயர்ந்திருப்பதை நான் காண முடிந்தது.

மலேசிய நாடு இயற்கை எழில் மிக்க திருநாடு. தமிழகத்திலிருந்து சில நூற்றாண்டுக் காலத்திற்கு முன் சென்று குடியேறிய தீரத் தமிழ் இளைஞரால்வளம் பெற்ற பெரு நாடு. நிறைந்திருக்கும் இரப்பர் தோட்டங்களில் பால் எடுத்துப் பிழைக்கும் தமிழர்களும், நகர்ப்புறங்களில் வணிகர்களாய்ச் சிறப்போடு வாழும் சீனர்களும், கிராமப்புறங்களில் அமைதியாக வாழ்ந்து, அரசு 1972 வரை அளித்துள்ள முதல் உரிமைக் குடிகள் என்ற உரிமையை அனுபவித்து மகிழும் மலாய்க்காரர்களும், பிற சிறுபான்மைக் கோவாணியர்களும், பிறரும் இந் நாட்டில் பெரும் அளவு இணைந்திருக்கிருர்கள்.

தொழிற்சங்க அமைப்பு, சீரோடு இந்நாட்டில் இயங்குகிறது. தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற முறையே பெரும்பாலும் பரவியுள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆன பெருஞ் சங்கம், தமிழ்த் தலைவர்களால் துவக்கப்பட்டுச் சிறப்போடு இயங்கி வருகிறது. தொழிலாளர் அனைவரும் இதில் இணைந்திருப்பதோடு, முதலீடு செய்து, தற்போது தொழிற்சங்கத்தின் சார்பில் 'எஸ்டேட்டுகள்' வாங்கும் அளவுக்கு வளர்ந்துள்ளார்கள். தோட்டத் தொழிலாளர் குழந்தைகள் பயிலப் பள்ளியும், தொழிற் கல்லூரியும், தங்கும் விடுதிகளும், உபகாரச் சம்பளமும் ஆக உதவிகள் இன்று பெருகியுள்ளன. திரு. நாயர் அவர்களும், தற்போது பினங் நகரிலிருந்து நாடாளு மன்றத்திற்குப் பெரும்வாக்கு வித்தியாசத்தோடு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. டேவிட் அவர்களும் தொழிலாளர் அணியில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.


தாய்லாந்தில் கடற்கரை ஓய்வு இடம்



சிங்கப்பூரில் கடலைத் தூர்த்து நிலமாக்குதல்.

தொழிலாளர் பிரச்சினைகளில் தொழிற்சங்க அமைப்புகள் நுணுகி ஆராய்ந்து செயல்படுகின்றன. முறையான அறிவிப்புகள், சுற்றறிக்கைகள், சங்கிலித் தொடர் போன்ற கிளைகள் தொடர்பு இவைகளே அவ்வமைப்புகளின் வெற்றிக்குக் காரணங்களாகும்.

விவசாயத்தில்மலாய்க்காரர்களும், வணிகத்தில் சீனர்களும், வேலை வாய்ப்பு நோக்கித்தமிழர்களும் இருந்தாலும், தொழிலாளர் அணியில்,கட்சி, இன வேறுபாடின்றி ஒற்றுமையுடன் செயல் படுகிறார்கள். வெவ்வேறு கிளைச் சங்கப் பொறுப்பாளர்களை ஆண்டுக்கொரு முறையேனும் ஒன்று திரட்டிப் பயிற்சி வகுப்புகள் நடத்தித் தொழிற்சங்க நடைமுறை விதிமுறைகளைப் பயிற்றுவிக்கின்றனர். இது பயனுள்ள செயலாக அமைந்துள்ளது.

மலேசியா அரசு, தற்போது காடுகளைத் திருத்தித் கழனிகளாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. புலி வாழ்ந்த காடுகள் தற்போது நெல் விளையும் வயல்களாக மாறிவருகின்றன. இதற்குத் திட்டமிட்டவர், துணைப்பிரதமர் திரு. துன் அப்துல் ரசாக்; அனுமதி வழங்கியவர் பிரதமர் துங்கு. சாகுபடிக்குப் புதிய நிலங்களை உருவாக்கி, விவசாயிகளைக் குடியேற்றி, தேவையான வசதிகளை வழங்கி, ஆரம்பகாலச் செலவிற்குப் பணஉதவியும் புரிந்து ஒரு விவசாயப் புரட்சியே அந்நாட்டில் நடந்து வருகிறது. அந்நாட்டில் எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் குறைந்த பட்ச ஊதியம் 85 வெள்ளி கிடைக்கிறது. (1 வெள்ளி சுமார் $2\frac{1}{2}$ரூபாய்)



ஈபோவில் அண்ணாவிற்கு வரவேற்பு- சீனிவாசகம் சகோதரர்கள் - அமர்ந்திருப்பவர் மறைந்த டி. ஆர். சீனிவாசகம்

தொழிலாளர்களிடமும் உழைக்கும் வர்க்கத்திடமும் மக்கள் முன்னேற்றக் கட்சி (ம. மு. க) செல்வாக்குப் பெற்றுள்ளது. இது ஈப்போ பகுதி அளவே பரவியுள்ளது. இதன் தலைவராகவும், ஈப்போ நகர மன்றத் தலைவராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் விளங்குபவர் டத்தோ சீனிவாசகம் எனும் புகழ்பெற்ற வழக்கறிஞர் ஆவார்; இவரது தம்பி டி. ஆர். சீனிவாசகம் வழக்கறிஞர் தொழிலிலும், அரசியலிலும் புகழ்பெற்றவராகத் திகழ்ந்தார். சீனர்களது பெரும் ஆதரவு பெற்றவராக வாழ்ந்தார். அண்மையில் காலமானார். இவர்தான் ஈப்போ நகரில் அமரர் அண்ணா நினைவாகப் பாலம் அமைக்க முடிவெடுத்துச் செயலாக்கிய நல்லவர்.

தொழிலாளர்கள் இந்நாட்டில் ஒற்றுமையோடு செயலாற்ற முக்கியமான காரணம், சமுதாயத்தில் மொழியாலோ, இனத்தாலோ புறக்கணிக்கப்படாததும் ஒன்றாகும். மலாய் மொழிக்குத் தற்போது முக்கிய இடம் வழங்கி, உரோமன் எழுத்துக்களில் மலாய் மொழி நகரெங்கும் காணப்பட்டாலும், தமிழும், சீனமும், ஆங்கிலமும் உடன் இடம் பெற்றிருப்பதால், சம உரிமை உணர்வோடு, அவர்கள் வாழக் காரணமாயுள்ளது.

சிங்கப்பூர்த்தொழிலாளிகள் துறைமுகத்திலும், புதிதாக அமைக்கும் பெரிய ஏரியிலும், கடலைத்தூர்க்கும் காரியத்திலும், புதிதாக உருவாகி வரும் பெரும் தொழிற்சாலைகளிலும்



அயராது பாடுபடுகிறார்கள். வேலை வாய்ப்பை உருவாக்குவதில் அரசு துணைபுரிகிறது. கார்களை வீதியில் நிறுத்தினால் கட்டணம் வசூலிக்கும் வேலையைத் தற்காலிகமாகச் சிலர் மேற்கொண்டுள்ளனர். அதில் பெண்களும் உண்டு. 'டோட்டோ' லாட்டரிச் சீட்டை வீதியில் விற்கும் வேலையும் சிலர் பெற்றுள்ளனர். 'ஓவர்டைம்' முறை ஒழிக்கப்பட்டு அதற்குப்பதில் அதிகமான ஆட்களை வேலைக்கமர்த்தும் வழக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது.

தொழிலாளர் நலனில் உள்ள அக்கறையோடு, தொழிலாளர்களுக்குச் சில கட்டுப்பாடுகளையும் அரசு வகுத்துள்ளது. அனுமதியில்லாமல் வேலைக்கு வராமல் போனாலோ, விடுமுறை தீர்ந்து குறித்த தேதியில் வேலைக்கு வந்துசேராது இருந்தாலோ வேலை நீக்கம் செய்யப்படுவது உறுதி. குடிசைகள் அழிக்கப்பட்டுத் தொழிலாளர்களுக்கு மாடிகளைக் கொண்ட பல குடியிருப்புக் கட்டடங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

மக்கள் பொது இடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும் அவசியம் உணர்த்தப்படுவதோடு, துண்டு சிகரெட்டை வீதியில் எறிந்தால்கூட ரூ. 200வரை கடுமையான தண்டனை வழங்கும் சட்டமும் இயற்றப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகளால், தொழிலாளர்கள் உழைப்போடு, ஒழுங்காக வாழும் முறையையும் பேணி இருப்பதைக் காணமுடிகிறது.

தொழிலாளர்கள் ஒற்றுமையோடு முறையான தொழிற்சங்க அமைப்பில் தொடர்புகொண்டு, தேவையற்றுப் போராடாது, தங்கள் எதிர்கால வாழ்க்கையைத் திட்டமிட்டு அமைத்துக் கொள்வார்களானால், நான் கண்டு வந்த நாடுகளில் அவர்கள் வாழ்ந்தும், அவர்களது நாட்டை வாழவைத்தும் வாழ்வது போன்றே, நமது நாட்டிலும் புது நிலை ஏற்படும்.


**விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஓர் நற்செய்தி !**

A. G. சீனிவாசன்

இரும்பு, வர்ணம் & டால்மியா சிமெண்ட் வியாபாரம்

டிஸ்டிரிபியூட்டர் : 'பாக்ட்' யானை மார்க் கலப்பு உரங்கள்

**புவனகிரி**

நாங்கள் "தி பெர்டிலைசர் அண்டு கெமிகல்ஸ் திருவாங்கூர் லிமிடெட்" அவர்களால் புவனகிரியில் மொத்த விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

உங்கள் உரத் தேவைக்கு எங்களை அணுகுங்கள்!

தேவையான கலப்பு உரங்கள்,

* அம்மோனியம் * சூப்பர் பாஸ்பேட்
* யூரியா * பாக்டம் பாஸ், அல்ட்ராபாஸ்

எதுவானாலும் தேவையான உரங்கள் ரெடி ஸ்டாக்கில் கண்ட்ரோல் விலையில் வேண்டுமளவு கிடைக்கும்

**A. G. சீனிவாசன்**

இரும்பு வர்ண வியாபாரம்

மொத்த விநியோகஸ்தர் : **FACT Ltd.**

ஸ்டாக்கிஸ்ட் : ரவி பெய்ண்ட்ஸ் & டால்மியா சிமெண்ட்

**புவனகிரி**

# மே நாள்

ஈரோடு தமிழன்பன்.

பாடுபட்டுப் பாடுபட்டுப்
பாருய்ய வழிவகுக்கும்
பீடுற்ற தொழிலாளர்
நாளே வா - அவர்
பெருமையினை உணர்த்திட மே
நாளே வா!

காடழித்து வயலாக்கிக்
கணக்கற்ற பயிர்விளைத்துத்
தேடி நலம் கொழிப்பவர் மே
நாளே வா - அவர்
தேய்பிறை நாள் நீங்கிட மே
நாளே வா!

முட்டாத பன்னலமும்
முடுகியெழச் செய்கரமே
கட்புலனும் இறைகரம்; மே
நாளே வா! அவர்
கண்ணீரை மாற்றிட மே
நாளே வா!

கட்டடங்கள் வாய்க்கால்கள்
கவின்நகரம் ஆக்கிநலம்
பட்டொளிரச் செய்பவர் மே
நாளே வா! அவர்
பண்புமனம் இன்புற மே
நாளே வா!

பார்க்குமிடம் எங்கெங்கும்
பாட்டாளி கைவண்ணம்
நேர்ந்திடுதல் நிகழ்த்திட மே
நாளே வா! அந்த
நேரியரின் தாள் தொழ மே
நாளே வா!

ஆர்க்கின்ற இயந்திரங்கள்
அளவற்ற தொழிற்பெருக்கம்
சேர்த்துநலம் சேரிப்பவர் மே
நாளே வா - அவர்
சிந்தையிலே மழைபொழி மே
நாளே வா!

வியர்வையிலே உலகநலம்
வித்துகின்ற தலைமக்கள்
உயர்வடைய முரசறை, மே
நாளே வா! உடன்
உலகமவர் கைவர மே
நாளே வா!

புயலெழுமே புரட்சியுடன்
பொன்னான அவர் நலனைக்
கயமையினால் புதைப்பினெனும்
நாளே வா! அவர்
காலடியே பூப்பொழி மே
நாளே வா!



# பெய்யாது - பெய்த மழை

சோம. மகாதேவன்

இரவு வெகு நேரமாகிவிட்டது.

நாகமலைக் காடுகளையடுத்துப் பெரும் பாறைகள் உருண்டு கிடப்பதைப் போன்று அமைந்திருக்கும் அந்தக் கிராமத்தில் இன்னும் ஊரடங்கவில்லை.

அந்த நாள் அங்கே, திடீரென்று வந்து கூடிவிட்ட, சாதிமத பேதமற்றதொரு திருநாளாகத் திகழ்ந்தது. எல்லாருக்கும் எல்லாமே கிடைத்துவிட்டது போன்ற மகிழ்வு தெருவெங்கும் நிறைந்திருந்தது.

கடந்த ஓராண்டுக் காலமாகவே வானம் கண் திறக்காது, நீர் நிலைகளெல்லாம் வறண்டு, புல்பூண்டுகளும் கருகிப் போய், மக்களும், மாக்களும் வான் நோக்கிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த துயரம் தோய்ந்த சூழ்நிலையில் — இரண்டு தினங்களாக விடாது கொட்டிய மழை, 'போதுமா' என்று கேட்டுவிட்டு அன்றைக்குத்தான் ஓய்ந்தது.

தேவையானது கிடைத்துவிட்டது; வேறென்ன வேண்டும்?

கிராமத்தில் ஒன்றிரண்டு விவசாயத் தோட்டங்களைத் தவிரப் பெரும்பாலானவை செம்பூரான் புன்செய் நிலங்கள். பருவத்தில் மழை பெய்துவிட்டால், உடனடியாக மண் உலருவதற்குள் உழுது, வேர்க்கடலை விதைத்தாக வேண்டும்.

வீட்டுக்கு வீடு நீர்த்துளிகளைக் கண்டதும் பரபரப்புத்தான். பத்திரப்படுத்தியிருந்த விதைக் கடலைகளையெல்லாம் உடைத்து, முனை முறியாமல் பருப்புகளை எடுத்துச் சேர்ப்பதில் முனைந்தார்கள்.

கிராமத்தின் முகப்பிலேயே உள்ள கெட்டிக் கட்டடம் சாமிக்கண்ணு கிழவனுடையது. சற்றுப் பசையான புள்ளி. அன்றைக்கும் சரி...இன்றைக்கும் சரி, சோம்பல் இல்லாமல் பாடுபடுபவன். மண்ணைக் கிளரிக் கொண்டே இருப்பதில் அப்படியொரு பித்து அவனுக்கு; இல்லையென்றால் உடுத்திய துணியோடு நின்றவன் இந்த அளவுக்கு முன்னுக்கு வந்திருக்க முடியுமா?

கிழவனுக்கு ஒரே மகன் இரத்தினம். மகனைப் படிக்க வைத்துவிட வேண்டுமென்று அரும்பாடுபட்டான். இரத்தினம் முழுமையாகப் படிக்கவும் செய்யாமல், விவசாயத்திலும் மேனி வளையாமல், உதியமரமாக நின்றுவிட்டான். 'பிடிப்பு' ஏற்படாதா என்பதை எதிர்பார்த்து மகனுக்குக் கல்யாணத்தையும் செய்து வைத்துவிட்டான் கிழவன். ஆனாலும் மாற்றம் தெரியவில்லை. இப்போது மகனைப்பற்றிய கவலைதான் கிழவனை உருக்கியே வருகிறது.

பகல் பூராவும் நனைந்த கையோடு உழுதுவிட்டு வந்த கிழவன், அவசரத்தோடு விதைக் கடலை மூட்டையைக் கூடத்திலே கொட்டி, முன்னால் உட்கார்ந்து விட்டான்.

விடிந்ததும் விதைத்துவிட வேண்டுமென்று ஊரே பரபரப்பாகஇருக்கும் போதாவது-பிறந்த மகன் தகப்பனுக்கு உதவியாக ஆகவேண்டிய காரியத்தைப் பார்க்கமாட்டானா? இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இந்தக் கிழவனுக்குப் பாடுபடுவதற்கு வலு இருந்துவிடப் போகிறது?

வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, மருமகள் சிவந்தியோடு, கடலை உடைக்கவந்து உட்கார்ந்தாள் இராக்காயி.

வேலையிலே கவனமாக இருந்த கிழவன் ஏறிட்டுப் பார்த்தான். முகத்திலே கோபக்குறியே கூடி இருந்தது.

''அவன் எங்கேம்மா?''

''வெளித் திண்ணையிலே படுத்திருக்காரு!'' என்றாள் மருமகள்.

''படுத்திட்டாரா...'' என்று கேட்டுப் பெருமூச்சு விட்டான் கிழவன்.

''சோறுகூடத் திங்கலே...தலையை வலிக்குதுன்னு படுத்திருக்கான்'' என்று சொல்லி மகனுக்காகப் பரிந்து வந்தாள் இராக்காயி.

''காலநேரம் பார்த்துத்தானே அவனுக்கு எல்லாமே வரும். நாளைக்கி ஒரு பொழுதுக்குள்ளே மேலக்காடு பூராவும் விதைச்சாகணும். அதிலே அக்கறை இருக்கா அவனுக்கு''.

''எல்லாம் இல்லாமலா இருக்கு.''

''இருக்கும். என் கண்ணுக்குப் பின்னாலே அவன் என்ன ஆகப்





போறானே, அதையும் நீ இருந்து பாக்கத்தான் போறே!'' என்றான் கிழவன்.

இராக்காயிக்குக் கோபம் வந்துவிட்டது.

''என் தலையை உருட்டலன்னுந் தான் உங்களுக்கு அடையாதே'' என்றவள் மருமகளின் பக்கமாகத் திரும்பி, ''போம்மா சிவந்தி! அவனை எழுப்பிக்கிட்டு வா. கண்ணைத் திறக்க முடியாட்டியும் முன்னாலே குந்தி இருக்கட்டும்'' என்ருள் இராக்காயி.

சிவந்தி சொன்னதைச் செய்வாள். அதற்குமேல் அவளுக்கு ஒன்றும் தெரியாது.

எழுந்து முகத்தைத் துடைத்துக் கொண்டே தலைவாசலுக்குச் சென்ருள்.

கிழவன் கடுகடுப்போடு இராக்காயியை ஏறிட்டுப் பார்த்தான்.

''நாம இருக்கிறவரைக்கும் சரிதான். அதுக்கப்புறம் இந்தக் காடு கரையை மகன் கட்டிக்காக்கப் போருன்னு நினைக்கிறியா? வேர்வையைச் சிந்திச் சம்பாரிச்ச சொத்து... என்ன ஆகப் போகுதோ?''

''அவனவனுக்குப் புத்தி இருக்கத் தான் இருக்கும்'' என்று சொல்லி இராக்காயி மேலும் ஆரம்பித்த போது, சிவந்தி திரும்பிவிட்டாள்.

''திண்ணையிலே படுக்கைதான் கிடக்கு. அவங்களைக் காணலியே'' என்று சொல்லி நின்ருள்.

வந்து வாய்த்த மருமகளும் இப்படி அப்பாவிப் பெண்ணுகவா இருக்க வேண்டும்!

''வாழ வந்த பொண்ணு, புருசனைத் திண்ணையிலே பாய்விரிச்சுப் படுக்கவிடலாமா? இதைக்கூடவா நாங்க சொல்லி நீ தெரிஞ்சுக்கணும்'' என்று கேட்டான் கிழவன்.

சிவந்தி மட்டியைக் கடித்தவாறு தலைகுனிந்து நின்ருள்.

''படுத்துக் கிடந்தவன் — எங்கே போயிட்டான்'' என்று வியப்போடு ஆரம்பித்தாள் இராக்காயி.

''தலைவலிக்கி மருந்து தேடிப் போயிருப்பான்; போற இடத்தைச் சொல்லிக்கிட்டுப் போக முடியுமா?''

''உங்களுக்கு எல்லாமே குத்தமாத்தான்படும்'' என்ற இராக்காயியைச் சுட்டெரித்து விடுவதுபோலப் பார்த்தான் கிழவன்.

''சொல்றது புரியலையின்னு பேசாமலாவது இருந்து தொலையேன். நான் உழைச்சு ஓடாகிப் போயிட்டேன். சீக்கிரம் போயிடுவேன். பின்னாலே நீயும் சேர்ந்துதான் தலையிலே கையை வச்சுக்கப்போறே'' என்று சொல்லிக்கொண்டிருந்த போதே, வாசலிலிருந்து யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

கிழவன் எழுந்து, மேல்துண்டைத் தலையில் கட்டிக்கொண்டு வாசலை நோக்கி நடந்தான்.

தலையாரி கூத்தப்பன் திண்ணையோரமாக நின்றுகொண்டிருந்தான்.

''இந்த நேரத்திலே, ஐயனுர் கோவில் தோப்பிலே நம்ம தம்பி இரத்தினம் சூதாடிக்கிட்டு இருந்திருக்கு. போலீசுக்குத் தெரிந்து, வளைச்சுப் பிடிச்சுக்கிட்டாங்க'' என்று தகவல் சொன்ஞன் தலையாரி.

கிழவன் சிலையாக நின்றுவிட்டான்.

மருமகளோடு வந்து நின்ற இராக்காயி... ''பாவி...மகனே...இது என்ன கர்மமடா?'' என்று அலறிஞள்.

''புறங்கையைக் கட்டி — லாரியிலே ஏத்திக்கிட்டுப் போயிட்டாங்க; நாட்டாமைக்காரரு உங்ககிட்ட சொல்லச் சொன்ஞரு'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான் தலையாரி.

''நீங்க சொல்லி வாய் மூடலையே மாமா...வினை வந்து மூண்டிடுச்சே'' என்று சொல்லி அழுதாள் சிவந்தி.

''சுடுசொல் கேட்காதவனுச்சே... நான் பெத்த மகன் எங்கே நின்னு எப்படித் தவிக்கிருனே. நின்னுட்டிங்களே, நாலு பேரைக் கூட்டிக்கிட்டுப் போங்க'' என்று பதறிஞள் இராக்காயி.

கிழவன் ஒன்றும் பேசாமலே வீட்டிற்குள் நுழைந்து, மறுபடியும் கடலைக் குவியலுக்கு முன்னல் உட்கார்ந்துவிட்டான்.

''என்னங்க பேசாம இருந்தா எப்படி'' என்று கேட்டுக்கொண்டே மருமகளோடு பின்னுல் ஓடி வந்தாள் இராக்காயி.

கிழவன் பதட்டமில்லாமல் சொன்ஞன்:

''மண்ணைக் கிளறிப் பாடுபடுறவங்களுக்காகத்தான் மழையே பெய்யுது. சம்சாரி வீட்டிலே பிறந்தும், எல்லாத்தையும் மறந்து, இந்த நேரத்திலே



சூதாடப் போனவன், அதுக்கான தண்டனையை அனுபவிச்சுத்தான் ஆகணும். இந்த முத்திரைதான் அவனைத் திருத்தப் போகுது'' என்றவன் மீண்டும் வேலையில் முனைந்தான்.

மகனைப் பெற்றவளும், கொண்டவளும் இரவெல்லாம் அழுது கொண்டே இருந்தார்கள்.

எதையும் காதில் வாங்கிக்கொள்ளாமல், கிழவன் சாமிக்கண்ணு அயராது கடலை உடைத்துக்கொண்டிருந்தான். பொழுது விடிந்தால் விதைப்பு நடந்தாக வேண்டுமே அவனுக்கு!




புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்

பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்.

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
'இதுஎனதெ'ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
'ஒருபொருள்தனி'எனும் மனிதரைச் சிரிப்போம்!

இயல் பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்.

— பாவேந்தர் பாரதிதாசன்

நீர்ப் பாசனம் பெறாமல் மழையை நம்பிச் செய்யும் விவசாயம் புன்செய் வேளாண்மை எனப்படும். நீர்ப் பாசனம் பெறாத இந்நிலங்களில் விவசாயம் செய்யச் சில இடங்களில் குழாய்க் கிணறு முதலியன தோண்டி அடிமட்ட நீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மற்றும் சில இடங்களில் இவ்வித வசதிகள் சிறிதும் இல்லாமல் முற்றிலும் மழையை நம்பியே விவசாயம் செய்ய வேண்டியிருக்கும். சிந்து, கங்கைச் சமவெளியில் உள்ள நீர்ப்பாசனம் பெறாத நிலங்களை முதலில் சொல்லியதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

ஆண்டு தவறாமல் பருவக் காற்று மழையைப் பெறக்கூடிய பல பகுதிகள் நம் நாட்டில் இருக்கின்றன. அப்பகுதிகளில் மழைக் காலத்தில் ஏராளமான தண்ணீர் இருக்கும். ஏனைய காலங்களில் அங்கு வறட்சி மிகுந்து காணப்படும். இதற்கு எடுத்துக் காட்டாகக் கேரளக் கடற்கரைப் பகுதிகளைக் கூறலாம். அங்கு டிசம்பர் முதல் மே வரையில் தண்ணீர்ப் பற்றாக்குறை அதிகமாக இருக்கும்.

## புதுமை காண்போம்

அடுத்தபடியாக, மழைகுறைவான பல பகுதிகள் நம் நாட்டில் இருக்கின்றன. அங்கு எப்போதுமே தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்து கொண்டே இருக்கும். இப்படிப்பட்ட இடங்களில் மழைக் காலத்தில் பெய்த மழைத் தண்ணீரை மட்டும் நம்பித்தான் பயிர்கள் விளைவிக்க வேண்டியிருக்கும். இங்கு மழை நீரின் ஈரத்தை இயன்றவரை பாதுகாத்து அறுவடைக்கு முன்பு பயிர் காய்ந்து சேதமாகிவிடாதபடி வழி வகைகளை உண்டாக்குவது அவசியமும், அவசரமும் ஆனதாகும். இதற்கு எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் எல்லா இடத்திற்கும் ஒரே மாதிரியானதாக இருக்கமுடியாது. ஆனாலும் நிலத்தில் ஈரப்பதத்தைத் தங்கச் செய்தல், நிலவெளியில் உள்ள வறட்சியைத் தவிர்த்தல், காற்றாலும் வெப்பத்தாலும் தண்ணீர் ஆவியாவதைக் குறைத்தல் ஆகியனபற்றிய நடவடிக்கைகள் எல்லா இடத்திற்கும் பொருந்துவனவே ஆகும். பயிர்களின் வேர்ப் பகுதியில் எப்போதும் ஈரப்பதம் இருந்தால் விளைவு நன்றாய் இருக்கும். வறண்ட வட்டாரங்கள் அனைத்திலும் இந்த ஒன்றை நினைவில் வைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முனையவேண்டும்.

புன்செய் வேளாண்மையில் புதிய முன்னேற்றம் உண்டாக்கப் பல வழிகள் உள்ளன. (1) கிணறு முதலியன தோண்டிப் பாசன வசதியை அதிகரிக்கச் செய்தல் (2) நிலத்தில் கிடைக்கும் தண்ணீரையும் ஈரப்பதத்தையும் பேணிக் காத்து விரைவில் வறட்சி ஏற்பட்டு விடாதபடி செய்தல் (3) இயன்ற இடங்களில் செயற்கை மழையைத் தூண்டி விடுதல்.

இப்படிப்பட்ட செயல்களுக்கெல்லாம் நிறையப் பொருள் செலவிட வேண்டும். இப்போது இருக்கும் குறைந்த அளவு வசதிகளைக் கொண்டு என்ன செய்யலாம் என்பதில் நாம் முதலில் விரைந்து கருத்துச் செலுத்த வேண்டும். இந்தியாவில் பொருளாதார வளமும் தொழில் நுணுக்க அறிவும் பெருகிய பின் ஏனையவற்றைப் பற்றிச் சிந்திக்கலாம்.

இன்றுள்ள நிலையில் மழைத்தண்ணீரைப் புன்செய் நிலத்தில் வேகமாக வற்றிவிடாதபடி காக்க முதலில் சில ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். மழைத் தண்ணீர் நிலத்தில் விழுந்ததும் வேகமாக வழிந்தோடி விடாதபடியும், விரைவில் ஆவியாக மாறி விடாதபடியும் நாம் அதைப் பேண வேண்டும். இதற்கு நிலத்தின் மட்டத்தைச் சரிப்படுத்தி வைத்துக் கொள்வது ஒரு வழியாகும். எருதுகளைக் கொண்டு இழுக்கக் கூடிய மண்வாரி இயந்திரங்கள் இன்று இருக்கின்றன. சுமார் 4 ஹெக்டார் நிலம் வைத்திருக்கக்கூடிய எந்த விவசாயியும் இவ்வகை இயந்திரங்களைவாங்கிப் பயன்படுத்தமுடியும். கொத்தனார் உபயோகப்படுத்தும் நில மட்டக் கருவியை வைத்துப் பார்த்து நிலத்தை இந்த மண்வாரி இயந்திரத்தின் உதவியால் சரிப்படுத்தி மழைத் தண்ணீர் விரைவில் வெளியேறி விடாதபடி முதலில் செய்து கொள்ள வேண்டும். நிலத்தில் தேங்குகின்ற மழைத் தண்ணீர் மண்ணுக்குள் அதிக ஆழம் இறங்கினால்தான் சூரிய வெப்பத்தால் அது வேகமாக ஆவியாகாதபடி இருக்கும். வயலில் அடிமண் பொடிந்தும், இளக்கமாக இருப்பதும் இதற்கு அவசியம். அப்படி இருந்தால் தான், வேர்களும், தண்ணீரும் சுலபமாக ஆழத்தில் இறங்கும். இதனைச் சாதிப்பதற்கு ஆழமாக உழக்கூடிய நவீனக் கலப்பைகள் பல இருக்கின்றன. அக்கலப்பைகளைக் கொண்டு உழுதால் அடிமட்ட மண் நன்றாக இளகிக் கொடுத்துத் தண்ணீரை உள்ளுக்குள் புகவிட்டுத் தேக்கி வைத்துக் கொள்ளும்.



பல காலமாக நாம் உபயோகித்து வந்த கலப்பைகள் மேல்பகுதி மண்ணை மட்டிலும் கிளறிவிடும் தன்மையில் இருந்தன. இதனால் பல இடங்களில் பூமிக்குப் பத்துப் பதினைந்து செண்டி மீட்டருக்குக் கீழ் உள்ள பகுதி, கெட்டியான அடை போல் ஆகிவிட்டது. இப்படிக் கெட்டிக்கப்பட்ட இடங்களில் ஆழமாக வேர்விடக் கூடிய பருத்தி முதலான பயிர்களுங்கூடத் தம்முடைய வேரை உள்ளுக்குள் செலுத்த ஆற்றலற்றுப் போய் விடுகின்றன. பூமியில் அடி மட்டத்திலுள்ள தண்ணீரும் இந்தக் கெட்டியான அடை காரணமாக மேல் மட்டப் பயிருக்கு உதவாமல் தடுக்கப்பட்டு விடுகிறது. மழை பெய்யும் காலங்களில் மழைத் தண்ணீர் கீழே இறங்காதபடி இந்த அடைகள் தடுத்து நிறுத்திவிடுகின்றன. சில சமயங்களில் இந்த அடைகளில் உள்ள வெடிப்புக்களின் மூலம் மழைத் தண்ணீர் உள்ளே சென்றாலும் அடையில் கீழ்ப் பகுதியில் வேர் மண்டலம் செல்லாத காரணத்தால் அத்தண்ணீர் பயிர்களுக்குப் பயன்படுவதில்லை. இந்த விதத்தில் உள்ளுக்குள் இறங்கிய தண்ணீர்தான், சிந்து கங்கைச் சமவெளிகளில் அடிமட்ட நீராக இன்று காணப்படுகின்றன. பல காலமாகச் சேர்ந்து போன அந்தத் தண்ணீரைத்தான் நாம் இப்போது இப் பகுதிகளிலிருந்து குழாய்க் கிணறுகள் இறக்கி வெளிக் கொண்டு வந்து பயிரிட முயற்சி செய்து வருகிறோம்.

அடி நிலம் அடைபோன்று கெட்டி ஆகிவிட்ட பகுதிகளில் இயந்திரக் கலப்பைகளைக் கொண்டு ஆழமாக உழுது உடைத்துவிட்டால் பயிர்களின் வேர்கள் கீழே இறங்குவதோடு அடிமட்ட நீரும், பயிருக்குக் கிடைக்கும். மேல் பரப்பில் விழுகின்ற மழைத் தண்ணீரும் பூமிக்குள் ஆழமாக இறங்கி அதிக நாள் தேங்கி நின்று பயிருக்கு உதவும். அண்மையில் இராஜஸ்தானத்தில் சில பகுதிகளில் ஜூலையில் பெருவெள்ளமும், ஆகஸ்டில் வறட்சியும் ஏற்பட்டது போன்று மோசமான வறட்சி நிலை ஏற்படாது.

வாழ வேண்டுமெனில்—தொழில்கள்
வளர வேண்டுமையா!
ஏழை என்றொருவன்—உலகில்
இருக்க லாகாதையா!
— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

## மே நாள் வரலாறு

1884 அக்டோபர் 7ஆம் நாள் அமெரிக்கா, கனடா நாட்டிலுள்ள தொழிற் சங்கங்களின் சம்மேளனம் 1886 மே 1ஆம் தேதியிலிருந்து எட்டு மணி நேர வேலையைச் சட்ட பூர்வமாக ஒரு நாள் வேலை என வற்புறுத்த வேண்டுமென முடிவு செய்தது; இதற்கெனத் தீர்மானமும் நிறைவேற்றியது. இத் தீர்மானம், அமெரிக்கா, கனடா நாடுகளில் உள்ள தொழிற் சங்கங்கள் மே 1ஆம் தேதி 8 மணி நேர வேலைக்காக நீண்ட வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டியிருக்கும் என எச்சரித்தது.

வேலை நிறுத்தப் போராட்டங்களின் மையமாகச் ''சிகாகோ'' நகரம் விளங்கியது. பால்டிமோர், வாஷிங்டன், மில்வாக்கி, சின்சினாட்டி, செயின்ட் லூயி பிட்ஸ்பார்க், டெட்ராய்ட் மற்றும் பல நகரங்களும் வேலைநிறுத்தத்திலிறங்கின.

சிகாகோ நகரம்தான் தீவிர உணர்ச்சி கொண்ட தொழிலாளிகளின் இயக்கத்தைக் கண்டது. மே 1ஆம் தேதிசிகாகோவில் நடந்த வேலை நிறுத்தம் அதுவரை தொழிற்சங்க இயக்கம் கண்டிராத போராட்டமாக நடந்தது.

ஹே மார்க்கட் சம்பவம் எனக்கூறப்படும் மிகப் பெரிய நிகழ்ச்சி, மே 3, 4 தேதிகளில் நடந்தது. இது மே தின வேலை நிறுத்தத்தின் தொடர்ச்சியே ஆகும். மே 5ஆம் தேதி ஹேமார்க்கட் சதுக்கத்தில் நடந்த ஆர்ப்பாட்டம் அடக்குமுறைக் கண்டன ஆர்ப்பாட்டமாகும். மே 3ஆம் தேதி மெக்கார்மிக் ரீப்பர் தொழிற்சாலையில் நடந்த வேலைநிறுத்தத்தைஅடக்கப் போலீஸ் 6 பேரைச் சுட்டுக் கொன்றது. பலரைக் காயப்படுத்தியது. இந்த அடக்குமுறையை எதிர்த்தே மே 4ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஹேமார்க்கட் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடந்து முடிவுறுந்தருவாயில் போலீஸ்தலையிட்டுத் தாக்கியது. அச்சமயம் கூட்டத்திற்குள்ஒருகுண்டு வீசப்பட்டது. இதனால் ஒரு சார்ஜண்ட் இறந்து போனார். இதைத் தொடர்ந்து கைகலப்பு, தொழிலாளிகளுக்கும் போலீசுக்கும் ஏற்பட்டது. இதன் விளைவாக 7 போலீஸ்காரர்களும் 4 தொழிலாளர்களும் இறந்தார்கள்.

ஹேமார்க்கட்டில் நடந்த இந்த இரத்தக் களறிக்குப்பின், முதலாளிகள் வன்முறையிலிறங்கினர். தொழிலாளர்கள் தலைவர்கள் பலர் தூக்கிலிடப்பட்டார்கள்; பலர் சிறை வைக்கப்பட்டார்கள்.

மீண்டும் 1888ஆம் ஆண்டில் அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் செயின்ட் லூயி நகரில் மாநாடு நடத்தியது. அதில் 8 மணிநேர வேலை நாளை வற்புறுத்தி இயக்கம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இந்த இயக்கத்தை, அரசியல் முறையில் மே 1ஆம் தேதி நடத்தும் வழக்கம் தொடர்ந்தது. 1891-ம் ஆண்டுமேமுதல் நாடுதழுவியவேலை நிறுத்தம், வேலை நேரத்தைக் குறைக்க வேண்டுமென நடத்தப்பட்டது.

அமெரிக்கத் தொழிலாளர்களின் போராட்டத்தின் வளர்ச்சி கண்டு தொழிலாளர்களின் அகிலம் ஊக்கம் பெற்றது.

''உலகம் முழுதும் எல்லா நாடுகளிலும் நகரங்களிலும் குறிப்பிட்ட ஒரே நாளில் உழைப்பாளி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டும். இந்தத் தினத்தில் 8 மணி நேர வேலை நாளைச் சட்டமாக்கவும், அரசாங்கத்திடம் கோரவேண்டும்'' என அகிலம் முடிவெடுத்தது.

அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் 1889 மே 1ஆம் தேதியை விரிவாக நடத்தத் திட்டமிட்டிருப்பதால், இதையே அனைத்து நாடுகள் தினமாகக் கொண்டாடுவது என்று அகிலம் முடிவு செய்தது. அவ்வாறே ஆண்டுதோறும் மே முதல் நாள், மே நாளாகக் கொண்டாடப்படுகிறது!

## வீடு நலமே நாடு நலம்

1. நாட்டின்பால் பற்றுமிக்க நண்பரே! நங்கையரே!
நானொன்று சொல்லுகிறேன்—இதைப்
கேட்டுமது மனத்தில் போட்டுவைப் பீராயின்
கேடுகளை வென்றிடுவீர்—பள்ளம்
மேடுகளைத் தாண்டிடுவீர்.

2. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்தவை
வகுத்தலும் வல்லதரசாம்—இதைப்
பயிற்றலும் பாங்குடன் நடத்தலும் நாட்டினர்
பயனுறும் பணியல்லவோ ?—நாடு
நயனுறும் வழியல்லவோ ?

3. உணவுப்பொருள் பெருக்கி உயர்மட்ட மடைந்தோம்
உடைகளை நெய்துகுவித்தோம்—அவை
அனைவர்க்கும் எளிதாகக் கிடைக்காத வகையினில்
அடித்ததே சனப்பெருக்கம்—எங்கும்
வெடித்ததே மிகவருத்தம்.

4. கல்விக்குப் பள்ளிகள் மிகப்பல படைத்தோம்
கற்பவர் பெருகுகின்றார்—இருந்தும்
கல்விக்கண் திறக்காத பல்லாயிரம் பாமரர்
கதியற்றே உழலுகின்றார்—அறிவு
நிதியற்றே சுழலுகின்றார்.

சலகை ப. கண்ணனார்

5. பலப்பல பணிகளும் புதுப்புதுத் துறைகளும்
படைக்குறுர் அரசினரே—எனினும்
மிகப்பல லட்சம்பேர் தொழிலெதும் கிடைக்காமல்
திகைக்குறுர் தியங்குகிறுர்—பசி
வதைப்பதால் மயங்குகிறுர்.

6. நிலையிதை மாற்றவும் நெருக்கடி தீர்க்கவும்
நெறியொன்று கண்டனரே—நாடு
நலம்பெறக் குழந்தை பெறுவதை யளவோடு
நிறுத்திடல் வேண்டுமென்றுர்—துயர்
துடைத்திடல் வேண்டுமன்றே ?

7. வீட்டுநலமே வாழும் நாட்டுநலம் என்பதை
விளக்குக உறவினர்க்கும்—திட்டம்
தீட்டும் நிலைபுரிந்து செயலினில் நடத்திஞல்
கூட்டுமே இன்பமெல்லாம்—வளம்
காட்டுமே உலகமெல்லாம்.

8. நல்லுணவும் உடையும் நாகரிகம் மாடுமனை
நலந்தரும் கல்வியறிவும்—தொழில்
செல்வமும் வசதியும் எல்லாரும் பெறவகை
செய்தலே குடிவளமாம்—அதனை
எய்தலே சமநெறியாம்.

9. மனதுக்கு மகிழ்வோடு உடலுக்கும் எழிலோடு
இனிமைக்குச் சில பெறுவீர்—வறுமைக்
கனலுக்குப் பலியாகி குடிமைக்குச் சுமையாகும்
கருவினைத் தடுத்திடுவீர்—குடும்ப
உருவினைச் சுருக்கிடுவீர்.

10. பகுத்தறியும் பண்பினை மனிதர்கள் தமக்கென
பரிந்தளித் தானேஇறைவன்—அது
வகுத்திடும் வழியினில் குடும்பத்தை யமைத்து
வலுப்படுத் தலேமுறைமை—வீட்டை
வளப்படுத் தலேதிறமை.

---

# உருளைக்கிழங்கு கெடாதிருக்க என்ன வழி?

உருளைக்கிழங்குகளைப் பயிர் செய்வோருக்கு இதோ சில அரிய யோசனைகள். இவற்றைக் கையாண்டால் உருளைக்கிழங்கை நெடுநாட்களுக்குக்கெடாமல்பாதுகாத்து உயர் விலைக்கு விற்றுப்பெரும் ஆதாயத்தை ஈட்டலாம் நீங்கள் அடுத்தமுறை உருளைக்கிழங்கை அறுவடை செய்கையில் கீழ்க்காணும் முறைகளைக் கையாளுங்கள்:

நன்கு முற்றிய கிழங்குகளையே அறுவடை செய்யுங்கள்.

தண்டுகளையும், ஏனைய சொரசொரப்பான பகுதிகளையும் நன்கு நீக்கி விடுங்கள்.

சுத்தமான, ஈரம் அதிகமில்லாத கிழங்குகளே பாதுகாத்து வைத்திருக்கச் சிறந்தவை.

சிறிதளவு மணல் தூவப்பட்டு, நல்ல காற்ருேட்டமுள்ள குளிர்ந்த இடங்களில் உருளைக்கிழங்கைச் சேமிக்கவேண்டும்.

அழுகிய கிழங்குகளை அவ்வப்போது அகற்றி விடுவதோடன்றி மணலையும் அடிக்கடி உலரவிடவேண்டும். குறைந்தது பதினைந்து நாட்களுக்கொரு முறையேனும் கிழங்குகளைச் சோதித்துப் பார்த்தல் மிக நன்று. விதைக்காகப் பயன்படுத்தப்படவிருக்கின்ற கிழங்குகளின்மீது டி.டி.டி. அடிக்கலாம். அதஞல் எவ்விதக் கெடுதலும் இல்லை. ஆனல் விற்பனைக் கெனவும் உணவிற்கெனவும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள கிழங்குகளின்மீது டி.டி.டி. அடிக்கலாகாது.

ஒரு குவிண்டால் எடையுள்ள உருளைக்கிழங்கிற்கு 'கை ஜி. 33-ஏ' (Geigy 33-A) போதுமானதாகும். இதை உலர்த்த சிவப்பு மண்ணுடன் கலந்துவிடவேண்டும். சிறிது மணல் தூவப்பெற்ற இடத்தின் மீது கிழங்குகளைப் பரப்பி, அதன்மீது மேற்கண்ட இரசாயன மருந்து கலந்த மண்ணை இலேசாகத் தூவுங்கள்.

மேற்கூறப்பட்டுள்ள முறையில் பாதுகாக்கப்பட்ட கிழங்குகளை, மூங்கில் கூடைகளிலும் நிரப்பிவைக்கலாம். வெளியிலுள்ள வெப்பநிலை மிகுதியாக இருந்தால், உருளைக் கிழங்குகளின்மீது மணலைக்கொட்டி மூடவேண்டும். கிழங்குகள் சேமிக்கப்பட்டுள்ள அறைகளிலுள்ள கதவுகளையும் சன்னல்களையும் பகல் வேளைகளில் மூடிவிடவேண்டும். இரவில் சில மணிநேரங்கள் அவற்றைத் திறந்து வைக்கத் தவறக்கூடாது.

அறுவடை செய்யப்பட்ட உருளைக் கிழங்குகளைத் திறந்த வெளியில் அதிகநேரம் வைத்திருக்கக்கூடாது. அவ்வாறு செய்வதால் கிழங்குகளை நோய்கள் தாக்கி அதஞல் அவை அழுகிவிட நேரும்.

கிழங்குகளை அதிகநேரம் காற்றிலோ, சூரிய ஒளியிலோ வைத்திருந்தால், அவற்றின் தரம் வெகுவாகக் குறைந்து விடுவதோடன்றி, விதைகளாகப் பயன்படுத்துவதற்குரிய தகுதியையும் அவை திண்ணமாக இழந்து விடுகின்றன. கிழங்குகளை அதிக உயரமாகக் கொட்டிவைக்கலாகாது.

விதைக்காகப் பக்குவப்படுத்தப்பட்டுள்ள கிழங்குகளைக் கோணிகளில் நிரப்பி வெளியிடங்களுக்கு அனுப்பவே கூடாது. சில நேரங்களில் அவை கவனக்குறைவாகக் கையாளப்படுமானல், விதைகளுக்குப் பெரும் தீங்கு ஏற்பட வழியுண்டு.

நல்ல ஒளியுள்ள, திறந்த, குளிர்ந்த இடங்களில் உருளைக்கிழங்கு விதைகளைப் பரவலாகக் கொட்டிப் பாதுகாக்கவேண்டும்.

மேற்கண்டமுறைகளைக்கையாண்டு உருளைக்கிழங்குகளை நன்கு பாதுகாத்துப் பெரும் பயனடையத் தவருதீர்கள்!

160166



# உற்பத்தித் திறன் பெருகிட...

• காட்டூர் கோபால் •

'மே நாள்' உலக நாடுகளின் உழைப்பாளர் திருநாள். தமிழகத்தைப் பொறுத்தவரை 1967-க்குப் பின், தனிச் சிறப்புப் பெற்ற நாளாக மெருகேறியுள்ளது. 'மே நாளி'னைத் தற்போதைய தமிழக அரசு விடுமுறை என்று அறிவித்ததால்மட்டுமா என்றால், அதனால் மட்டுமல்ல. தமிழகத்தின் மிகப்பெரும் தொழில் நகரமான கோவைத் திருநகரில், மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் 1-5-1967 அன்று மே விழாவில் உரையாற்றும்போது ''நான் தொழிலாளர் கூட்டத்தில், அதுவும் உழைப்பாளர் பெருநாளில் மேநாளில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற பொறுப்புடனேயே பங்கு பெறுவதில் ஏற்படுகிற மகிழ்ச்சி ஒன்றே போதும், என் வாழ்நாள் முழுவதும் நினைத்து மகிழ. நாளையே இந்த முதலமைச்சர் பதவி இல்லாமற்போய்விடினும் கூடக் கவலை இல்லை'' என்று தெரிவித்தார்கள்.

அது மட்டுமல்ல; ஏறிய விலைவாசியை இறக்கமுடியாமல் மக்கள் திணறடிக்கப்பட்டுப் பல ஆண்டுகளாக இருந்த கடுந்தொல்லை குறைகிற வகையில் 'படி அரிசி'த் திட்டம் நடைமுறைக்கு வருவதை அண்ணா அவர்கள் அறிவித்த திருநாள் அன்றுதான்.

தொழிலாளர் நலம் பெருகுவதன் மூலம்தான், உற்சாகம் மிக்க உழைப்பு பிரதிபலிக்க முடியும்; உற்சாக மிக்க உழைப்பின்மூலம்தான் உற்பத்தித் திறன் பெருகும்; உற்பத்தி உயரும்; ஊதியம் உயரும்; எங்கும் சகதி வளரும்; சமுதாயம் முழுமைக்கும் வளமான வாழ்வுக்கு வழி கிடைக்கும். எந்த நாட்டின் முன்னேற்றமும், அந்த நாட்டின் தொழில் வளர்ச்சியை ஒட்டித்தான் அமையும். தொழில் வளர்ந்திடத் தொழிலாளர் நல்வாழ்வு வாழ்ந்தாக வேண்டும், தொழிலாளர் சமுதாயம் நல்வாழ்வு வாழ்ந்திடத் தொழில்கள் வளர்ந்தாக வேண்டும். இவை இரண்டும் ஒன்றுக்கு மற்றொன்று ஆதாரமாகும். ஒன்று இல்லையேல் மற்றொன்று இல்லை. ஒன்று வீழ்ந்து மற்றொன்று வாழ்ந்திட முடியாது. ஒன்றை எதிர்த்து மற்றொன்று வாழ்ந்திட முடியாது. தொழிலாளர்களை ஏமாற்றி நசுக்கித் தொழில்கள் வளராது. தொழில்கள் நசித்துத் தொழிலாளர்கள் வாழ்ந்திட முடியாது. எனவேதான், தற்போதைய தமிழக அரசு 'வாழ்க தொழிலாளர்; வளர்க தொழில்கள்' என்கிற அடிப்படையில் இயங்கி வருகிறது.

இன்றையத் தமிழகஅரசு, தன்னாலியன்றவரை, உழைக்கும் சமுதாய நலனைப் பெரிதெனப் பேணிக் காரியமாற்றிவருகிறது. இதனால், தொழிலாளர்கள் உள்ளத்தில் நல்ல நம்பிக்கை ஒளி ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், கடந்த சில ஆண்டுகளாகத் தொழில்களில் 'தேக்க நிலை' இருப்பதாகப் பேசப்படுகிறது. இது உண்மையல்ல. இரண்டொரு தொழில்கள் தவிர, ஏனைய தொழில்களில் எந்த மாறுதலும் பரவி இருப்பதாகக் கூறமுடியாது. குறிப்பிட்ட அந்த இரண்டொரு தொழில்களில் கூடத் 'தேக்க நிலை' என்பது பொருந்தாது. ஒரு விதமான மந்த நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் நிச்சயமாகத் தேக்கநிலை இல்லை. என்ஜினீயிரிங் தொழிலில் மிகப் பெரிய தொய்வும் நெருக்கடியும் ஏற்பட்டு அந்தத் தொழிலே நசித்துக் கொண்டிருப்பது போலப் பேசப்படுகிறது. உண்மை நிலையைத் தக்க புள்ளி விவரங்களுடன் ஆராய்ந்து பார்த்தால், 1965ஆம் ஆண்டு உற்பத்தியை விட 1966லும், 1966ஆம் ஆண்டு உற்பத்தியை விட 1967லும் தொடர்ந்து உற்பத்தி உயர்ந்திருப்பதைக் காண்கிறோம். இத் தொழிலில் வெளிநாட்டு ஏற்றுமதிகூடப் பெருகி இருப்பது குறிப்பிடத் தக்கது.

இதுபோன்றே பஞ்சாலைத் தொழிலும் பெருத்த நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது. பெரிது படுத்தப்பட்டுள்ள பயங்கரமான நிலை உண்மையல்ல. என்றாலும் 27 பஞ்சாலைகள் மூடப்பட்டும், பதினாறாயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்தும் பெரிய என்ஜினீயரிங் தொழிற்சாலையான 'டெக்ஸ்டூல்' தொழிற்சாலை வேலை பாதிக்கப்பட்டு மூவாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு உள்ளதும் உண்மையே! ஆலைகள் மூடப்பட்டதற்கு யார் காரணம்? என்ன காரணம்? பருத்தித் துணி ஆலைகளுக்கு இந்தியா முழுவதிலுமேயே நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே, அதில் ஒரு பாகமாக, ஒரு பகுதியாக இருக்கும் தமிழகத்திலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு மனிதனுக்குச் சராசரித் துணித் தேவை 32 கெஜம். ஆனால் இந்தியாவில் தற்போதைய சராசரி உற்பத்தியோ 18 கெஜம். ஆனால் செலாவணி 16 கெஜம்தான். தேவையை விடப் பாதிதான் உற்பத்தியாகிறதென்றாலும், அதுகூட முழுமையாகச் செலாவணியாவதில்லை. எதனால்? அந்த அளவிற்குக்கூட இந்திய மக்களின் வாங்கும் சக்தி வளராததால்; தேவை அளவின் பாதி உற்பத்தியாவதில்கூடத் தேங்கி வருகிற நிலை நீடிக்கிறது. டெர்லின் டெர்ரி காட்டன் உபயோகம், பொருளாதாரச் சூழல்-நாணயக்குறைப்பு- பஞ்சு பற்றாக்குறை- கச்சாப்பொருள் விலை ஏற்றம் - உள்ள பஞ்சினைப் பகிர்ந்து எடுத்துக்கொள்கிற சீரான முறை இல்லாத நிலைமை- நூல்வியாபாரத்திலும் முறைப்படுத்தப்பட்ட விற்பனைக் கொள்கை இல்லாமை - பற்றாக்குறை முதலீடு- சரியான இயந்திரப் பராமரிப்பற்ற நிலை- இயந்திரப் புனரமைப்புக்கு உரிய தருணத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை - தவறுதலான நிர்வாகம்- ஆலைத் தொழிலுக்கு (லைசென்ஸ்) அனுமதி வழங்கியதில் கொண்டிருந்த தவறான கொள்கை - நூலின் மீது போட்ட அதிகமான சுங்கவரி- நூற்பு ஆலைகளாக மட்டுமே இருந்து வருகிற நிலைமை - இந்தக் காரணங்களினால் ஆலைகள் மூடப்பட்டனவே தவிர, தற்போதைய அரசு காரணமென்று கூறுவது சரியானதன்று.

மூடப்பட்ட பஞ்சாலைகளினால், வேலை இழந்து தவிக்கும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் படுகிற அவதி நீக்கிடத் தன்னாலான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக உடனடிப் பரிகாரம் — நிரந்தரப் பரிகாரம் ஆகிய இரண்டுவகைக் காரியங்களுக்கும் முயற்சிகளை மேற்கொண்டது. பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்கள் தலைமையில் ஒரு நிபுணர் குழுவினை அமைத்து ஆராய்ந்து $1\frac{3}{4}$ கோடி ரூபாய் வரை உத்திரவாதக் கடன் அளிக்கிற ஏற்பாடுகளை மேற்கொண்டது. நிரந்தர ஏற்பாடுகளுக்கெனப் பஞ்சாலை நிறுவனம்(Textile Corporation) அமைத்து, அதன்மூலம் ஆலைகளை ஏற்று நடத்தியாவது அல்லனும் தொழிலாளர்கள் அவதி நீங்கிடத்தக்க பணிகளுக்கு முயற்சி நடைபெற்றுவருகிறது. இதற்கிடையில் மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தொழிலாளர்களின் உதவித்தொகையாக இரண்டு லட்சம் ரூபாய் அளித்தார்கள். கோவையில் அனைத்துத் தொழிற்சங்கங்களும் கூடி, வேலையிலிருக்கும் ஆலைத் தொழிலாளர்களின் 2 நாள் ஊதியத்தொகையை மூடிய ஆலைத் தொழிலாளர்களுக்கான உதவித் தொகையாகத் தருவதாகவும், அதற்கு ஈடான தொகையைத் தமிழக அரசு தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதனை, இன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள் ஏற்றுக்கொண்டு உடனடியாக அதற்கு ஒப்புதல் அளித்தது, தொழிலாளர் துயரில் அரசும் சமபங்கு ஏற்றுக்கொள்வதை தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டுகிறது.

மூடப்பட்ட ஆலைகளினால் கடுஞ்சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இத்தகைய ஏற்பாடுகள் முழுமையான பலனைத்தராவிட்டாலும், முழுமையான பரிகாரம் கிடைத்திடத்தக்க முயற்சிகள் வெற்றியடைய வாழ்த்துவோம்.

நாட்டில் ஏற்பட்டுவரும் மக்கள் தொகைப் பெருக்கமும், நிலவி வரும்

தனி நபர் வருமானம், தேசிய வருமானம் இவைகளில் பற்றாக்குறையும் பொருளாதாரச் சீர்கேடும், நாம் எண்ணுகிறபடி முன்னேறுவதற்கான வழிவகைகளைக் காலம் கடத்துவதாக அமைந்துள்ளன.

நாட்டுவளம் பெருகிடத் தொழில் துறையிலும் விவசாயத்துறையிலும் விரைவான முன்னேற்றத்திற்கு வழிவகைகளைக் கடைப்பிடித்தாக வேண்டியுள்ளது. சகல துறைகளிலும் உற்பத்தித் திறன் பெருகிட, நம்மாலியன்ற சேவையைச் செய்ய வேண்டுவது இன்றைய அவசர அவசியத் தேவையாகும். போதிய அளவில் இதுவரை கவனம் செலுத்தப்படாத விவசாயத் துறையில் உற்பத்தித் திறன் பெருகிட வழி காண வேண்டும். விவசாயத்துறையில் உற்பத்தித் திறன் பெருகுவதால் உணவுப்பற்றாக்குறையைப் போக்கிடவும், நல்ல விளைச்சல் காணவும் வழிகோலப்படும். உற்பத்தித திறன் வளர வளர உற்பத்தி பெருகும். உற்பத்திச் செலவினம் குறையும். உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைகளில் நமது உற்பத்திப் பொருளுக்கு நல்ல கிராக்கி இருக்கும். இதனால் நம தொழில் பெருகும். தொழில் வளம் வளருவதால், வேலை வாய்ப்பு அதிகரிக்கும். மொத்தத்தில் பொருளாதார வளம் பெருகும்! வறுமை நீங்கும்! வாழ்வு மலரும! தொழிலாளர் நலம் பெருகும! வளர்க தொழில்கள்! வாழ்க தொழிலாளர்கள்! வெல்க தொழிலாளர் அரசு!

## 'சீரணி' வருகிறது !

கோவையிலும், தஞ்சையிலும் பாதைபோடுவதில் ஆயிரக் கணக்கான சீரணித் தொண்டர்கள் பங்கெடுத்துக் கொண்டனர்; இது பல பேருக்குத் தெரியாது. காரணம் நாம் செய்கின்ற பணிக்குச் சரியான விளம்பரம் இல்லை. எப்படிப்பட்ட நல்ல படம் என்றாலும், சிறந்த நடிகர்கள் நடித்திருந்தாலும் விளம்பரம் கவர்ச்சிகரமாகக் கொடுக்கப்படவில்லையென்றால் படம் நன்றாக ஓடுவதில்லை. சினிமாப் படங்களுக்கே இந்த நிலை என்றால் தொண்டுள்ளம் கொண்டவர்களை ஊக்குவிக்கவும் தொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்தவும் நிறைந்த அளவில் விளம்பரம் தேவை. அரசு சார்பில் வெளியிடப்படும் ''கிராம நலம்'' பத்திரிகை 'சீரணி' என்ற பெயருடன் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொள்கிறேன். இது மற்றப் பத்திரிகைகளைப்போல் வெளியிடங்களில் உள்ள எல்லாக் கடைகளிலும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சீரணிப் பணிகள் பற்றிய செய்திகள் நிறைந்த அளவில் இனி இந்தப் பத்திரிகையில் இடம் பெறும்.

— மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
மா. முத்துசாமி

[தீயணைப்புப் பயிற்சி பெற்ற சீரணித் தொண்டர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கிய விழாவில்]



அவன் தன் வயிற்றை நிரப்பிக்கொள்கிறான் என்று பொருள்; நாலைந்துபேர் சேர்ந்து உண்ணும்போதோ கூட்டுறவு ஏற்படுகிறது. இப்படி ஒருவரோடொருவர் கலந்துபழகும் போது சோறு சமைக்கும் பாண்டமும் அழகாகத் தோற்றம் அளிக்கிறது; இலை போட்டுப் பரிமாறும் விதமும் மனத்துக்குப் பிடித்திருக்கிறது. எல்லாம் ஒழுங்காகவும் தூய்மையாகவும் அமைந்திருக்கின்றன என்ற நிறைவும் ஏற்படுகிறது.

வறுமை இருக்கும் இடத்தில்அள்ளி வழங்க யாருக்கு மனம் வரும்? ஆனால் வழங்குவதுதான் மனித சமூகத்துக்குச் சிறப்பு. ஆகவே, நிலமடந்தையின் உணவுக் களஞ்சியத்துக்கு அருகிலேயே மக்கள் கூடி வீடு வாயில் அமைத்துக்கொண்டு வசிக்கலானார்கள். இப்படி அனைவரும் கலந்துபழகியதால், அவர்களிடையே என்றென்றும் நிலைபெறக்கூடிய அறவொழுக்கம், இலக்கியம், இசை, சிற்பக்கலை இவற்றைக் குறித்து நீடித்த முயற்சி எல்லாம் தொடங்கின. கூட்டுறவினால் மனித சிந்தனை வளர்ந்தது; ஆழ்ந்த சிந்தனையின்மூலம் அவன் தன்னை உணர்ந்தான். தன் முழு உருவமும்—மனிதப் பண்புதான்—இன்னதென அவனுக்குத் தெரிந்தது.

கிராமங்கள் தோன்றிய பின் நகரங்கள் தோன்றலாயின. இந்த நகரங்களில் அரசாங்க அதிகாரம் தலைதூக்கியது. அங்கே படையரண்கள், வாணிகர்களின் பண்டகசாலைகள், கல்விப் பயிற்சிக்குரிய இடங்கள், அதைக் கற்கவும் கற்பிக்கவும் பல இடங்களிலிருந்து வந்து ஒரே இடத்தில் ஆசானும் மாணாக்கனும் தங்கியிருக்க வசதி, தொலைவிலுள்ள நாடுகளைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பு, வெளிநாட்டு மக்களுடன் வாணிகம்—இப்படி யாவும் ஏற்பட்டன. புல்கூட முளைக்காத கட்டாந்தரையில்—கற்பாறைகள் பரந்து கிடக்கும் இடத்தில்—மக்கள் காலந்தள்ளுவது எளிதன்று. அங்கே வலியவனும் வலியவனும் போரிட்டால் அவர்களுள் எவன் மிக்க வலிமையுள்ளவனோ அவன் கைதான் ஓங்கும். அவனுக்கு அடங்கித்தான் மற்றவர்கள் வாழ வேண்டியிருக்கும். மனித தனிசுதந்திரத்தை அதிகமாக அடக்கிவிட்டால், தனி மனிதனுடைய ஆற்றலுக்கும் வழி இல்லாமல்போய்விடும். ஊக்கம் இருந்தாலன்றோ ஆற்றல் ஏற்படும்? தனி மனிதனுடைய சுதந்திர ஆர்வம் பொங்கி எழும் போது பெருத்தமாறுதல்நேருகிறது. பொதுமக்களை அது தட்டி எழுப்பி ஊக்கிவிடுகிறது. ஒருவரைப் பார்த்து ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு முன்னுக்குவர முயல்கிறார்கள். அறிவுத் துறை, செயல்துறை, இரண்டிலும் புதிய புதிய சிந்தனைக்கு வழிஏற்படுகிறது. இப்படிப் பல நாட்டு மக்களின் சிந்தனையும் இணைவதால் கல்வி வசதி பெருகுகிறது.

ஆயினும், நகர வாழ்க்கையை நரக வாழ்வாக்கும் முயற்சிகள் தோன்றுகின்றன. புகைக் கொடியைப்பறக்க விடும் ஆலையின் சங்கொலி கேட்கிறது; பணத்தாசை காட்டி மக்களை அமைதியான கிராமச் சூழ்நிலையிலிருந்து மயக்கி அழைக்கிறது, இயந்திர பூதம். இதனால் இன்று மனிதன் மீண்டும் பண்டை நிலைக்கு இழிந்துவிட்டான். பண்டையில் காட்டுமிரண்டியாக வாழ்ந்தபோது தன்னலத்தையே முக்கியமாகக் கருதி வந்தான். அந்தத் தன்னலமே இன்று பேராசை என்னும் பெரும் பூதமாகக் காட்சியளிக்கிறது. தனக்குச் சொந்தமாக இன்ப மாளிகை கட்டிக் கொண்டு, மனிதன் பிறர் உடலை உறிஞ்சித்தான் கொழுக்கிறான். பழங்காலத்து வழிப்பறிக் கொள்ளைத் தொழில் புதிய உரு எடுக்கிறது. கிராமங்களில் மட்டும் என்ன? முன்னே தாம் சேர்த்த பொருளைத் துய்த்து இன்பமாகப் பொழுது போக்குவதற்காகக் கிராமங்களில் மக்கள் கூடுவார்கள்.

நாமே உண்டுகளித்து வாழ வேண்டும் என்ற எண்ணம் மேலிடும்போது நாம் பிறருக்கு அடிமைப்படாவிட்டாலும் நம் அகந்தைக்கு அடிமைகள் ஆகிறோம். முன்பு பணக்காரன், தான் ஈட்டிய பொருள் பிறருக்கும் பயன்படவேண்டும் என்று எண்ணி வந்தான். ''செல்வம் என்பது எல்லாருக்கும் பொதுவானது; நாம் அந்தப் பொதுச் சொத்துக்குத் தருமகர்த்தன்'' என்ற முறையில் நடந்து கொண்டான். ஒரு மான அவமானம் நேர்ந்தபோது தன்னை அண்டினவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவுவான். இன்றுபோல்

கதவை அடைப்பதில்லை! அன்று அனைவருக்கும் பொதுவாக இருந்த உணவுப் பொருளை இன்று பேராசை காரணமாகப் பணக்காரன் தன்னிடமே குவித்து வைத்துக்கொண்டு கொள்ளை இலாபம் அடிக்கப் பார்க்கிறான். முன்பு மக்கள் சமுதாயத்தை ஒன்று சேர்த்த அதே உணவுப் பொருள் இன்று அதை இரு கூறுகப் பிளக்கப் பயன்படுகிறது!

இன்று நாம் செய்ய வேண்டியது, மக்களை இணைத்து அவர்களிடையே கூட்டுறவை வளர்ப்பதுதான். உள்ளார்ந்த அன்புடன் தனிப்பட்ட முயற்சியினாலும், பொது முயற்சியினாலும் நகரத்தையும் கிராமத்தையும் இணைத்து நிறைவுக்கு வழிகோல வேண்டும். விஞ்ஞான அறிவை, இயந்திர நுட்ப முறையை ஆக்க வழியில் பயன்படுத்தி இத்தகைய பொது நலனைக் கண்ணாரக் கண்டு மகிழ வேண்டும் என்பதே என் அவா.

# அதிக மகசூல் தரும் இரகங்கள்

முன்பெல்லாம் புன்செய் நிலங்களில் வறட்சி நிலையையும் தாங்கிக் கொண்டு பலன் தரக்கூடிய பயிர்கள் எவையோ அவைகளை மட்டுமே விவசாயிகள் பயிரிட்டார்கள். உளுந்து, கடலை, கேசரிப் பருப்பு முதலியவைகளே புன்செய்க்கேற்ற பயிர்களாகக் கருதப்பட்டன. இப்பயிர்கள் அவற்றிற்கு வேண்டிய நைட்ரஜனையும் சொந்தமாகவேஉண்டாக்கிக் கொள்ளும் தன்மையுடையனவாதலால், இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இன்று ஆழமாக உழக்கூடிய இயந்திரக் கலப்பைகளும் மற்றும் பல கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் நிலத்தின் தன்மையையே மாற்றிஅமைத்து இன்னும் அதிக இலாபமும், அதிக மகசூலும் தரக்கூடிய பயிர்களை நாம் விளைவிக்க முடியும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தவிர, அதிகமான வேர்களைப் பரப்பியும் தண்ணீரைப் பிடித்து வைத்துக் கொள்ளும்படி அகலமான இலைகளைக் கொண்டும் அதிக மகசூல் தரக்கூடியனவாகவும் விளங்குகிற வீரிய வித்துக்கள் இன்று பற்பல பயிர்களிலும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. உதாரணமாக, தைச்சுங் நேட்டிவ்—1 இரக நெற்பயிர் குறைந்த ஈரப்பதமுள்ள இடங்களிலும் கூட வறட்சியைச் சமாளித்து வளரக் கூடியதாய் இருக்கிறது. அதே போலச் சோளத்திலும், கம்பிலும் சி. எஸ். எச்.—1 எச். பி.—1 என்ற இரகங்கள் வறட்சி நிலையிலும் அதிக மகசூல் தந்து வறட்சி நிலைமையைச் சமாளித்து வருகின்றன. சி. எஸ். எச்.—1 சோளம் குறைந்த காலத்தில் அதிகப் பலன் தரக்கூடியது. எனவே, ஆந்திரப் பிரதேசத்திலும், மைசூரிலும், மஹாராஷ்டிராவிலும், காலக் கிரமமாக வறட்சி நிலவுகிற பல பகுதிகளில் இந்தச் சோளப் பயிர் ஒரு வரப்பிரசாதம் போல் இருக்கிறது. உளுந்து, துவரை மற்றும் பல அவரையினப் பயிர்களிலும் இது போல அதிக மகசூல் தந்து வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய பல வீரிய வித்துக்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

## இரு போகங்கள்

வறட்சியான பகுதிகளில் மழைத் தண்ணீரை இயன்றவரை பாதுகாக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டால் இரண்டு போகம் பயிரிடுவதும் சாத்தியமாகும். இதற்குப் பயிர்களைத் தேர்ந்தெடுப்பதில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். வறட்சி ஏற்படுவதற்கு முன்பே கதிர் பிடித்து விடக்கூடிய வித்து இரகங்களைத் தேர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டும். பலவகைத் தானியங்களிலும் இப்போது வறட்சி நிலையிலும் பயிரிடக்கூடிய குறுகிய கால வித்துக்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன.




1. சேலம் மண்டலச் சீரணியைத் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு மு.கருணாநிதி அவர்கள் துவக்கி வைக்கிறார்கள். (6-4-69)



2. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு முதல்வரிடம் சீரணித் துவக்க விழா மலரை அளிக்கிறார்.



3. சீரணியினரின் ஊர்வலத்தை மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள் காணுகின்றனர்



1. சேலம் மாவட்டச் சீரணித் துவக்க விழாவில் நடைபெற்ற ஊர்வலத்தில், அறிஞர் அண்ணு வின்திருவுருவப்படம் அலங்கரிக்கப் பட்ட வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டது.



2. ஊர்வலத்தில் பெண்களும்......



3. ...ஆண்களும் பெருமளவில் கலந்துகொண்டு, சீரணி சிறக்க ஓயாது உழைக்க உறுதி பூண்டனர்.

# அநாதை

அவன் அநாதைப் பையன்; ஊருக்குள் பிச்சை கேட்க வந்தான். எதிரெதிரே இரண்டு பெரிய மாளிகைகளைக் கண்டதும், அவன் கால்கள் தாமாக அந்தப் பக்கம் திரும்பின. அவற்றுள் ஏதாவது ஒரு மாளிகையில் தனக்கு வயிறு நிறைய உணவு கிடைக்கும் என்று எண்ணியதும், அவனுக்குப் பசி அதிகமாயிற்று.

முதல் மாளிகை பெரிய கோவிலைப் போல இருந்தது. அதன் வாசலில் கொழுக்குமழுக்கென்று காவலாளி ஒருவன் நின்றிருந்தான். பையன் அவனிடம், ''காவலரே, நான் எசமானரைப் பார்க்க வேண்டும்'' என்றான்.

''எசமானர் பூசையில் அமர்ந்திருக்கிறார்'' என்று காவலாளி உறுமினான்.

''பூசை எப்போது முடியும்?''

''நாலு நாழிகை நேரம் கழித்து.''

பையனுடைய வயிற்றுக்கு, நான்கு நாழிகை நான்கு யுகமாகத் தோன்றின. ஆயினும் அவன் பொறுமையுடன் மாளிகை வாசலில் காத்திருந்தான். பிறகு எசமானரின் தரிசனம் அவனுக்குக் கிடைத்தது.

எசமானரின் காதில் வைரக் கடுக்கன் மின்னியது. பையன் பைத்தியம் போல் அதைப் பார்த்துக்கொண்டே நின்றான்.

எசமானர் சிரித்துக்கொண்டே, ''அப்பனே! இதெல்லாம் ஆண்டவனுடைய அருள். சரி, நீ இங்கு என்ன வேலையாக வந்தாய்?'' என்று கேட்டார்.

''நான் இரண்டு நாளாகப் பட்டினி, ஐயா. எனக்கு ஏதாவது உண்ணுவதற்கு!''

''உனக்கு ஆண்டவன்மீது நம்பிக்கை உண்டா?''

''உண்டு!''

''அப்படியானால் ஏன் பிச்சை கேட்டுத் திரிகிறாய்? அட பைத்தியமே! அனந்த கோடிப் பிரம்மாண்ட நாயகனை அவனுடைய திருவிளையாடலை யார் வருணிக்க முடியும்? பறவைக் குஞ்சுக்கு அவன் அலகுமட்டும் கொடுப்பதோடு நிற்பதில்லை; அதற்குத் தேவையான இரையையும் படைத்திருக்கிறான். உன் வயிற்றுப் பசிக்கு உணவுக்கு வேண்டிய ஏற்பாடு அவன் எங்காவது செய்துதான் இருப்பான்! ஆண்டவனிடம் நம்பிக்கை வைத்து உணவை எதிர்பார்த்துக் கொண்டே இரு'' என்று சொல்லி, எசமானர் ஜபம் செய்ய உள்ளே போய்விட்டார்.

பையன் தலை குனிந்துகொண்டு மாளிகையிலிருந்து வெளியேறினான். ஏதோ ஒரு பிணம் எழுந்து நடப்பது போல் இருந்தது அவனுடைய தோற்றம்.

எதிரே மற்றொரு மாளிகை, மதம் பிடித்த யானை போல நின்றது. யானை தண்ணீரைக் குடித்துத் துதிக்கையை உயர்த்துவதுபோல், அந்த மாளிகையின் உப்பரிகை கம்பீரமாக நின்றது. அங்கே உரத்த குரலில் நிறையப் பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைக் கேட்டதும், கொந்தளிக்கும் கடல் அந்தப் பையனின் நினைவுக்கு வந்தது.

வி. ஸ. காண்டேகர்

அஞ்சி அஞ்சி நடுங்கியவண்ணம் அநாதைச் சிறுவன் அந்த மாளிகைப் படிகளில் ஏறினான். வாசலில், பருமனான காவலாளி நின்றிருந்தான். அவன் பையன்மேல்




சீறி விழுந்து, ''எங்கே போகிருய், பயலே? ஏதாவது திருடிப்போகலாம் என்று பார்க்கிருயா?'' என்ருன்.

பையன் கையைப் பிசைந்து கொண்டே, "எசமானரைப் பார்க்க வந்தேன்'' என்ருன்.

''எசமானர் பண்டிதர்களுடன் சாத்திரம் பேசிக் கொண்டிருக்கிருர்.''

''எப்பொழுது அவரைப் பார்க்க முடியும்?''

''நாலு நாழிகை கழித்து.''

ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாகத் தோன்றியது. ஆயினும், வயிற்றைப் போன்ற ஈனமான பொருள் உலகில் வேறு எதுவுமில்லை. அந்தப் பையன், மோனமே உருவாக, மாளிகை வாசலில் காத்திருந்தான்.

நான்கு நாழிகை நேரத்தில் சாத்திரப் பேச்சு ஒருவாறு முடிந்தது. பண்டிதர்கள் பலர். சீமன் பருமனுகச் சீடிகளுடன் மெதுவாக மாளிகைக்கு வெளியே வந்தார் அவர்.

ஒருவனுக்கு எசமானரின் தரிசனம் கிடைத்தது.

''இங்கு என்ன வேலையாக வந்தாடா?'' என்று அவர் கேட்டார்.

''இரண்டு நாளாக நான் பட்டினி, ஐயா! ஏதாவது உண்ணுவதற்கு...''

''ஆண்டவனிடம் உனக்கு நம்பிக்கை உண்டா?''

சற்று நேரம் முன்பு பையன் 'உண்டு' என்ருன்; ஆனல், அது எவ்வகையிலும் பயன்படவில்லை. ஆகவே இப்போது 'இல்லை' என்று சொல்லிப் பார்க்கலாம் என்று தீர்மானித்தான். சடக்கென்று அவன், 'இல்லை'' என்ருன்.

தமது சரிகைச் சால்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு, எசமானர் அருகில் வந்தார்; அவனைத் தட்டிக் கொடுத்து, ''பேஷ்! பேஷ்! இவ்வளவு சின்ன வயதில் இவ்வளவு ஆழ்ந்த அறிவை நான் எங்கும் கண்டதில்லை'' என்ருர்.

''எனக்கு ஏதாவது உண்பதற்கு...'' பையன் மிக்க ஆசையுடன் பேசினுன்.

''உண்பதற்கா? அட பைத்தியமே! இந்த உலகில் தெய்வம் இல்லை என்பது உனக்குத் தெரியும் அல்லவா? அப்படியானுல் உனக்கு உண்ண உணவு யார் கொடுப்பார்கள்? அவனவன் தனக்குத் தேவையானதைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். இரண்டு செய்திகளை நினைவில் வைத்துக்கொள்—பூமி பரந்தது; முயற்சிதான் மனிதனின் கடவுள்! உன் வயிறு எங்கும் நிரம்பும்.''

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, பையன் அந்த மாளிகையிலிருந்து வெளியேறினுன். ஊரில் மற்ற வீடுகளைப் பார்க்க அவனுக்குத் துணிச்சலே இல்லை. ஏதோ ஓர் ஆவி நடப்பது போல அவன் மௌனமாக நடந்தான்.

## தமிழாக்கம்: கா.ஸ்ரீ.ஸ்ரீ

பாதி செத்த முயலைக் கழுகு கொத்துவது போல, பசி அவன் குடலைப் பிய்த்தது.

அந்தப் பையன் தள்ளாடியவாறே ஊருக்கு வெளியே வந்தான். பசி நெருப்பாக எரிந்தது. அதை எப்படித் தணிப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை!

ஒரு மரத்தடியில், இலையில் தயிர்ச் சோற்றை ஒரு கிழவி மெதுவாக உண்டுகொண்டிருந்ததை அவன் கண்டான். அவன் கண்கள் ஆவலுடன் அந்த இலையைப் பார்த்தன. ஆனல், அங்கே செல்ல அவன் கால் எழவில்லை.

கிழவி சோற்றைச் சுவைத்துக் கொண்டே தற்செயலாக இங்குமங்கும் பார்த்தாள். பையன் அவள் கண்ணுக்குப் புலப்பட்டான். அவனது கண்ணில் கூவி அழும் பசியை அவளது உள்ளம் உணர்ந்தது. அவள் கையை அசைத்து அவனைக் கூப்பிட்டாள். நெஞ்சம் படபடக்க, அவன் வந்தான். கிழவி அவன் கையைப் பிடித்துத் தன் அருகில் உட்கார

வைத்தாள். இலேயிலிருந்து ஒரு கவளம் எடுத்து அவனுக்கு ஊட்டினுள். அவள் ஏதோ பேச விரும்பினுள்; ஆனுல், வாயிலிருந்து சொல் எழவில்லே. கண்ணில்தான் நீர் தளும்பியது. கண்ணீரின் ஒரு துளி, அந்தப் பையனின் கன்னத்தில் விழுந்தது.

அவனது வயிற்றுப் பசி தணிந்தது; வேதனே அனேத்தும் அடங்கியது. உலகத் தாயைத் தரிசித்ததாக அவனுக்குத் தோன்றியது. அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

நாலு கவளம் வயிற்றில் சென்றதும், ''பாட்டி, உலகில் ஆண்டவன் இருக்கின்றுனு?'' என்று சிறுவன் கேட்டான்.

அவள் கோணங்கித்தனமாகக் கையை ஆட்டிக்கொண்டே, ''யாருக்குத் தெரியும்! நான் ஒரு பைத்தியக்காரக் கிழவி, அப்பனே!'' என்ருள்.

# புழுதியில் இறங்கி வா!

உருத்திராக்க மணிகளே உருட்டுவதை விட்டுவிடு! மந்திரமும் தந்திரமும், ஆடலும் பாடலும் அவனேக் காட்டமாட்டா! தாளிட்ட அடைபட்ட கோயிலின் இருளடைந்த மூலேயில் யாரைப் பூசிக்கின்ருய்? கண்ணேத் திறந்து, உன் கடவுள் உன் முன்னிலேயில் இல்லேயென அறிந்துகொள்!

கடினமான தரையில் ஏர் கட்டி உழுவாரிடமும், சாலே அமைக்கச் சரளேக் கல் உடைப்பாரிடமும் அவன் இருக்கிருன். அவர்களுடன் அவன் மழையில் நனேகிருன்; வெயிலில் உலர்கிருன். அவன் ஆடையில் தூசி படிந்திருக்கிறது. உன் துவராடையைக் தூக்கியெறி! அவனேப் போலவே நீயும் புழுதியில் இறங்கி வா!

பூவையும் நறும்புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியே வா! உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து நின் இறைவனேக் கண்டுகொள்.

— தாகூரின் கீதாஞ்சலியிலிருந்து



# தேடி வந்த சுழற் கேடயம்

[ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ள ஊராட்சிகளேத் தேர்ந்தெடுத்து, அவற்றிற்குப் பரிசாகச் சுழற்கேடயம் அளிக்கும் திட்டம் ஒன்றினேத் தமிழ்நாடு அரசு உருவாக்கியது. அதன்படி நெல்லே மாவட்டத்தில் சிறந்த ஊராட்சி ஒன்றியமாகப் பாவூர் சத்திரத்திலுள்ள கீழப்பாவூர் ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அவ்வொன்றியத்தின் சிறப்புகளே இங்கே வெளியிட்டுள்ளோம்.

ஏனேய ஒன்றியங்களேப்பற்றிய கட்டுரைகள் இனித் திங்கள் தோறும் தொடர்ந்து வெளியிடப்பெறும்.

—ஆசிரியர்]

21 ஊராட்சிகளே உள்ளடக்கிய கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், 91,000 மக்கள் தொகையைப் பெற்றுச் சிறப்புடன் திகழ்கிறது.

புகழ்பெற்ற குற்ருலத்தருவி, சிற்ருறு என்ற பெயருடன் இவ்வொன்றியத்தில் பாய்ந்தோடி நீர்வளத்தைக் குறைவில்லாது அளித்து வருகிறது. ஒன்றியத்தில் வதியும் மக்களில் பெரும்பாலோர் வேளாண்மையைத் தழுவி வாழ்பவராவர். அயராது உழைக்கும் இப் பெருங்குடி மக்களேக் கழனிகளில்தான் பெரிதும் காண இயலுமேயன்றி, அவரவர் தம் இல்லங்களில் காணுவதென்பது மிக்க அரிதாகும்.

**பூச்சி மருந்து விற்பனேயில் தமிழகத்திலேயே முதலிடம்:**

இவ்வொன்றியத்திலுள்ள 7650 ஏக்கர்களில் நெற்பயிரும், 961 ஏக்கர்களில் சி. எஸ். எச். 1 சோளமும் பயிரிடப்படுகின்றன. இராசயன உரத்தைப் பயன்படுத்தாத, மேம்பட்ட உழுபடைக் கருவிகளேக் கையாளாத உழவர்களே இங்கு இல்லேயெனத் திண்ணமாகக் கூறமுடியும். தமிழகத்திலேயே பூச்சி மருந்துகள் விற்பனேயில் முதன்மை பெற்று விளங்குவது கீழ்ப்பாவூர் ஒன்றியம்தான்.

கால்நடைச் செல்வங்களேப் பேணிக்காப்பதில் வட்டார மக்கள் பெரிதும் ஆர்வங்காட்டுகின்றனர். 1967-68ஆம் ஆண்டில் மட்டும் 448 கால் நடைகளுக்குக் காயடிக்கப் பட்டுள்ளது. 8 கோழிப் பண்ணேகள் அமைக்கப்பட்டுள்ளன. 11,500 மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

**சொந்தக் கட்டிடங்களில் பெரும்பாலான பள்ளிகள்:**

பள்ளிக் குழந்தைகளில் 36 சதவீதத்தினருக்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சொந்தமான கட்டடங்களிலேயே இயங்குகின்றன.

30 சமூகக்கல்வி நிலேயங்கள், 26 இளேஞர் வேளாண்மைச் சங்கங்கள் நன்முறையில் செயல்படுகின்றன.

இவ்வட்டாரத்திலுள்ள 30 மகளிர் மன்றங்களுக்கும் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுத் தையற் பயிற்சி பெறத்தக்க நடவடிக்கைகள்

மேற்கொள்ளப் பட்டுள்ளன. இம் மகளிர் மன்றங்களுள், செட்டியூரிலுள்ள மகளிர் மன்றமே சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இம்மன்றத்திற்கு ரூ.500/- மதிப்புள்ள வானொலிப்பெட்டி அளிக்கப் பட்டுள்ளது.

மன்றங்களின் துணை கொண்டு, 376 பேர்களுக்குக் குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யப்படிருப்பதுடன், 580 பேர்களுக்குக் கருவிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

**ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டம்:**

ஒவ்வோர் உழவருக்கும் தேவையான பண்ணைத் திட்டம் தயாரிக்கப் பட்டு, தேவையான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக அளிக்கப்படுகின்றன. இவ்வட்டாரத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களனைத்தும், 1967-68ஆம் ஆண்டில் ரூ. 2,11,427 கடன் வழங்கியுள்ளது பாராட்டுக்குரியதாகும்.

இங்குள்ள கொல், தச்சுத் தொழில் கூடங்கள், உழுபடைக் கருவிகளை உடனுக்குடன் செப்பனிட்டு உழவர் பெருமக்களுக்கு உதவி வருவதுடன், தேவையான புதிய கருவிகளையும் உற்பத்தி செய்தவண்ணமிருக்கின்றன. சென்ற ஆண்டில் மட்டும் 250 பேர்களுக்கு இங்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

**எங்கும் சாலைகள், குடிநீர்:**

இவ்வட்டாரத்திலுள்ள கிராமங்களனைத்திற்கும் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே குடிநீரும் எல்லாக் கிராமங்களுக்கும் தாராளமாகக் கிடைக்க வழிவகை செய்யப் பட்டுள்ளது.

ஊராட்சிகள் திறம்படப் பணியாற்றியிருக்காவிடில், கீழப்பாவூர், ஒன்றியம் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்க இயலுமா?

**வரி வசூலில் முதலிடம்:**

1967-1968-ஆம் ஆண்டில், வீட்டு வரியை 87 சதவீதம் வசூல் செய்து நெல்லைமாவட்டத்திலேயே முதலிடம் பெற்றது இவ்வொன்றியமே. சில ஊராட்சிகளில் வரி நிலுவையே இல்லையென்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும். தமிழகத்திலுள்ள ஏனைய ஊராட்சிகளும் இதைப் பின்பற்றவேண்டும். ஒவ்வோர் ஊராட்சியும், வேளாண்மைக் கருவிகளை வாங்கிவைத்துக் குறைந்த விலையில் விவசாயிகளுக்குத் தருகிறது. ஊராட்சிகளில் பயன்தரும் மரங்கள் பெருமளவு நடப்பட்டுள்ளதால், அவற்றின் வாயிலாக மிகுந்த வருவாய் கிடைக்கிறது.

**ஒளி வீசும் ஊராட்சிகள்:**

மின் வசதியில்லாத ஊராட்சியே கீழப்பாவூர் ஒன்றியத்திலில்லை.

50 உறுப்பினர்களைக் கொண்ட சீரணியினர், கொண்டலூர் என்ற இடத்தில் ரூ. 5,000 மதிப்பளவில் ஒரு பள்ளியைக் கண்ணைக்கவரும் வகையில் உருவாக்கியுள்ளனர்.

பல்வேறு துறைகளிலும் பெருவளர்ச்சியைப்பெற்று, சில துறைகளில் முதலிடமும் பெற்றுத் திகழும் கீழப்பாவூர் ஒன்றியம், நெல்லை மாவட்டத்திலேயே சிறந்த ஒன்றியமெனத்தேர்ந்தெடுக்கப்பட்டது சிறப்புக்குரியதன்றோ?

### தொண்டர்க்கு வேண்டுவன

தொண்டுபூண் பார்க்குத் தூயநல் லுளனும்,
கண்டவர் பழிப்பாற் கலங்கா உரனும்,
துயரெது வரினும் துளங்கா நிலையும்,
அயரா உழைப்பும், ஆயும் அறிவும்,
தந்நல மறுப்பும், தகவும் வேண்டும்.
இந்நல மெல்லாம் ஏற்றருளிர் நீயே!

— கவிஞர் முடியரசன்




# கோதுமைச் சிற்றுண்டிகள்



''மலிவு விலையில் கோதுமை''

''கோதுமையை அரிசிச் சோறு போலச் சமைத்துச் சாப்பிடலாம்''

''கோதுமை உடைத்து விற்கப்படுகிறது.''

''எவ்வளவு வேண்டுமானாலும் கோதுமை கிடைக்கும்'' என்ற செய்திகள் வந்துகொண் டிருக்கின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், கோதுமையை அரிசிச் சோறுபோல உட்கொள்ள முடியும் என்பதை அனுபவ வாயிலாக அறிந்து எடுத்துரைத்துள்ளார்கள்.

கோதுமையைச் சப்பாத்தியாகவோ, பூரியாகவோதான் செய்து சாப்பிட முடியும் என்று மக்களில் பெரும்பாலோர் எண்ணி வந்துள்ளனர். கோதுமையைச் சுவையான சிற்றுண்டிகளாகவும், அரிசிச் சோறு போன்று சமைத்தும் உண்ணமுடியும் என்பதைப் பட்டி தொட்டிகளிலுள்ள எல்லா மக்களும் உணர இப்பகுதி பயன்படும் என்று நம்புகின்றோம்.

இந்த இதழில் கோதுமையில் சுவையான சிற்றுண்டிகள் சிலவற்றைச் செய்யும் முறைகளைத் திருமதி காந்தாமணி சண்முகம் அவர்கள் விளக்கியுள்ளார்கள். கிராம நலத்தில் இதுபோன்ற பகுதி இனித் தொடர்ந்து இடம்பெறும்.

— ஆசிரியர்

### 1. கோதுமைப் புட்டு

| | | |
|---|---|---|
| கோதுமை மாவு | — 2 | ஆழாக்கு |
| சர்க்கரை | — $\frac{1}{2}$ | ,, |
| தேங்காய்த் துருவல் | — $\frac{1}{2}$ | தேங்காய் (ஒரு மூடி) |
| ஏலக்காய் | — 4 | |
| நெய் | — 1 | தேக் கரண்டி (டீஸ்பூன்) |

செய்முறை: 2 ஆழாக்குக் கோதுமை மாவில் 4 பெரிய தேக் கரண்டி தண்ணீரும் தேவையான அளவு உப்புத்தூளும் கலந்து உலர்த்தியாகப் பிசைந்து கொள்ள வேண்டும். இட்டிலிப் பாத்திரத்தில் இரண்டாவது தட்டைப்போட்டோ அல்லது வாயகன்றபாத்திரத்திலோ, பிசைந்த கோதுமையைத் துணியால் கட்டி $\frac{1}{2}$மணி நேரம் வேக வைக்க வேண்டும். வேகவைத்த இந்த மாவில்



சர்க்கரை, தேங்காய்த் துருவல், ஏலக்காய், நெய் இவைகளைக் கொட்டிக் கலந்து சாப்பிடலாம்.

### 2. கோதுமைப் பகோடா

| | |
|---|---|
| கோதுமை மாவு | — 2 ஆழாக்கு |
| உப்பு | — தேவையான அளவு |
| நெய் | — 1 தேக் கரண்டி |
| பெரிய வெங்காயம் | — 4 |
| பச்சை மிளகாய் | — 2 |
| இஞ்சி | — சிறிய துண்டு |
| தட்டிய பூண்டு | — 4 அல்லது 5 |
| கடலைஎண்ணெய் அல்லது டால்டா | — தேவையான அளவு |

கருவேப்பிலை, கொத்தமல்லி.

செய்முறை: கோதுமை மாவில் உப்பு, நெய் இவைகளைத் தண்ணீர்



விடாமல் போட்டுக் கலக்கவேண்டும். வெங்காயம், மிளகாய், இஞ்சி ஆகியவைகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கோதுமை மாவில் போட்டு நன்ருகப் பிசையவேண்டும். அடுப்பில் வாணலியை வைத்துக் கடலை எண்ணெய் அல்லது டால்டாவை ஊற்ற வேண்டும். அது கொதித்த பின், மாவைக் கையால் பிசைந்தவாறே வாணலியில் போடவேண்டும். பொன் வறுவலாகச் சிவந்த பின் எடுத்துவிட வேண்டும். சூடாகவோ அல்லது ஆறவைத்தோ டப்பியில் போட்டுவைத்துக் கொள்ளலாம். இது சாப்பிட மிகவும் நன்ருக இருக்கும்.



### 3. கோதுமை அப்பம்

| | |
|---|---|
| கோதுமை மாவு | — 3 ஆழாக்கு |
| வெல்லம் | — 1 கோப்பை |
| தேங்காய்த் துருவல் | — 1 மூடி |
| ஏலக்காய் | — 4 |
| தண்ணீர் | — 2 கப் |
| சோடாமாவு | — தேவையான அளவு |

செய்முறை: கோதுமை மாவில் மேலே கூறியவைகளைக் கலந்து இட்டிலி மாவு போலப் பதமாகக் கரைத்துக்கொள்ளவேண்டும்.

வாணலியில் கடலை எண்ணெய் அல்லது டால்டாவைச் சிறிது எண்ணெயுடன் கலந்து ஊற்றவேண்டும். சுட்டபின், 1 கரண்டி மாவை விட்டுச் சிவந்தபின் சிறிது திருப்பி எடுத்து விடல் வேண்டும். சூடாகச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

### 4. கோதுமைப் பாயசம்

| | |
|---|---|
| உடைத்த கோதுமை | — 1 ஆழாக்கு |
| ரவை | — $\frac{1}{2}$ கப் |
| வெல்லம் | — போதியஅளவு |
| ஏலக்காய் | — போதியஅளவு |
| தேங்காய்ப் பால் | — 1 டம்ளர் (அல்லது) போதிய அளவு பால் |
| நெய் | — $\frac{1}{2}$ டீஸ்பூன். |

செய்முறை: கோதுமை ரவையை நெய்யில் வறுத்துக் கொள்ளவேண்டும். ஒரு பாத்திரத்தில் 3 ஆழாக்குத் தண்ணீர்விட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். அதில் வறுத்த ரவையைப் போடவேண்டும். 10 நிமிடம்கழித்து, வெல்லம், ஏலக்காய், பால் முதலி



யவைகளைக் கலக்கவேண்டும். இறக்கு முன் கேசரிப் பவுடரைப்போட்டு இறக்கவேண்டும். ஆறினபின் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

### 5. கோதுமைத் தோசை

| | |
|---|---|
| கோதுமை மாவு | — 2 ஆழாக்கு |
| மோர் | — 1 டம்ளர் |
| உப்பு, சோடாமாவு | |
| வெங்காயம் | — 2 |
| பச்சைமிளகாய் | — 3 |

கொத்தமல்லித்தழை, கருவேப்பிலை.

செய்முறை: கோதுமை மாவில் சோடா, மோர், உப்பு கலந்து சிறிது தண்ணீர் விட்டுக் கரைத்துக்கொள்ள வேண்டும். வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு வெங்காயம், மிளகாய் இவைகளைப் போட்டுக் கலக்கவேண்டும். தோசைக் கல்லில் தோசையாக வார்த்துச் சாப்பிடலாம்.

—காந்தாமணி சண்முகம்

### நலமெய்தி உய்வோம்!

பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்.
பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்;
கூட்டாளி வர்க்கங்கள் குணம்மாற வேண்டும்;
குற்றவேல் தொழிலென்ற மனம்மாற வேண்டும்;
வீட்டோடு தாம்மட்டும் சுகமாக உண்டும்,
வேறுள்ளோர் துன்பங்கள் கண்ணூரக் கண்டும்,
நாட்டோடு சேராத தனிபோக உரிமை
நடவாதிங் கினியென்று நாமறிதல் பெருமை.

பசைமிக்க தொழில்செய்து பலன்முற்றும் யாரோ
பரிவற்ற முதலாளி பறிகொண்டு போக
பசிமிக்கு மிகநொந்த தொழிலாளர் எல்லாம்
பகையென்று நமையெண்ணிப் பழிகொள்ளு முன்னல்
வசைமிக்க நிலைமாற வழியொன்று சூழ்வோம்;
வறுமைக்கே இடமற்ற சமுதாய வாழ்வை
இசைமிக்க முறைகண்டு ஏற்பாடு செய்வோம்;
எல்லாரும் குறைவற்ற நலமெய்தி உய்வோம்!

— நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;
விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.
* கதர் – கிராமத் தொழில்களை ஆதரிப்பது,
உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு
உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய்
* தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்
பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்
திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்,

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை "குறளகத்"தில் இயங் ம்
கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு:
கதர் - கிராமத் தொழில் துறை
2, சர் தேசிகாச்சாரி ரோடு,
சென்னை-4

# காட்சியும் கருத்தும்

சு. ஷெ.




உலகில் பல்வேறு காட்சிகளை நாம் நாள்தோறும் காண்கிறோம். காணும் காட்சி ஒன்றேயாயினும் காண்போரின் மனநிலைக்கு ஏற்பக் கருத்துக்கள் தோன்றுவதுண்டு. பூத்துக் குலுங்கும் மலர்க் கொத்து ஒன்றினைப் பக்தன் ஒருவன் காண்பானேயாகில், அதைக் 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்' அணிந்துள்ள பரமனடியில் சேர்க்க வேண்டுமென எண்ணுவான். காளை ஒருவன் காண்பானேயாகில் அதைத் தன் மனம் கவர்ந்தாளின் கூந்தலிலே சூடிட விழைவான்- விரைவான். காட்சிப் பொருளான மலர்க் கொத்து ஒன்றேயாயினும் அது பக்தன் உள்ளத்தே தோற்றுவித்த கருத்தும், இளைஞன் உள்ளத்தே எழுப்புவித்த கருத்தும் வெவ்வேருக இருந்திடக் காணுகிறோம்.

புலவர்கள், இயற்கையில் தோன்றும் காட்சிகளைத் தங்கள் தங்கள் மனநிலைக்கேற்ப வெவ்வேறு கோணங்களில் காட்டுவதை இலக்கியங்களைக் கற்போர் நன்கு உணர்வர். மாலை

வேளையில் தோன்றும் மதியின் ஒளி கூடினோர்க்கு மகிழ்ச்சி நிதியம்; பிரிந்திருப்போர்க்கோ வேதனைப் பெருக்கம். அவ்வொளி கூடினோரை நிழலெனக் குளிர்விக்கும்; பிரிந்தோரை ஆலமென வருத்தும்.

காட்டில் சீதையை இராமன் பிரிந்திருந்த நிலையில் விண்ணிலே தண்மதி தோன்றலாயிற்று. அமுத ஊற்றும் நிலவின் குளிரொளி அவனுக்குச் சுட்டெரிக்கும் பெரு நெருப்பாகத் தோற்றுகிறது. அண்ணாந்து பார்க்கிறான்- அழகொழுகும் மதியமும் அதைச் சூழ்ந்து விண்மீன்களும் தென்படுகின்றன. காதலியைப் பிரிந்தமையால் கனலுற்ற உளங்கொண்ட இராமனுக்குக் குளிர் நிலவு கொடுமைத் தீயாகிறது. தண்ணொளி தன்னைச் சுட்டதுபோல் விண்ணையும் சுட்டிருக்க வேண்டும் என எண்ணுகிறான். உடுக்களைப் பார்க்கிறான்; ஊழித் தீயான நிலவொளி சுட்டதால் விண்ணில் ஏற்பட்ட புண்களே அவை எனக் கூறுகிறான்.

''அப்புடை யலங்குமீ னமரு மார்கலி
உப்புடை யிந்துவென் றுதித்த வூழித்தீ
வெப்புடை விரிகதிர் விரிப்ப மெய்யலாங்
கொப்புளம் பொடித்ததோ கொதிக்கும்
வானமே''

இந்த இராமாயணப் பாடல் மேற்கண்ட கருத்துக்களை உள்ளடக்கி நிற்கிறது. சீதையின் பிரிவால் உளம் கொதித்த இராமனுக்குச் சீதள நிலவு சுடு நெருப்பாகவும், அந்நெருப்பு விண்ணைச் சுட்டதால் ஏற்பட்ட கொப்புளங்களே விண்மீன்களாகத் தோன்றிற்றெனவும் கம்பர் பாடல் கூறுகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் மீன் பூத்த வானத்தைப் பார்க்கிறார். அவர் உள்ளத்தே வேறொரு வகையான கருத்துப் பூ மலர்கிறது. அந்தி மயங்கிய வேளை; அருமைத் தம்பியை அழைத்து ஆகாயத்தைப் பார் என்கிறார். அங்கே தோன்றும் வெள்ளைப் பொட்டுக்களைக் காட்டி ''இவை என்ன தெரியுமா?''என்று தம்பியைக் கேட்கிறார். தம்பி விரைந்து கூறுகிறான் ''விண்மீன்கள்''என்று. புலவர் கூறுகிறார், ''இல்லை! இவை கொப்புளங்கள்!''. ''கொப்புளங்களா?''- ஐயத்தோடு கேட்கிறான் தம்பி. 'ஆம்! விண் கொதித்ததால் ஏற்பட்ட கொப்புளங்கள்' - இது புலவரின் பதில். ''விண்ணுக்கு ஏன் கொதிப்பு ஏற்பட்டது?'' - தம்பியின் வினா. ''மண்ணில் நடக்கும் கொடுமைகளைக் கண்ணில் கண்டமையால் ஏற்பட்ட கொதிப்பு'' - புலவரின் பதில். ''விண் கொதிக்குமளவுக்கு மண்ணில் நடக்கும் கொடுமைதான் என்ன?'' - விவரமறியத் தம்பி விடுத்த வினா. ''அதுவா! கூறுகிறேன் கேள்! இம் மண்மீதில் உழைப்பவர்கள் எல்லாம் வறியவர்கள். உழைத்த பின்னர்க் கூலி கேட்கச்சென்றால், கூலி கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை; அவ்வேளையில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் நொந்த உள்ளங்களைச் சுடுசொல் கொண்டு சுடுகிறார்களே அவர்கள் எல்லாம் செல்வர்கள்! இக் கொடுமையைப் பகலிலெல்லாம் கண்டு விண் பொங்கியது; கொதித்தது. அதனால் ஏற்பட்ட கொப்புளங்களே விண்மீன்கள்! அறிந்தாயா தம்பி!''-இவ்வாறாகக் காரணம் அறிவிக்கிறார் கவிஞர்-

மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம்இ தைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!

தொழிலாளர் நிலை கண்டு உளம் வருந்திப் புலவர் பாடிய பாடல் இது. உள்ளம் கொதிக்கும் ஒருவர்க்குச் சுற்றுச் சூழல் எல்லாமே கொதிக்கும்; எனவே விண்ணும் கொதித்ததாக எண்ணுகிறார். அதனால் ஏற்பட்ட கொப்புளங்களாக விண்மீன்கள் அவருக்குத் தென்படுகின்றன. தம்பியை அழைத்துக் காட்டுகிறார். இக் கொடுமை நீங்க அவன் பாடுபடமாட்டானா என்ற ஆசையால்!

தொழிலாளர் நிலை கண்டு பதைபதைத்தவர் புலவர் பாரதிதாசன். ''சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி, நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும் நிறையுழைப்புத்



தோள்களை''க் கொண்ட தொழிலாளர் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பது எந்தச் சக்தியாயினும் அஞ்சாது அதை அகற்ற வேண்டுமென்று பாடியவர் அவர். அதனால் தான்,

நடவு செய்த தோழர்கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பி லாத செல்வர்
உலகைஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை ஏவுவோம்

என்று வீரத்தோடு பாட முடிந்தது அவரால்.

தொழிலாளர் நலம் கருதிக் கவி முழக்கம் செய்த இம் மாக்கவிஞனது உரைகளை 'மே' நாளில் நாம் நினைவு கூர்வோமாக!



''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''

விவசாயத்தில் அதிக விளைச்சலை ஏற்படுத்தி, சுய தேவையைப் பூர்த்தி செய்து, பிற நாட்டவரும் மெச்சத்தகு வண்ணம், இந்திய நாட்டிலும், விவசாயச் செல்வம் கொழிக்க விவசாயிகளாகிய நமது உழைப்பே தலையாயது.

நான் ஏற்றுச் செய்யும் விவசாயத்தில், அதிக விளைச்சல் தரும் — நெல் வகைகள் ஏடிடி. 27, ஐ ஆர்.—8 மற்றும் கரும்பு வகைகளைப் பயிர் செய்து, மகோன்னத விளைச்சலைத் தொடர்ந்து நிரூபித்து, என்பொறுப்பை நிறைவேற்றி வருவதில் மனமகிழ்வெய்துகின்றேன்.

ஆகவே, விவசாயிகளாகிய நாம், நம் கடமைகளைச் செவ்வனே தொடர்ந்தாற்றி நாட்டின் விழுமிய செழிப்புக்கு நாமே வித்தாவோம், விளைவோம்.

என் அன்புசால் வாழ்த்துக்கள்.

சுந்தரராஜன் சேர்வை
பெருந் தலைவர்
அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம்
மதுரை மாவட்டம்




**கிடங்குகளில்** தானியங்களைப் பாதுகாக்கும் போது:

**கூரை** ஒழுகாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்;

கிடங்கின் உட்புறத்தைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுங்கள்.

**தரை** மீது ப்ளாஸ்டிக் விரிப்புகள் மீதோ அல்லது மரத்தாலாகிய தாழ்வான மேடைமீதோ மூட்டைகளை சுவற்றிலிருந்து இரண்டடி தள்ளி குறுக்கு வாட்டத்தில் அடுக்குங்கள்.

ஜன்னல்களுக்கும் காற்றோடிகளுக்கும் வலையடித்தால் பறவைகள் நுழையாமலிருக்கும்.

கிடங்குகளை அடிக்கடி பார்வையிடுங்கள்.

புழுக்கள் தென்பட்டவுடன் கிடங்கின் உட்புறத்தில் பூச்சி மருந்து தெளியுங்கள். எலி பாஷாணம் வைத்து எலிகளைக் கொல்லுங்கள்.

புதிதாக அமைக்கப்பட்ட வார்ப்பட உலோகத் தொம்பை ஈரம், புழுக்கள், பூச்சிகள், எலிகள், பறவைகள் ஆகியவற்றிலிருந்து தானியங்களை நன்கு பாதுகாக்க உதவும்.

உலோகத் தொம்பையை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எடுத்துச் செல்லலாம்; எளிதாக நிர்மாணிக்கலாம்; இது சகாயமான விலையில் கிடைக்கிறது.

தானியங்களை சேமிப்பதால்
உணவும் சேமிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு:-
டைரக்டொரேட் ஆஃப் ஸ்டோரேஜ்
அண்ட் இன்ஸ்பெக்ஷன்,
உணவு இலாகா, க்ருஷிபவன், புதுதில்லி.

davp 68/619

# தொழில் பெருக்கமும் தொழிலாளர் நல்வாழ்வும்

**ஜி. பராங்குசம், M.L.C.**

மேதினி போற்றும் மே தின விழா உலகப் பாட்டாளி மக்களின் உள்ளத்தில் புத்துணர்ச்சியையும் எழுச்சியையும் தோற்றுவித்திருக்கிறது.

1886ஆம் ஆண்டு மே முதல் நாளன்று அமெரிக்கப் பாட்டாளி வர்க்கம் எட்டு மணி நேர வேலை உரிமைக்காக எழுப்பிய போர்க்குரல் அந் நாட்டின் முதலாளி வர்க்கத்தின் கண்மூடித்தனமான போக்கைத் தடுத்து நிறுத்த உதவியது.

நாளடைவில் அஃது உலகம் தழுவிய இயக்கமாகவும், ஒவ்வோராண்டும் மே திங்கள் முதல் நாளன்று பாட்டாளி வர்க்கத்தின் உரிமையை உலகுக்குரைக்கும் பெருநாளாகவும் உருவெடுத்தது.

இன்று அந் நாள் - ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சமாதானத்திற்காகவும், சனநாயத்திற்காகவும், சோசலிசத்திற்காகவும் மக்கள் நடத்தும் போரட்டத் தினமாக - புரட்சித் திருநாளாக மலர்ந்திருக்கிறது.

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்ற எழுச்சி முரசம் இந்தியத் துணைக்கண்டத்தில் - அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் நீண்ட பலகாலமாக ஒலிதது வந்திருக்கிறது.

அந்த எழுச்சி முரசைத் தட்டித் தட்டி அறியாமைத் துயிலில் ஆழ்ந்து கிடந்த தமிழ்ப் பாட்டாளிகளை விழித்தெழச் செய்தனர் நமது மூதாதையினர். அதற்காக அவர்கள் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல!

சுயமரியாதைச் சுடரொளியாக விளங்கிய சிங்காரவேலரும், வாசுதேவும், தமிழ்ப் பெருங்கடல் திரு. வி. க. வும் தொழிற்சங்க

இயக்கம் தமிழ் மண்ணில் பற்றிப் படர்ந்திட உறுதுணையாக இருந்தார்கள்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தம்முடைய அரசியல் வாழ்வின் துவக்கக் காலத்திலேயே அந்தப் பேரியக்கத்திற்கு உரமிட்டு, நீர்பாய்ச்சி வளர்த்து வந்தார். அதனால்தான் அவரது கரத்தில் மக்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தபோது, தொழிலாளர் வர்க்கத்தின்பால் பற்றும் பாசமும் பரிவும் மேலிடத் தொழில் பிரச்சனைகளை அணுகி அனுசரித்து நடந்து வந்தார்.

இந்த ஆண்டு மே தின விழா தமிழகத்தில் சீரும் சிறப்புமுற நடைபெற்றது. ஒவ்வோராண்டு மேவிழாவிலும் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கலந்து கொள்வார்கள். இந்த ஆண்டில் அவர் இல்லை; ஆகவே அவரது கல்லறை முன்பு கண்ணீர்த் துளிகளுடன் இந்த மே தினத்தைக் கொண்டாடினோம். இன்று அவர் இல்லையென்றாலும், அவர் விட்டுச்சென்ற சோசலிச சிந்தனைகள் நம்மிடம் நீங்காது இடம் பெற்றுள்ளன. அந்த வழியில் நாம் நடந்து ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வற்ற உன்னத சமுதாயத்தைப் படைத்திடத் தமிழ் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் உறுதி மேற்கொள்ளவேண்டும்.

அந்த உறுதியை ஏற்றுக்கொண்டு செயல் புரியுமுன் இன்றையத் தொழில் உலகு பற்றியும் நாம் ஒருமுறை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதுபற்றிய எனது கருத்துக்களை இக்கட்டுரை வாயிலாக விளக்கிட விரும்புகிறேன்.

இன்றைய உலகம் முதலாளித்துவ முகாம், சோசலிச அணியென இரு பெரும் கூறுகளாகப் பிரிந்து நிற்பதைக் காண்கிறோம்.

'கடமைகளைச் செய்; உரிமைகளைக் கேட்காதே! ஒரு சிலர் உல்லாச வாழ்வு வாழ்வதற்கே நீ உழைக்க வேண்டும். அதற்காகவே நாங்களும் உன்னை வாழ அனுமதித்திருக்கிறோம்' என உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்த நிலையை மாற்றி, "உலகம் உழைப்பவனுக்கே உரியது; உரிமையைப் பறிப்பவர் எவராக இருந்தாலும் சரி,

"ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ"

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் எழுச்சிப் பாட்டிற்கு இலக்கணமாக அமைந்துவிட்ட சோசலிச அணி ஒரு பக்கம்.

முதலாளித்துவ முகாமாக இருந்தாலும் எங்கள் நாடு எந்தச் சோசலிச நாட்டிற்கும் எந்த வகையிலும் பின்தங்கி விடவில்லை; சந்திரமண்டலத்திற்கே செல்லுகின்ற அளவிற்கு விஞ்ஞானத் துறையிலும் தொழில் துறையிலும் ஏனைய துறைகளிலும் உலகத்திற்கே வழிகாட்டியாகத் திகழ்கின்றதென மார்தட்டிக் கொண்டிருக்கும் முதலாளித்துவ முகாம் ஒரு பக்கம்.

இவர்களுக்கிடையில் மக்களாட்சி முறையில் நடைபோட்டுக்கொண்டு வரும் நமது நாடு முழு அளவில் சுய தேவையைப் பூர்த்திசெய்து கொள்ள இயலாத நிலையில் தொழில் துறையில் உள்ளது. ஆகவே அந்த அளவுக்கு முன்னேற்றமடையவில்லை என்பதை நாம் உணர்ந்தாகவேண்டும்.

ஒரு நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டுமானால், தொழில் அமைதி, தொழிலாளர்-தொழிலதிபர் நல்லுறவு மிகமிகத் தேவை; அவர்களுக்குள் நல்லுறவின்றி நாடு முன்னேற முடியாது. இந்த இருசாராரும் இணைந்து நின்று செயல்பட்டால்தான் நாட்டில் தொழில் முன்னேற்றம் ஏற்படும். பொதுச் செல்வம் பெருகும். சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ள இயலும். இந்தச் சுமுகமான நிலை இன்று நாட்டில் இருக்கிறதா என்றால் இல்லை என்றே கூறலாம்.

தொழில் தகராறுகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டே இருக்கின்றன. தொழிலாளி முதலாளி நல்லுறவு வெறும் கானல் நீராகவே இருக்

1. நெல்லை மாவட்டத்தில் சிறந்த கிராம வானொலி மன்றமாகத் திகழும் செட்டியூர் கிராம வானொலி மன்ற உறுப்பினர்கள்





2. 'கடபோக காத்தி' கிராமத்தில் கட்டப்பட்டுள்ள அண்ணா பாலம்.



3. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், ஒன்றிய உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர் ஆலடி அருணா ஆகியோர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் சிறந்த ஊராட்சி ஒன்றியம் எனக் கீழப்பாவூர் ஒன்றியம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

1. அவ்வொன்றியத்தைச் சார்ந்த சிறந்த தேனீ வளர்ப்பாளர் திரு. செல்லையா (பெத்த நாடார் பட்டி)





2. கீழப்பாவூர் ஒன்றியத்தில் சிறந்த பணியாற்றிவரும் செட்டியூர் மகளிர் மன்றம்.



3. அதிசயத் துவரை-ஜி 3, குவாலியர் துவரை விளைச்சல் செய்த முற்போக்கு விவசாயி திரு. இலக்குவன்.



4. சீரணிப் படையினரால் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக் கட்டடம் (கொண்டலூர்).



கிறது. இந்த நிலை ஏன்? இதை மாற்றி அமைப்பது எப்படி? என்பதைப் பற்றி நாட்டு நலனில்-முன்னேற்றத்தில் அக்கறைகொண்ட அத்தனை பேரும் எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டு இருக்கிறோம்.

தொழிலாளர்கள்தான் தொழில் அமைதியைக் கெடுக்கிறார்கள்; நல்லுறவைப் பாதிக்கும் செயல்களில் ஈடுபடுகிறார்கள், எனக் குற்றம் சாட்டும் முதலாளிகள் ஒரு புறம்; மாடு போல் உழைக்கிறோம்,எங்கள் உழைப்பினால் பெரும் பயனைத் தங்களது உல்லாச வாழ்விற்குப் பயன்படுத்திக்கொள்ள முதலாளிகள் முனைகிறார்களே தவிர எங்கள் வாழ்வை வளமாக ஆக்க முன்வரவில்லையே என்று மனம் வெதும்பிக் குரல் எழுப்புகின்ற தொழிலாளர்களின் உள்ளக் குமுறல் மற்றொரு புறம்.

இந்த நிலை நீடித்தால் நாட்டில் எப்படித் தொழில் அமைதி நிலவும்? வளம் பெருகும்? எனவே இந்தப் பிரச்சனைக்குரிய பரிகாரம் காண வேண்டியது நமது முழு முதற் கடமையாகும்.

பொதுவாகவே முதலாளிகள்" தொழிலதிபர்கள் இலாபம் ஒன்றையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டு தொழில் முதலீடு செய்கிறார்கள் என்ற எண்ணம் பரவலாக உள்ளது. இந்த நிலை மாறித் தாங்கள் முதலீடு செய்வது தொழில் துறையில் ஈடுபட மட்டுமல்ல; நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்க மட்டுமல்ல; நமது தாய்த்திருநாடு உலக அரங்கில் தொழில் வளமிக்க நாடாகத் திகழவேண்டுமென்ற நாட்டுப் பற்றோடு - உணர்வோடு என்ற நிலை ஏற்படவேண்டும்.

தன்னிடத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களைத் தனது அடிமை, தான் இட்ட பணியை இனிது முடிப்பதற்குரிய பணியாள் என்ற மனப் பான்மையை எந்த முதலாளியும் கொண்டுவிடக்கூடாது. தன்னிடத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளிகள் கரத்தில்தான் தனது தொழில் வளமும் செல்வப்பெருக்கும் அடங்கியிருக்கிறது. அவர்களுக்கு மனநிறைவு அளிக்கின்ற வகையில் அவர்களது நலனில் முழு அக்கறைசெலுத்த வேண்டும். அவர்கள் குறைகளைக் கண்டறிந்து அவற்றை உடனுக்குடன் தாய்ப்பாசத்துடன் நீக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். கிடைக்கின்ற இலாபத்தில் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு மீதியைத் தொழிலாளர்களின் நலனுக்காக, அவர்களுடைய குடும்ப நலனுக்காக, அவர்களது பிற்கால வாழ்விற்காகப் பகிர்ந்தளித்துவிடவேண்டுமென்ற மனப்பக்குவத்தைத் தொழிலதிபர்கள் பெற்றுவிடுவார்களேயானால் தொழில் தகராறுகள் அநேகமாக எழுவதற்கே இடமில்லை.

தொழிலாளர்களிடம் குறைகளைக் காணுகின்ற நேரத்தில் அன்பு உள்ளத்தோடு, குடும்பப் பாசத்தோடு,பரிவு உணர்ச்சியோடு அதனைக் களைவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களேயானால் நிச்சயமாகத் தொழில் தகராறுகள் ஏற்படாது. தொழிலாளி — முதலாளி நல்லுறவும் உறுதிப்படும்.

அதைப்போலவே தொழிலாளர்களும் தாங்கள் பெறுகின்ற ஊதியத்திற்காகவே உழைக்கின்றோம் என்ற உணர்வைவிட்டு, தங்களது உழைப்பு, நாட்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, அவர்களை வாழ வைப்பதற்காக என்ற உணர்வைப் பெறுவதுடனல்லாது - நமது நாட்டைத் தொழில் வளமிக்க நாடாக ஆக்குவதற்காக, நம் நாடு உலக நாடுகளின் மத்தியில் தலை நிமிர்ந்து நிற்கச் செய்வதற்காக என்ற பொது உணர்வோடு - நாட்டுப்பற்றோடு செயல்படவேண்டும்.

எடுத்துக்காட்டாக இரண்டாவது உலகப்போரில் அணுகுண்டால் தாக்கப்பட்டு உருத் தெரியாமல் அழித்து ஒழிக்கப்பட்ட சப்பான், இன்று உலக அரங்கில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்று சொல்லத் தக்க அளவிற்கு மிகப்பெரிய வல்லரசுகளுடன் — முதலாளித்துவ, சோசலிச நாடுகளுடன் போட்டியிடக்கூடிய அளவிற்குத் தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அதற்குரிய காரணமென்ன? அந்த நாட்டுத் தொழிலாளர்கள் தங்களது தாய்நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும்; உலக நாடுகளில் தங்கள் நாடு தொழில் வளத்தில் தலையாய நாடாகத் திகழ

# நீர் உயர நெல் உயரும்

எம்.எஸ்எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வார்ப்பு இரும்பும் எஃகும் கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள், ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடின்றி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக் கொண்ட பம்ப் செட்டுகள் மட்டுமின்றி, தனி இணைப்புக்கான சக்கரங்களைக் கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. ஸி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

MSSIC

PUMPSET





பழுதடைந்த விவசாய கருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் பட்டறைகளை அணுகுங்கள். மிருந்த உத்தரவாதத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும்.





MSSIC

DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழித்து வேளாண்மையை விருத்திச் செய்ய உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன் கொள் அளவு 300 கன அங்குலம். எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் விவசாயக் கருவிகள் நீடித்த உழைப்பும் நிகரற்ற உறுதியும் கொண்டவை.

MADRAS STATE SMALL INDUSTRIES CORPORATION LTD.

விவரங்களுக்கு அணுகவும்

நிருவாக இயக்குனர்

**தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்**

35/2. உட்ஸ் ரோடு.

சென்னை-2.




வேண்டுமென்ற நாட்டுப்பற்றுக்கு, போட்டி மனப்பான்மைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டதே அல்லவா?

குண்டூசி செய்வதற்குக்கூட இரும்பில்லாத அந்தச் சப்பான் நாட்டு மக்கள் இத்தகைய தொழில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்றால், எல்லா வளமும் நிறைந்துள்ள இந் நாட்டுத் தொழிலாளி வர்க்கமும் தொழில் அதிபர்களும் அத்தகைய நாட்டுப்பற்றுடன், மனஉறுதியுடன் செயல்படத் துவங்கினால் நாம் சாதிக்க முடியாதது என ஒன்றிருக்க முடியுமா?

வாழ்க்கைப்பிரச்சனைக்காகவே நாம் உழைக்கிறோம் என்ற எண்ணம் இருக்கக்கூடாது. இந் நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்குவதற்காகவும், நமது தாய்த்திருநாட்டிற்கு உலக அரங்கில் உரிய இடத்தைப் பெற்றுத் தருவதற்காகவும், அந்நிய நாட்டிடம் அன்னை நாடு கையேந்தி நிற்கின்ற அவலநிலையை மாற்றுவதற்காகவும் நாம் உழைக்கிறோம் என்ற உணர்வோடு நமது தொழிலாளர்கள் தீவிரமாகச் செயல்படுவார்களேயானால் அவர்களால் ஆகாதது ஒன்றுமில்லை.

இப்படிக் கடமைகளைச் செய்து விட்டு உரிமைகளைப் பெற முயற்சிக்க வேண்டும். இந்த முயற்சி அமைதிவழியில், அன்புவழியில் அமைவதே விரும்பத்தக்கது. சட்டம், அமைதி குலைகின்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதோ, பொது மக்களுக்குத் தொல்லை தரத்தக்க வழிகளைப் பின்பற்றுவதோ முறையாகாது. பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குச் சட்ட வழியான, நியாயமான, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து கொள்ளவேண்டும்.

வேலை நிறுத்தமென்பது தொழிலாளர்களின் கடைசி ஆயுதமாக இருக்க வேண்டும். அதைப்போலவே கதவடைப்பும் தவிர்க்கப் படவேண்டும். குறிப்பாகத் தொழில் வளர்ச்சியடையாத நமது நாட்டில் இத்தகைய வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்குமென்பதில் ஐயமில்லை.

தொழிற்சங்கங்களும், அதன் தலைவர்களும் தொழிலாளர்களை உரிமைக்காக மட்டும் போராடப் பயிற்றுவிக்கமால், கடமைகளைச் செய்வதற்கும் ஊக்குவிக்க வேண்டும். நம் தாய்நாடு, தொழில் வளத்தில் முன்னிலையில் நிற்கவேண்டும்; தொழிலாளி - முதலாளி நல்லுறவு நீடிக்கவேண்டுமென்று விரும்புகின்ற நாட்டுப்பற்று கொண்டனவாக அவை இருக்கவேண்டும்.

பொதுவாக நாட்டு நலனில் ஈடுபாடு கொண்டு தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் தங்களது சொந்த நலனை, இலாப நட்டத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருப்பதைக் கைவிட்டு, தரணிபுகழும் நிலையைத் தாய்த்திருநாடு பெறவேண்டும்; இல்லையெனும் தொழில் இங்கில்லை என்ற உயரிய இடத்தை நாம் அடைய வேண்டும்; இதுவே நாம் பிறந்த பொன்னாட்டிற்குச் செய்கின்ற புனிதக் கடமை, தொண்டு என்ற உணர்வோடு செயல்படவேண்டும். ஒரு குடும்பம் இன்புற்றிருக்க வேண்டுமானால் எவ்வாறு கணவனும் மனைவியும் கருத்தொருமித்து இருக்கவேண்டுமோ அதைப் போன்றே தொழிலாளர்களும் தொழில் அதிபர்களும் நாடு வளம்பெற, தொழில் சிறக்க, நலமெலாம் பெற்று வாழ ஒன்றுபட்ட உள்ளத்தினராகச் செயல்பட வேண்டும்.

வாழ்க ஒற்றுமை.

வளர்க தொழில் துறை.

## கையெழுத்துமட்டும் இருந்த கடிதம்!

புகழ்பெற்ற ஹென்றி வார்டு பீச்செர் என்ற பாதிரியார்க்கு ஒரு கடிதம் வந்தது. அதில் "முட்டாள்" என்ற ஒரு சொல் மட்டுமே எழுதப்பெற்றிருந்தது. அது குறித்து அடுத்த ஞாயிறன்று அவர் ஆற்றிய விளக்கப் பேருரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: பல வேளைகளில் கடிதம் எழுதுவோர் தம் கையெழுத்திட மறந்து விடுவதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்தக் கடிதம் எழுதியவரோ தம் கையெழுத்தை மட்டும் இட்டுவிட்டுச் செய்தியை எழுத மறந்து விட்டார்.

We Manufacture High Quality Pyrotechnic Aluminium Power and Atomised Aluminium Power with West German Collaboration.

The quality of our Aluminium power is far better than the imported powder and will be appreciated by the consumers. We are glad to inform that we save foreign exchange to the tune of Rs. 25 lakhs every year.

THE METAL POWDER COMPANY LIMITED

Maravankulam, Tirumangalam Post
MADURAI DISTRICT

Phone: Madurai 8147 Grams: "Powers" Madurai

கவனிக்கவும் -
யானை டிரேட் மார்க்
யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில்
இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்

பாக்ட் கம்பெனியாரின்
உரத் தயாரிப்புகள்
பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸபேட் 16 : 20)
அல்ட்ராபாஸ்
(மிகவும் பொடியாகத் தூளாக்கபபட்ட மினரல் பாஸ்பேட்)
அமோனியம் ஸல்பேட்
சூபர்பாஸ்பேட்
N.P.K. கலப்பு உரங்கள்

FACT

பாக்ட் ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை

Criterion-FT-2004

GRAMANALAM PART-2

# ஊராட்சி அரசிதழ்

# PANCHAYAT GAZETTE

தமிழ்நாடு அரசு ஊழியர்கள், தமது திருமணங்களையோ, அல்லது தமது குழந்தைகளின் திருமணங்களையோ கொண்டாட வேண்டிய தவிர்க்க முடியாத செலவினங்களுக்குக் கடன் வசதி அளிக்க வேண்டியதை மாநில அரசு கடந்தகாலமாகக் கவனத்தில் கொண்டிருந்தது. அதற்கேற்ப இவ்வாணையில் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு, இந்தக் கடனை அளிக்க அரசு அனுமதி வழங்குகிறது.

இத்திட்டம் 1-4-1969 முதல் செயலுக்கு வருவதுடன் முதற் கட்டமாக இது மூன்றாண்டுகள் செயலிலிருக்கும். இந்த மூன்று ஆண்டுகளுக்குப் பின் நிலைமை பரிசீலனை செய்யப்படும்.

## திருமணக் கடன் திட்டம்

### இணைப்பு

அரசு ஊழியர்களுக்குத் திருமணக் கடன் வழங்குவதற்குரிய விதிகள்:

(1) திட்டத்தின் நோக்கம் :

தமது திருமணங்களையோ அல்லது தமது மக்களின் திருமணங்களையோ கொண்டாடுவதற்கு அரசு ஊழியர்களுக்கும்—அரசிதழ் பதிவு பெற்ற, பதிவு பெறுதவர்கள்—மற்றும் கடைநிலை அரசு ஊழியர்கள் ஆகியவர்களுக்கு இக்கடன் வழங்கப்படும். அரசு ஊழியரின் சொந்தத் திருமணத்திற்காகவே கடன் தேவையானால் அந்த ஊழியரின் தந்தை அல்லது தாயார் அரசு ஊழியராக இருக்கக் கூடாது. அவர் அரசு ஊழியராக இருந்தால்அவர் கடன்பெறும்தகுதியுடைமையில்லாதவராகவோ அல்லது கடனைக்கோரி விண்ணப்பம் செய்யாதவராகவோ இருத்தல் வேண்டும்.

(2) கடன் தொகை

பதினைந்து திங்கள் ஊதியம்அல்லது ரூபாய் சுராயிரம் ஆகியவற்றுள்எது குறைவாயுள்ளதோ அந்தத் தொகையே கடனாக அளிக்கப்படும்.

(3) தகுதி

(அ) தொடர்ந்த பணியிலிருக்கும் அரசு ஊழியர்கள் இந்தக் கடனைப் பெறத் தகுதியுடையவராவர். மேலும் இக்கடனைக் கோரி விண்ணப்பம் செய்யும் காலத்தில் அவர் ஐந்தாண்டுகளுக்குக் குறைவில்லாது அரசுப் பணியில் சேவையாற்றியவராக இருத்தல் அவசியம். படிகளுடன் கூடிய ஊதியமில்லாத விடுப்பிலிருக்கும் அரசு ஊழியர்களைத் தவிர ஏனைய அரசு ஊழியர்கள் அனைவரும் இக்கடனைப் பெறத் தகுதியுடையவராவர். அரசு ஊழியரின் மனைவி/கணவர் அல்லது அவருடைய தந்தை அல்லது தாயாரும் அரசு ஊழியராக இருப்பின் அவர்களில் ஒருவர் மட்டுமே அக்குடும்பத்தில் நடைபெறவிருக்கும் ஒரு திருமணத்திற்குக்கடன் பெறத் தகுதியுடையவராவார்.

(ஆ) ஓர் அரசு ஊழியருக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டு, இக் கட

னுக்குரிய தவணைத் தொகையை மாதச் சம்பளப்பட்டியலிலிருந்து கழித்தபின், அவர் 'வீட்டுக்கு எடுத்துச் செல்லும் ஊதியம்' மொத்த ஊதியத்தில் 25 சதவீதத்திற்குக் குறைவாக இருக்கும் நிலை அவருக்கு ஏற்படின், அவர் இக்கடனைப் பெறத் தகுதியுடையவராகமாட்டார்.

குறிப்பு: அரசு ஊழியர் பெறும் ஊதியம் மற்றும் படிகளிலிருந்து, வசூலிக்கப்பட வேண்டிய தொகைகள் அனைத்தையும் கழித்த பிறகு, எஞ்சி நிற்கும் தொகையே ''வீட்டிற்கு எடுத்துச் செல்லும் ஊதியம்'' எனப்படும்.

(இ) ஏற்கனவே திருமணத்திற்கென்று வழங்கப்பட்ட கடனுக்குரிய தவணைகள் எஞ்சி நின்று, அவை வசூலிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போது இரண்டாவது அல்லது அதற்கும் மேலாக எந்தக் கடனும் வழங்கப்படமாட்டாது.



(ஈ) கைவசமிருக்கக்கூடிய நிதிகளைப் பொறுத்துத் தான் கடன் அனுமதிக்க இயலும். இந்தக் கடனைக்கொடுக்கத்தான் வேண்டுமென்றோ அல்லது அதைப் பெற உரிமையிருக்கிறதென்று எண்ணி அதைக் கேட்கவோ முடியாது.

(4) விண்ணப்பம் செய்தல்

(அ) இவ்விதிகளின் பிற்சேர்க்கையிலுள்ள படிவம் 1இல் கடனைக்கோரி விண்ணப்பம் செய்ய வேண்டும். இவ்விண்ணப்பம் இருபடிகளில் இருக்க வேண்டும். ஊழியர், தாம் பணியாற்றும் அலுவலகத்தின் வாயிலாக நிதித்துறைக்கு அவற்றை அனுப்ப வேண்டும். இவ்விதிகளின் பிற்சேர்க்கையிலுள்ள உடன்படிக்கைப்படிவம் 2 ஐயும் விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தின் படியொன்றை முன்னதாகவே, நிதித் துறையின் அரசுச் செயலாளருக்கு அனுப்பிவிட வேண்டும்.

(ஆ) திருமணத்திற்கு ஆறு திங்கள் முன்பாகக் கடன்கோரும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(இ) தற்காலிகமாக வேலையிலிருந்து தள்ளி வைக்கப்பட்டுள்ள அரசு ஊழியரிடமிருந்து விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் தற்காலிகமாக வேலையிலிருந்து தள்ளி வைக்கப்பட்டுள்ள நிலையிலிருக்கும் அரசு ஊழியருக்குக் கடன் அனுமதிக்கவோ அல்லது அந்தக் கடனைக் கொடுக்கவோ கூடாது. தவிர ஓர் அரசு ஊழியரின் மீதுபெரும் குற்றச்சாட்டுகளிலிருந்து அவற்றால் அந்த ஊழியர் வேலையிலிருந்து நீக்கப்படுவார் அல்லது தள்ளப் படுவார் அல்லது ஓய்வு பெறக் கட்டாயப்படுத்தப் படுவார் என்ற நிலையில் இருந்தாலும் அவருக்குக் கடன் கிடையாது.

(5) பிணைப்பு

கடன் பெறுபவர் தன்னுடைய சொந்த முறையில் எழுதிக்கொடுக்கப்பெற்ற உறுதி மொழிப் பத்திரத்தையும், இவ்வாணையின் பிற்சேர்க்கையிலுள்ள படிவம் 3இல் மற்றொரு நிலையான அரசு ஊழியர் பிணைப்பாக நின்று எழுதித் தந்த உறுதி மொழியினையும் கொடுத்த பிறகே கடன் வழங்கப்படும்.

(6) வட்டி

வருங்காலச் சேமிப்பு நிதியிலிருந்து அவ்வப்போது பெறப்படும் கடனுக்கு வசூலிக்கப்படும் அதே வட்டி விகிதம் தான் இதற்கும் வசூலிக்கப்படும்.

(7) கடனை அளித்தல்

(அ) எந்த ஒரு திருமணத்திற்காகக் கடன் வழங்கப்படுகிறதோ அந்தத் திருமணம் கொண்டாடப்படும் நாளைக்கு இரு திங்களுக்கு முன்பாகக் கடன் கொடுக்கப்படும்.



(ஆ) விண்ணப்பித்தவரின் நிலையைக் கடந்தும் அவரது கட்டுப்பாட்டிற்குட்படாத காரணங்களினாலும், அவருக்குக் கடனைப் பெற்று அளிக்க இயலாவிடில், ஏற்கெனவே அவருக்கு அனுமதிக்கப்பட்ட கடனைத் திருமணம் முடிந்த பின்னரும் அவருக்குக் கொடுக்கலாம்.

(8) திரும்ப வசூலித்தல் :

(அ) 60 திங்களுக்கு மேற்படாது, சமமான தவணைகளில் கடனின் அசல் தொகை மட்டும் வசூலிக்கப்படும். அரசு ஊழியர் ஓய்வு பெறுவதற்கு முன்பே கடனும் அதற்குரிய வட்டியும் சேர்த்து வசூலிக்கப் பட்டுவிடும் வகையில், தவணைகள் ஒழுங்குபடுத்தப்படும். முழு ரூபாய்களுக்குக் கணக்கிடப்பட்டுக் கடன் திரும்பப் பெறப்படும். அரசு ஊழியர் வேலையிலிருந்தாலும், அல்லது விடுப்பிலிருந்தாலும் அவருடைய ஊதிய அல்லது விடுப்புச் சம்பளப் பட்டியல் தொகையிலிருந்து இக்கடன் தவணைகள் கட்டாயமாக வசூலிக்கப் பட்டுவிடும்.

* * *

(நிதித் துறையின் 1—4—69 ஆம் நாளிட்ட ஆணை எண் 311இல் திருமணக் கடன் வசதியளிக்கப்பட்டு, அதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. அந்த ஆணையில் 11 விதிகளும், பிற்சேர்க்கையில் பல படிவங்களும் உள்ளன. அவற்றில் சிலர் முக்கியமான பகுதிகளையே மொழி பெயர்த்து மேலே அளித்துள்ளோம். ஏனையவற்றை ஆணையிலேயே காண்க. — ஆசிரியர்



நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி
Parry's
ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதராஸ்-1.
உரங்கள் ● பூச்சி நாசினிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை




## ஊராட்சி வளர்ச்சி மானியங்கள்

*ஊராட்சி வளர்ச்சி - 1969-70ஆம் ஆண்டுக்குரிய மானியங்களை முறைப்படுத்தல், வழியுரைக்கும் விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன.*

*1969-70ஆம் ஆண்டில், ஊராட்சி ஒன்றியங்களின் பல்வேறு திட்டங்களில் ஏற்படும் செலவினங்களுக்குத் தேவையான வழியுரைக்கும் விளக்க ஆணைகள், கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1968ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 1237இல் பிறப்பிக்கப்பட்டன. (இவ்வாணையின் தமிழாக்கத்தை 1968ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் "கிராம நலம்" இதழில் காண்க). ஊராட்சி ஒன்றியங்களுக்கான செலவினங்களை 1969-70ஆம் ஆண்டு முழுதுக்கும் முறைப்படுத்துவதற்குத் தகுந்த விளக்க ஆணைகள் பிறப்பிக்க வேண்டியது பற்றி அரசு பரிசீலனை செய்தது.*

*2. அதற்கேற்ப 1969-70ஆம் ஆண்டுச் செலவினங்களை முறைப்படுத்துவதற்கு, 1960ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 16ஆம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, மற்றும் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 25-1-1961 நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுடன் இவ்வாணையின் இணைப்பிலுள்ள விளக்கக் குறிப்புகளும் சேர்த்துப் பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.*

*3. பல்வேறு திட்டங்களுக்கென 1969-70ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளை, முடிவு பெறாத வேலைகளை முழுவதுமாக நிறைவேற்றவே பயன்படுத்த வேண்டும். 26-3-1969 நாளிட்ட குறிப்பாணை எண். 51936/p1/68. 1,2இல் உள்ள விளக்க ஆணைகள் பின்பற்றப்படவேண்டும்.*



**இணைப்பு**

**விளக்கக் குறிப்புகள் :**

பிரிவு I-உள்ளூர் வருவாய் - சாதாரணமானவை.

*1. உள்ளூர்ச் செஸ்வரி 2. உள்ளூர் மேல் வரி 3. பதிவுப்பத்திர மேல் வரி 4. கேளிக்கை வரி, மற்றும் காட்சி வரியின்மீது மேல் வரி 5. கிராம வீட்டு வரி 6. உள்ளூர்ச் சிறிய வருவாய்கள்.*

*1969-70ஆம் ஆண்டிற்கு மேற்கண்ட வருவாய் மற்றும் மானியங்களை முறைப்படுத்த 1960ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16ஆம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1961ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 211, மற்றும் அவற்றின் பின் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் அனைத்தும் பின்பற்றப்படவேண்டும்.*

பிரிவு II: அரசு மானியங்கள் (சட்டத்தில் வருபவை)

*7. நிலவரி ஒதுக்கீடு (சட்டத்தில் வருபவை)*

*8. உள்ளூர்க் கல்வி மானியம்.*

*9. உள்ளூர்ச் செஸ் மேல் வரி இணைப்பு மானியம்.*

*10. உள்ளூர்ச் சாலைகள் மானியம்.*

*11. கிராம வீட்டு வரி இணைப்பு மானியம்.*

*1969-70ஆம் ஆண்டுக்கு மேற்கண்ட மானியங்களை முறைப்படுத்த 1960ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16ஆம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, மற்றும் கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின்*

1961ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப் பட்டுள்ள ஆணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

பிரிவு III: அரசு மானியங்கள் (திட்டத்தில் வராதவை)

12. கல்வித் துணை மானியம்.

13. ஆசிரியர்களின் அகவிலைப்படிக்குரிய சிறப்பு மானியம்.

14. மதிய உணவு மானியம்.

1969-70 ஆண்டிற்கு மேற்கண்ட மானியங்களை முறைப்படுத்த, தற்போதுள்ள விளக்க ஆணைகள் பின் பற்றப்படவேண்டும்.

15. சமூகக் கல்வி மானியம்:

1969ஆம் ஆண்டில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு இம்மானியத்தின்கீழ் ஏற்படும் செலவு ரூ. 4,400 (ரூபாய் நான்காயிரத்து நானூறு) இருக்க வேண்டும். கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1966ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10ஆம் நாளிட்ட அரசு ஆணை 2604இல் பிறப்பிக்கப் பட்டுள்ள ஆணைகளுக்கு ஏற்ப, 1969-70 ஆண்டிற்கும் திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

16. மகளிர், சேய் நல மானியம்:

இந்த மானியத்திற்கான ஆணைகள் தனியாக அரசாங்கத்தின் சமூக நலத்துறையிலிருந்து பிறப்பிக்கப் படும்.

17. கிராம வேலைகள் மானியம்:

(அ) இணைப்புச்சாலைகள்

1969-70ஆம் ஆண்டில், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு, இம் மானியத்தின் கீழ் இணைப்புச் சாலைகளுக்காகும் செலவுகள் ரூ. 21,500க்குள் (ரூபாய் இருபத்தோராயிரத்து ஐந்நூறு மட்டும்) இருக்க வேண்டும். அரிசனங்கள் மற்றும் இதர பின் தங்கிய வகுப்பினரின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் இணைப்புச்சாலைகளுக்காகும் செலவில் 10 சதவீதத்தை, அரிசன நலத்துறை அளிக்கவேண்டும் என்று கிராம வளர்ச்சி, உள்ளாட்சித்துறையின் 1964ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 1414இல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இந்த ஆண்டிற்கும் பொருந்தும்.

(ஆ) குடிநீர் விநியோகம்

சாதாரணக் கிணறு வேலைகள், குழாய்மூலம் குடிநீர் விநியோகம் ஆகியவற்றிற்கு 1969-70ஆம் ஆண்டில் ஓர் ஒன்றியத்திற்கு ஏற்படும் செலவுகள் முறையே ரூ. 8,600 (ரூபாய் எண்ணாயிரத்து அறுநூறு), ரூ. 19,340 (ரூபாய் பத்தொன்பதாயிரத்து முன்னூற்று நாற்பது)க்குள் இருக்கவேண்டும். அரிசனங்கள் மற்றும் பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் குடிநீர் வேலைகளுக்கு ஏற்படும் செலவில் 15 சதவீதத்தை, அரிசன நலத்துறை வழங்க வேண்டுமென்று கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 1414இல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இதற்குப் பொருந்தும்.

(இ) பள்ளிக் கட்டடங்கள்

ஓர் ஒன்றியத்திற்கு 1969-70ஆம் ஆண்டிற்கு ஏற்படும் செலவு ரூ. 13,260 (ரூபாய் பதிமூன்றுயிரத்து இருநூற்று அறுபது மட்டும்) இருக்க வேண்டும். இவ்வாணையின் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலையை கடந்த வட்டாரங்களுக்கு (இணைப்பில் பிற்சேர்க்கை) ஏற்படும் செலவுகள் (28. Education—L. Development Schemes—Schemes in the Fourth Five year plan I. State Schemes III primary—(iii) Grants to Local Bodies—G. Educational Grants to post stage II Blocks) என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப் படவேண்டும்.

கிராம வேலைகள் மானியத்திலுள்ள நிதி ஒதுக்கீட்டில் 20 சதவீதம் அரிசனங்களின் நன்மைக்குரிய வேலைகளில்மட்டும் செலவிடப்படவேண்டும்.

18. உள்ளூர்ப் பாசன மானியம்:

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964ஆம்ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 13ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 1681இல் பிறப்பிக்கப் பட்ட ஆணைகளின்படி, இந்த மானியத்திற்குரிய செலவுகள்முறைப் படுத்தப்படவேண்டும்.



19. வேளாண்மை மானியம்:

கீழ்க்காணும் திட்டங்களுக்குரிய செலவினங்கள், அவற்றின் கீழே குறிப்பிட்ட தொகைக்குள் இருக்க வேண்டும்.

1. வேளாண்மைத் திட்டங்கள்:

ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 20,160 (ரூபாய் இருபதாயிரத்து நூற்று அறுபது).

2. கால்நடைப் பராமரிப்புத் திட்டம்:

ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 6,100 (ரூபாய் ஆறு ஆயிரத்து நூறு மட்டும்).

3. மீன்வளம்:

மீன்வளத் திட்டங்களுக்கான செலவுகளை முறைப்படுத்துவதற்குரிய ஆணைகள் அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையால் தனியே பிறப்பிக்கப்படும்.

20. மகப்பேறு நிலையங்கள் நிர்வகிப்பு மானியம்:

21. மருந்தகங்கள் நிர்வகிப்பு மானியம்:

இம்மானியங்களை முறைப்படுத்தத் தற்போதுள்ள ஆணைகள் பின்பற்றப் படவேண்டும்.

பிரிவு IV—உள்ளூர் வருவாய் (சிறப் பானவை

22. உள்ளூர்ப் பாசனக்கட்டணம்.

23. கிராம வளர்ச்சி விகிதங்கள்.

24. தன்னிச்சையாக அளிக்கும் வளர்ச்சி நன்கொடைகள்.

மேற்கண்ட வருவாய் ஆதாரங்களை முறைப்படுத்த 1960ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16ஆம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664 மற்றும் உள்ளாட்சித் துறையில் 1961ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் பின்பற்றப்படவேண்டும்.

பொதுவானவை

சில ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகள் சற்றுக் கூடுதலாகவே இருக்கலாம். அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளை நிறைவு செய்ய, அக்கோட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டை, அக்கோட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களிடையே தாம் விரும்பியபடி, வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மறு நிதி ஒதுக்கீடு செய்யலாம். ஆனால் இந்த மறு நிதி ஒதுக்கீடானது அக் கோட்டம் முழுவதற்கும் தொடர்புள்ள திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டிற்கு மேற்படக்கூடாது. அதே போன்று மாவட்ட அளவில், சம்பந்தப்பட்ட திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டை, அந்த மாவட்டத்திற்கு அந்தத் திட்டம் முழுவதற்குமுள்ள நிதி ஒதுக்கீட்டிற்குள் மறு நிதி ஒதுக்கீடு செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாற்றங்கள் செய்கையில் சமுதாய வளர்ச்சித் திட்டத்திலுள்ள முதல் நிலை, இரண்டாம் நிலை வட்டாரங்கள் ஒரு புறத்திலும், இரண்டாம் நிலை வட்டாரங்கள் மறுபுறத்திலும் தனித்தனியே உள்ளவாறு மறு நிதி ஒதுக்கீட்டைத் தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களின் பெயர்களைப் பிற்சேர்க்கையில் காண்க. பல்வேறு திட்டங்களுக்குரிய செலவினங்கள் பற்று வைக்கப்படவேண்டிய கணக்குத் தலைப்புகள், கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தின் குறிப்பாணை எண் 52161 கணக்கு 1/69 நாள் 8-4-1969ன்படி இருக்கவேண்டும்.

இணைப்பிற்குரிய பிற்சேர்க்கை:

1969-70இல் இரண்டாம் நிலையைக் கண்ட வட்டாரங்கள்பட்டியல்

1. செங்கற்பட்டு மாவட்டம்

1. திருக்கழுக்குன்றம்
2. பூண்டி
3. திருவள்ளூர்
4. கடம்பத்தூர்
5. பள்ளிப்பேட்டை
6. எல்லாபுரம்
7. ஸ்ரீபெரும்புதூர்
8. பூவிருந்தவல்லி
9. மதுராந்தகம்
10. பரங்கிமலை
11. மீஞ்சூர்
12. காட்டான் குளத்தூர்
13. உத்திரமேரூர்
14. குன்னத்தூர்

2. வட ஆர்க்காடு மாவட்டம்

15. கலசப்பாக்கம்
16. துரிஞ்சாபுரம்
17. கீழ்ப்பெண்ணத்தூர்
18. போளூர்
19. கே. வி. குப்பம்
20. சேத்துப்பட்டு
21. ஆர்க்காடு
22. வேம்பாக்கம்
23. பெரணமல்லூர்
24. திருப்பத்தூர்
25. ஆரணி
26. வாலாஜா
27. சோளிங்கபுரம்
28. காவேரிப்பாக்கம்

3. தென் ஆர்க்காடு மாவட்டம்

29. கீரப்பாளையம்
30. மேல்புவனகிரி
31. பண்ருட்டி
32. குறிஞ்சிப்பாடி
33. சின்னசேலம்
34. மேலமலையனூர்
35. கள்ளக்குறிச்சி
36. செஞ்சி
37. மங்களூர்
38. உளுந்தூர்ப்பேட்டை
39. மரக்காணம்
40. திருநாவலூர்
41. கோலியனூர்
42. காணை

4. தஞ்சாவூர் மாவட்டம்

43. திருத்துறைப்பூண்டி
44. வேதாரணியம்
45. தலைஞாயிறு
46. அம்மாபேட்டை
47. வலங்கைமான்
48. கொள்ளிடம்
49. சீர்காழி
50. திருப்பனந்தாள்
51. மாயூரம்
52. செம்பனார்கோவில்
53. குத்தாலம்
54. கும்பகோணம்
55. திருவிடைமருதூர்
56. பாபநாசம்
57. முத்துப்பேட்டை
58. பட்டுக்கோட்டை
59. ஒரத்தநாடு
60. ஆவுடையார்கோவில்
61. நாகப்பட்டினம்
62. கீவளூர்
63. குடவாசல்

5. திருச்சிராப்பள்ளி மாவட்டம்

64. கே. பரமத்தி
65. வேப்பந்தட்டை
66. முசிறி
67. தாத்தையங்கார்ப்பேட்டை
68. திருவரங்குளம்
69. அரவக்குறிச்சி
70. தொட்டியம்
71. திருமானூர்
72. பெரம்பலூர்
73. துறையூர்
74. அரியலூர்
75. லால்குடி
76. குளித்தலை
77. தாந்தோனி
78. உப்பிலியாபுரம்

6. மதுரை மாவட்டம்

79. மதுரை (கிழக்கு)
80. மேலூர் (வடக்கு)
81. வாடிப்பட்டி
82. அலங்காநல்லூர்
83. ரெட்டியார் சத்திரம்
84. ஆத்தூர்
85. மேலூர் (தெற்கு)
86. மதுரை (மேற்கு)
87. உசிலம்பட்டி
88. செல்லம்பட்டி
89. திருமங்கலம்
90. கள்ளிக்குடி
91. டி. கல்லுப்பட்டி
92. சேடப்பட்டி
93. திண்டுக்கல்
94. போடிநாயக்கனூர்
95. பழனி
96. ஆண்டிப்பட்டி
97. வத்தலக்குண்டு
98. நத்தம்
99. திருப்பரங்குன்றம்

7. இராமநாதபுரம் மாவட்டம் :

100. ஸ்ரீவில்லிபுத்தூர்
101. சிவகாசி
102. வத்திராயிருப்பு
103. இராஜபாளையம்
104. சிங்கம்புனேரி
105. கண்ணங்குடி
106. இராஜ சிங்க மங்கலம்
107. திருவாடனை
108. காளையார்கோவில்
109. தேவகோட்டை
110. கமுதி
111. விருதுநகர்
112. காரியப்பட்டி
113. கல்லல்



114. மானாமதுரை
115. கடலாடி
116. முதுகுளத்தூர்
117. சாத்தூர்
118. பரமக்குடி
119. வெம்பக்கோட்டை

8. திருநெல்வேலி மாவட்டம் :

120. பரமக்குடி
121. சேரன்மாதேவி
122. சங்கரன்கோவில்
123. மேலநீலித நல்லூர்
124. குருவிக்குளம்
125. கோவில்பட்டி
126. வள்ளியூர்
127. இராதபுரம்
128. மானூர்
129. ஆலங்குளம்
130. கருங்குளம்
131. சாத்தான்குளம்
132. வாசுதேவநல்லூர்
133. தூத்துக்குடி
134. ஒட்டப் பிடாரம்

9. கன்னியாகுமரி மாவட்டம் :

135. அகஸ்தீஸ்வரம்
136. முன்கிறை
137. மேல்புரம்
138. கிள்ளியூர்
139. குத்தன்கோடு
140. இராஜக்காமங்கலம்

10. நீலகிரி மாவட்டம் :

141. உதகமண்டலம்
142. குன்னூர்
143. கோட்டகிரி
144. கூடலூர்

11. கோயம்புத்தூர் மாவட்டம் :

145. சத்யமங்கலம்
146. கோபிசெட்டிபாளையம்
147. ஈரோடு
148. பெருந்துறை
149. கொடுமுடி
150. மொடக்குறிச்சி
151. துக்கநாயக்கன்பாளையம்
152. பல்லடம்
153. சுல்தான்பேட்டை
154. திருப்பூர்
155. பொங்களூர்
156. காங்கேயம்
157. வெள்ளக்கோவில்
158. குண்டடம்
159. தாராபுரம்
160. அவினாசி
161. சூலூர்
162. பவானி
163. கிணத்துக்கடவு
164. பவானிசாகர்
165. பெரியநாயக்கன்பாளையம்
166. தளவாடி
167. மூலனூர்

12. சேலம் மாவட்டம் :

168. கங்கவல்லி
169. தலைவாசல்
170. பெத்தநாயக்கன்பாளையம்
171. ஆத்தூர்
172. கொளத்தூர்
173. நாமகிரிப்பேட்டை
174. நங்கவல்லி
175. மேச்சேரி
176. இடைப்பாடி

13. தர்மபுரி மாவட்டம் :

177. கிருஷ்ணகிரி
178. வேப்பனப்பள்ளி
179. காவேரிப்பட்டினம்
180. பருகூர்
181. பெண்ணகரம்
182. ஊத்தங்கரை
183. மொரப்பூர்
184. ஹோசூர்
185. தர்மபுரி

கீழ்க்குறிப்பிட்ட வட்டாரங்களைப் பொருத்த வரையில், கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகள் பின்பற்றப்படவேண்டும்.

| | |
|---|---|
| 30-9-1969வரை | முதல் நிலை<br>இரண்டாம் நிலை வட்டாரங்களுக்குரிய தலைப்புக்கள். |
| 30-9-1969க்குப் பிறகு (அதாவது 1-10-1969 தொடக்கம்) | இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களுக்குரிய கணக்குத் தலைப்புக்கள். |

16046

| மாவட்டம் | ஊராட்சி |
|---|---|
| செங்கற்பட்டு | காஞ்சீபுரம் |
| வட ஆர்க்காடு | கனியம்பாடி |
| தென் ஆர்க்காடு | தியாக துர்க்கம் |
| தஞ்சாவூர் | கோட்டூர் |
| திருச்சிராப்பள்ளி | கரம்பக்குடி |
| மதுரை | நிலக்கோட்டை |
| இராமநாதபுரம் | மண்டபம் |
| திருநெல்வேலி | செங்கோட்டை |
| கோயம்புத்தூர் | உடுமலைப்பேட்டை |
| சேலம் | வாழப்பாடி |

*(கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 29-4-1969 நாளிட்ட அரசு ஆணை எண் 805ன் சுருக்கம்)*

அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க :

பயிர்நாசக் கிருமிகளினின்றும் பயிர்களைக் காப்பாற்ற :

பூச்சி மருந்து தெளிக்கவும் தூவவும்

ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)

தூவு கருவிகளும் (Dusters)

**மிகச் சிறந்த சாதனங்கள்**




CODE MB-1/VL

தயாரிப்பவர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸிங் ஒர்க்ஸ்
(பிரைவேட்) லிமிடெட்.,
மலாட், பம்பாய் 64 N.B.

மைசூர், சென்னை மாநில விநியோகஸ்தர்கள் :

**S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்**

| தலைமை அலுவலகம்: | கிளை அலுவலகம் : |
|---|---|
| தொலைபேசி எண் 75071 | தொலைபேசி எண் 81227 |
| 75, கலாசி பாளையம் | 38, பீட்டர்ஸ் ரோட் |
| தபால் பெட்டி எண் 539 | தபால் பெட்டி எண் 677 |
| நியூ எக்ஸ்டென்ஷன்ஸ் பெங்களூர்-2 | இராயப்பேட்டை, சென்னை-14 |


*தமிழ்நாடு அரசுக்காக, அரசு எழுதுபொருள்-அச்சக இயக்குனரால் பி.எல்.எஸ். அச்சகத்தில் (65/1 ஆர்க்காடு சாலை, சென்னை-24) அச்சிடப்பட்டு, கிராம வளர்ச்சித்துறை இயக்குனரால் வெளியிடபடுகிறது.*
ஆசிரியர் : திரு. சு. செல்லப்பன், எம்.ஏ.,பி.டி.

# அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம் குடும்ப நல திட்டத்தின் சின்னம்

## குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

REGD. No. M. 7277

© தமிழ் நாடு அர


# Slanes

**தைப் பட்டத்தில் அமோக விளைச்சலும், பெருகிய லாபமும் பெற**

## கோல்டு ஸீட் (GOLD SEED) வீரிய விதைகள்

1. வீரிய ஒட்டுச் சோளம் CSH-1
2. வீரிய ஒட்டுக் கம்பு HB-1
3. வீரிய ஒட்டு மக்காச் சோளம் — டெக்கான் [illegible]

**விதை உற்பத்தியாளர்கள் :**

தந்தி: "கோல்டு ஸீட்"

போன் : 30412

கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,

**பேரூர் அஞ்சல், கோயமுத்தூர்-10.**

**உங்களது விதைத் தேவைக்கும், விவரங்களுக்கும் :**

டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட்,

**(உர இலாகா), தபால் பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18**

*(அல்லது)*

**ஸ்டேன்ஸ் உரத் தொழிற்சாலைகள் :**

| | | | |
|---|---|---|---|
| வளவனூர்,<br>விழுப்புரம்,<br>போன்-25 | துடியலூர்,<br>போன் : 25385<br>CBE | ஆவணியாபுரம்<br>மதுரை,<br>போன் : 5533 | தச்சநல்லூர்<br>திருநெல்வேலி,<br>போன் : 1125 |

**குறிப்பு :** மக்காச்சோள விதைகள் இருப்பு தீர்ந்து, வருகிற பிப்ரவரி-மார்ச்சில் விநியோகத்துக்கு வரும். சோளம் (CSH-1) கம்பு (HB-1) இருப்பு விரைவில் குறைந்து வருவதால், தேவைக்கு உடனே எழுதவும்.